# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஜனவரி 08 - 14, 2014 பக்கம் - 24












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Multilac®

PREMIUM PAINTS

MACKSONS PAINTS WORLDWIDE




25 அதிர்ஷ்டசாலிகள்

## மீண்டும் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி

கப்பல் மற்றும் விமானப் பயணச்சீட்டு இலவசம்

உணவு மற்றும் தங்குமிடம் வசதி இலவசம்

4 நாட்கள், 3 இரவுகள் சவாரி

கைச்செலவுக்கு 250 சிங்கப்பூர் டொலர்

**வெற்றிப்பெற நீங்கள் செய்யவேண்டியது**

மல்டிலெக் பிரீமியம் இமல்ஷன், மல்டிலெக் வெதர்காட், மல்டிலெக் வோட்டர் புருவிங் சீலர், மல்டிலெக் நொன் யெலொவிங் எனமல் பிரிலியன்ட் வைட், மல்டிலெக் சிங்கப்பூர் ஷேட்ஸ் அல்லது அறிமுகப்படுத்தப்பட்ட புத்தம் புதிய மல்டிலெக் ப்ளேட்டினம் பெயின்ற் வகைகளில் 4 லீற்றர்களைக் கொள்வனவு செய்யுங்கள். விற்பனை முகவரிடம் இருந்து பெற்ற பரிசுக்கூப்பனை நிரப்பி, மேலுறைகளுடன், மல்டிலெக் பெயின்ற் கொள்வனவு செய்த பற்றுச் சீட்டையும் இணைத்து இன்றே அனுப்பி வையுங்கள்.

மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி, த.பெ. இல.2024, கொழும்பு.

மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி
போட்டிக் காலம் 2013 நவம்பர் 01 முதல் 2014 ஜனவரி 15 வரை




www.multilac.com Hotline 0772 222555

லீற்றர் ரூபா 755/- முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 17

தமிழ் நாட்டில் இருந்த போராளிகளுக்கு அரசியல் பாடங்களை பாலா நடத்த வேண்டும் என்று தீர்மானமாயிற்று. இதற்காக விடுதிக்கு இளைஞர்கள் வருவதும் போவதுமாக இருந்தால், அது கவனத்துக்கு உள்ளாவதோடு சந்தேகத்தையும் தோற்றுவிக்கும் என்பதால், வகுப்புக்களை நடத்த, விடுதி ஒரு பொருத்தமான இடமாகப் படவில்லை. தமிழ் நாட்டு சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன் அவர்களுடைய பிரத்தியேக வாழ்மனைக் கூடத்திலே வகுப்புக்களுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டது. இறுதியில், விடுதியை விட்டு, எம்.எல்.ஏ.யின் தொடர் இல்லத்தில் குடியேற்றப்பட்டோம். கருணாநிதி அவர்களுடைய மாநில அரசின் சட்ட மன்ற உறுப்பினரும் வேளாண்துறை அமைச்சருமான காளிமுத்து அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவி புரியும் இன்னொருவர். அங்கே இருக்கும் போது அவரையும் சந்தித்தோம். மேலும் ஒருவர் புலமைப்பித்தன்; புகழ் பெற்றவர்; அலையலையாக சுருண்ட, நரைநிறைய தூய முடி; நரை ஓடிய கொடுவாள் மீசை. வரும் விடுதலைப்புலிகளின் பலமான ஆதரவாளர் . இரண்டு தடவை அவருடைய வீட்டுக்குப் போயிருக்கிறோம்.



பாலா நடத்திய பாடங்களில் சமூக அரசியலும் உளவியல் தத்துவங்களும் அடிப்படையாக நன்கு இழையப்பட்டிருக்கும். சமகால தேசிய விடுதலைப் போரட்டங்களின் விளக்கம் இருக்கும்; சோஷலிச தத்துவங்களும் அரசியல் எண்ணக் கருக்களும் துலக்கப்பட்டிருக்கும்; மேற்குலக சமுதாய வடிவத்தை பிரதிபலிக்கும் வர்க்க அமைப்புக்கும் இந்தியா, சிறீலங்கா போன்ற தெற்காசிய சமூகங்களின் சாதி அமைப்புக்கும் உள்ள வேறுபாடுகள் தெளிவு படுத்தப் பட்டிருக்கும்; மேற்குலக சமுதாய சிந்தனையாளர் வரையறை செய்த "சமுதாயம்" என்பதன் வெவ்வேறு எண்ணக்கருக்கள் எடுத்துரைக்கப்பட்டிருக்கும். பாலியல் பண்புகள் பற்றிக் கூடுதலாக அறிந்து கொள்வதில் சில இளம் போராளிகள் ஆர்வம் காட்டிய போது சிக்மண்ட் பிரைட்டின் கோட்பாட்டின் அடிப்படையில் பாலா அதற்கென சில வகுப்புக்கள் நடத்தினார்.

சோஷலிச தத்துவம் மட்டில் பல போராளிகளுக்கு உள்ளார்ந்த பற்று இருந்தது. ஆனாலும் யாரும் மாக்சிய நிலைப்பாட்டை என்றும் தழுவியதில்லை. மாக்சிய புரட்சியாளர்கள் என்ற அந்த மாமூல் தோற்றம் கூட இவர்களில் இல்லை. இளம் புரட்சியாளர் என்ற ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற அமைப்புக்களில் இருந்தவர்களைப் போல, இவர்களில் எவரையும் வர்ணிக்க முடியாது. இவர்கள் எவரும் நீண்ட தாடியுடனோ , அழுக்கான உடைகளுடனோ அவர்களைப் போல நடமாட முடியவில்லை. அப்படிப்பட்ட தோற்றம் பிரபாகரனுக்கு சகிக்க முடியாத ஒன்று. முன்னர் குறிப்பிட்டது போல, கச்சிதமான உடை ஆகியவற்றில் அவர் கண்டிப்பானவர். தம்முடைய போராளிகளிடமும் இதே தரங்களை ஊட்டுவார். குறிப்பாக, மூத்த உறுப்பினர்கள் இதில் முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்று எதிர்பார்ப்பவர். உடலையும் உடையையும் மிகவும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பது இராணுவ அமைப்பின் எதிர்பார்ப்பும் கூட. வெளித்தோற்றத்தில் அசட்டையாகவும் அழுக்காகவும் காட்சியளித்து தம்மை முற்போக்கான புரட்சியாளர் என பாசாங்கு செய்வதை விட சுத்தமாக இருத்தல் இயற்கைக்கு இசைவானது மட்டுமன்றி உடல் நலத்திற்கும் அவசியமானது அல்லவா?

இதையெல்லாம் விட, காலப்போக்கில் வேறொன்றை ஆழமாக உணர்ந்தோம். அதாவது, தமிழ் மக்களின் சமூக கட்டமைப்பில் மாக்சியம் பெருமளவு எடுபடவில்லை என்பதே அது. அங்கே சமயம், குறிப்பாக இந்துசமயம் தமிழ் மக்களின் சமூக கலாசார வாழ்க்கையின் தத்துவமாக பதிந்திருந்தது. ஒரு சமூக, அரசியல் கோட்பாடாகவே மாக்சியத்தை விடுதலைப் புலிப் போராளிகளுக்கு பாலா அறிமுகப்படுத்தியிருந்தார். மாக்சிய சிந்தனைகளை பயன்படுத்தி ஆயுதப் போராட்டமானது அரசியல் போராட்டத்தின் உயர்ந்த வடிவம் என்பதை விளக்கியிருந்தார். ஆனால் மாக்சியத்தில் கூட குறைபாடுகளும் அளவெல்லைகளும் இருந்தன. அது ஐரோப்பிய சூழலைத் தழுவிய தத்துவம் ஆதலால் அடிப்படையிலேயே வித்தியாசமான, வேறு சமூக அரசியல் சூழலுக்குத் தேவையான விளக்கங்களைத் தரக்கூடிய பொருத்தமான தத்துவார்த்த வடிகாலாக அது இருக்கவில்லை. எடுத்துக் காட்டாக, மாக்சிய சிந்தனைகளைப் பயன்படுத்தி, சாதிப்பின்னலோடு அமைந்த யாழ்ப்பாண சமுதாயம் தொடர்பான சமூகக் கட்டமைப்பு ஆய்வை நடத்துவது கடினம். அதைப் போலவே முதலாளித்துவமோ, மானிய முறையோ அல்லாத ஒரு சமூக அமைப்பில் வர்க்க அடுக்குகளைப் பொருத்திப் பார்ப்பது கடினம். அச்சடித்த முதலாளித்துவ வடிவமோ அன்றி மானிய பிரபுத்துவ வடிவமோ அங்கு இல்லை. உயர்சாதி 'வேளாளர்' என அழைக்கப்படும் நடுத்தர வர்க்கமோ அங்கு மேலோங்கி நிற்கின்றது.



மேலும், யாழ்ப்பாணத் தமிழரைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கென்று நம்பிக்கை முறைகளும் அரசியல் உள்ளுணர்வுகளும் உண்டு. எவ்வளவு தான் தத்துவப் பகுப்பாய்வுகளைப் முன் வைத்தாலும், அல்லது வலியுறுத்திக் கூறினாலும் அவர்களுடைய சிந்தனைப் போக்கை அவை இலகுவில் மாற்றப் போவதில்லை. ஆயுதப் போராட்டமானது சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் போராட்டம் என்பதை நியாயப்படுத்துவதற்காகவே விடுதலைப் புலிகள் தங்களது ஆரம்பகால வரலாற்று வளர்ச்சிக் கட்டத்தில் மாக்சிய - லெனினிச தத்துவங்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால் பின்னர் கொம்யூனிச ஆட்சி அமைப்புக்கள் தகர்ந்த போது மாக்சிய சிந்தனையை இயக்கம் கைவிட்டு, சமூக சமநிலைத் தத்துவத்தை இயக்கத்தின் சித்தார்ந்தமாக வரிந்து கொண்டது. தமிழத் தேசிய உணர்வு எழுச்சியே போராட்டத்தின் உந்து சக்தியாக விளங்கியது என்பதில் ஐயமே இல்லை.

சென்னையில் இந்தக் கலந்துரையாடல்களும் வகுப்புக்களும் நடைபேறும் போதெல்லாம் நான் அடிக்கடி வெளியே சென்று விடுவேன். போராளி ஒருவரை துணைக்கு அழைத்துக் கொண்டு சென்னை நகரக் காட்சிகளைச் சுற்றிப் பார்ப்பேன். இந்தியா, எனக்கு ஒரு புது அனுபவம். முற்றிலும் நேர்மாறான உலகமாகவே அது எனக்குத் தோன்றியது. கால அடைவில், இந்தியாவில் , குறிப்பாகத் தமிழ் நாட்டில் பல ஆண்டுகள் வாழ்ந்த பின், அந்த நாட்டையும் அதன் மக்களையும் நேசிக்கத் தொடங்கினேன். இலங்கை வடகிழக்குப் பகுதியில் இருந்து நான் 1999ல் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட போது, அடுத்து வசிக்க விரும்பும் இடத்தை தெரிவு செய்ய சர்ந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தால், லண்டனுக்குத் திரும்புவதற்குப் பதிலாக சென்னையையே தேர்ந்தெடுத்திருப்பேன்.

இந்தியாவிலே நான் 1979இல் இருந்து 1987 வரை வாழ்ந்தேன். அந்தக் காலம் முழுவதும் மேற்குலக அமைப்புக்கு நேர் முரணான வேறு ஒரு சமூக கலாசார சூழலிலேயே வாழ்ந்தேன். இரண்டுக்கும் இடையே உள்ள முரண்பாடுகள் எண்ணில் அடங்காதவை; சிக்கலானவை. அவற்றின் ஏற்ற தாழ்வுகளைப் பதிவு செய்ய முனைந்தால் அதுவே ஒரு தனி நூல் ஆகிவிடும். அங்கும் இங்குமாக ஒரு சில மனப் பதிவுகளையே இங்கு குறிப்பிடுகின்றேன்.

(பதிவுதொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூடுபிடித்துள்ள தென்சூடான் விவகாரம்

நீலன்

சூடானில் இருந்து தனிநாட்டுக்காக போராடிய போது,கூடி வாழ்ந்த தென்சூடானிய மக்களால் இப் போது ஒற்றுமையாக முடியவில்லை. சூடான் தனிநாடாக இருந்தபோது வடக்குக்கும் தெற்குக் கும் இடையில் பிரச்சினைகள் நீடித்தன. இறுதி யில் கூடி வாழ்வதை விட தனித்து வாழ்ந்தால் தான் நல்லதென வடக்கிலிருந்தவர்களும், தெற்கி லிருந்தவர்களும் தீர்மானித்தனர். அத்தோடு சூடா னிய மக்கள் கூடி வாழ்வதால் கிடைக்கும் நன்மையை விட தனித்தனியாக வாழ்வதால் கிடைக் கும் அனு கூலங்கள் அதிகமென உலக நாடுகளும் கருதின.

இதன் காரணமாகவே சர்வதேச சமூகத்தின் துணையுடன் சூடான் என்ற தேசத்தில் இருந்து தென் சூடான் என்ற புதிய நாடு பிரிந்து போனது. சூடா னில் வடக்குக்கு எதிராக தெற்கு முன்னெடுத்த ஆயுதப் போராட்டம், சர்வதேச மத்தியஸ்தத்து டனான சமரசப் பேச்சுவார்த்தை , அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள், கருத்துக் கணிப்பு. போன்ற பல படிமுறைகளுக்கு அமைய தென்சூடான் தனி நாடாக உருவாகும் வரையும் சகல விடயங்களும் சரியாகவே நடந்தேறின.

ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இன்று அதிகாரப்போட்டி காரண மாக தென் சூடான் சின்னாபின்னமடைந்துள்ளது. அங்கு இன நெருக்கடி தலைவிரித்தாடுகிறது. சிவில் போர் பற்றிய அச்சம் மேலோங்கியுள்ளது.

சில வாரங்களாக நீடிக்கும் வன்முறைகளில் குறைந்தது ஆயிரம் பேராவது கொல்லப்பட்டிருக் கலாமென நம்பப்படுகிறது.

அதைவிட ஒரு இலட்சத்துக்கும் மேலானவர் கள் இடம் பெயர்ந்திருப்பதாக ஐ.நா. தகவல்கள் கூறு கின்றன. இடம்பெயர்ந்தமக்கள் உயிருக்கு அஞ்சி ஐ.நா. அலுவலக வளாகத்தில் தஞ்சம் கோரிய சமயத்தில், அந்த வளாகமும் தாக்குதலுக்கு உள் ளாகியிருக்கிறது. ஒரு நகரில் 34 சடலங்களுடன் கூடிய மிகப்பெரும் மனிதப்புதைகுழியொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒரு புறத்தில் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைப் பதற்கான சமரச முயற்சியில் கென்யா, எத்தி யோப்பியா ஆகிய நாடுகளின் தலைவர்கள், தென் சூடானின் தலைநகருக்குச் சென்று திரும்பி யிருக்கிறார்கள். அதன்பின்னர் கிழக்கு ஆபிரிக்க நாடுகள் கென்யத் தலைநகரில் ஒன்று கூடிப் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி ஆராய்ந்துள்ளனர். தென்சூடானில் உள்ள தமது பிரஜைகளைப் பாதுகாப்பாகத் திருப்பி அழைக்கும் முயற்சிகளில் ஏராளமான நாடுகள் இறங்கியுள்ளன.

தென்சூடானில் நிலைகொண்டுள்ள தன்து அமைதி காக்கும் படை வீரரர்களின் எண்ணிக் கையை இரு மடங்காக அதிகரிப்பதற்கு ஐ.நா. பாது காப்புச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அங்கு 12,500 படைவீரர்கள் ஏலவே நிலைநிறுத்தப் பட்டுள்ளனர். அதன் பிரகாரம் மற்றொரு படை யணி தென்சூடானை அடைந்திருக்கிறது.

சமாதான முயற்சிகள் பற்றி சண்டையிடும் தரப்புக்களில், இருந்து மாறுபட்ட கருத்துக்கள் வெளிவருகின்றன. ஜனாதிபதி சல்வார் கீர் நிபந்த னையுடன் கூடிய போர் நிறுத்தத்திற்கு விருப்பம் தெரிவித்துள்ள நிலையில் முறையான பேச்சுவார்த் தைகள் இன்றி ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுக்க முடியாதென முன்னாள் ஜனாதிபதி ரீக்மாச்சார் குறிப்பிட்டுள்ளார். இந்த முரண்பாடு தென்சூடா னில் அமைதியை நிலைநாட்டும் முயற்சிகள் மீது நம் பிக்கையீனத்தை எற்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்தப்பிரச்சினையின் மூல கார்ணங்களாக, முதலாவதாக இது ஜனாதிபதி சல்வாகீருக்கும், முன்னாள் துணை ஜனாதிபதி ரீக் மாச்சருக்கும் இடையிலான அதிகாரப் போராட்டம், தென்சூடா னின் சமூகக் கட்டமைப்பைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சர்வதேச சமூகம் வலிந்து திணித்த பொருத்தமற்ற தீர்வுத்திட்டம் என்பனவே இப் போதைய குழப்பங்களுக்கு மூலகாரணிகள் என்று கூறப்படுகின்றன.

ஜனாதிபதி சல்வாகீர் கடந்த ஜூலை மாதம் துணை ஜனாதிபதி மாச்சாருடன் ஒட்டுமொத்த அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்தார். இரா ணுவத்தில் இருந்து பிரிந்து சென்ற படைவீரர்களை ஒன்று திரட்டித் தமக்கு எதிராகச் சதிப்புரட்சியில் மாச்சார் ஈடுபட்டார் என்பது ஜனாதிபதியின் குற்றச்சாட்டு. அதில் உண்மை இல்லை என்கிறார் மாச்சார். உண்மையில் இவர்களது அதிகாரப் போராட்டத்தின் பின்னணியில் இருப்பது இன கசப்புணர்வே.

தென்சூடான் என்பது அறுபதுக்கும் மேற்பட்ட இனக்குழுமங்களைக் கொண்ட தேசம். இங்கு ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இவர் களில் 15 இலட்சம் பேர் டிங்கா குழுமத்தைச் சேர்ந்தவர்கள். ஜனாதிபதி கீரும் இந்தக் குழுமத் தைச் சேர்ந்தவரே. சுமார் 8 இலட்சம் மக்கள் நெயூர் குழுமத்தை சேர்ந்தவர்கள். ஜனாதிபதிக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் மாச்சார், நெயூர் இனத்தவர். இரு தரப்பினருக்கும் இடை யிலான சண்டையே சமகால நெருக்கடிக்கு மூல காரணம். இதன் விளைவாக டிங்கா , நெயூர் இனக் குழுமங்களைச் சேர்ந்தவர்கள் மாறி மாறி எதிர்த் தரப்பினரால் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

டிங்கா, நெயூர் குழுமங்களிடையிலான பகைமை ஒன்றும் இன்று நேற்று ஆரம்பமானது அல்ல. இன்று ஆகக் கூடுதலான உயிரிழப்புக்கள் பதிவு செய்யப்படும் ஜொங்கி என்ற மாநிலத்தின் தலைநகராகத் திகழும் பொர் நகர், இவ்விரண்டு இனக்குழுமங்களின் பகைமைக்கு நல்லசாட்சி.

தென்சூடானின் விடுதலைப்போர் நடந்தபோது ஆயுதமேந்திப் போராடிய கிளர்ச்சிக் குழுவில் இருந்து மாச்சார் பிரிந்து சென்ற சமயத்தில், நெயூர் குழுமத்தை சேர்ந்த ஆயுதபாணிகள் பொர் நகரில் பெரும் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர்.

இந்த வன்முறைகளில் டிங்கா சமூகத்தைச் சேர்ந்த இரண்டாயிரம் பேர் வரை கொல்லப்பட்டதாக சர் வதேச மன்னிப்புச் சபை மதிப்பீடு செய்திருந்தது. ஆனால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதனை விட அதிகமென்பதே உள்ளூர் மக்களின் கருத்து.

சூடானின் சமீபத்திய இனக்குழுமங்களுக்கு இடையிலான வன்முறையானது தற்போது டிங்கா, நெயூர் சமூகங்களைத் தாண்டி ஏனைய இனக் குழுமங்களுக்கும் பரவத்தொடங்கியுள்ளது.

தென்சூடான் சுதந்திர நாடாகப் பிரிந்து செல்ல வேண்டுமா? இல்லையா? என்பது தொடர்பான கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டு தனிநாடாக தென் சூடான் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூர்லே என்ற இனக்குழுமத்துக்கும் டிங்கா குழு மத்துக்கும் இடையில் தலைதூக்கியுள்ள முரண் பாடும் இப்போது இன்னும் மூர்க்கமடைந்துள்ளது.

இந்தச் சண்டையின் தொடர் விளைவுகளால் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சாவாடைந்துள் ளனர் என்று புள்ளிவிபரங்கள் வெளியாகியுள்ளன. தற்போது நடை பெற்று வரும் உள்நாட்டுச் சண்டையில் ஜனாதிபதி கீருக்கு எதிராகதுணை ஜனாதிபதி மாச்சாரின் படையணி மாத்திரமன்றி மற்றொரு படையணியும் களமிறங்கியுள்ளது. இந்தப் படையணிஜெனரல் பீற்றர் காடெட் என் பவருக்கு விசுவாசமானவர்களைக் கொண்டுள்ளது.

ஜெனரல் பீற்றர் வல்லமை மிக்க படைத்தளபதி மட்டுமன்றி தென் சூடானின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்திய சூடானிய மக்கள் விடுதலைச்சேனை"யை வழி நடத்தியவருமாவார். எனினும்,தென்சூடான் விடுதலை பெற்றதன் பின்னர் இவர் சூடானிய அரசுக்குச் சார்பாக செயற்பட்டிருந்தார் என்பதும் மிகவும் முக்கிய மான விடயம்.

தென் சூடானில் யுனிட்டி ஸ்ரேட் என்ற மாநிலம் உள்ளது. இந்த மாநிலம் எண்ணெய் வளம் செறிந்தது. எந்த சூடானிய மக்கள் விடுதலைச் சேனையை பீற்றர் வழி நடத்தினாரோ அதே மக்கள் சேனைக்கு எதிராக ஆயுதமேந்திய கிளர்ச்சிக்குழுவுக்கு ஜெனரல் பீற்றர் தலைமை தாங்கி.ய வரலாற்று தலைகீழ் அதிசயம் இந்த மாநிலத்திலேயே நடந்தது. இதற்கு முக்கிய காரணம், தென் சூடானின் உருவாக்கத்திற்கு வித் திட்ட உடன்படிக்கையில் முன்னாள் போராளி களை தேசிய இராணுவத்தில் முறையாக இணைப் பதற்கான ஏற்பாடுகள் இல்லாதிருந்தமையே. சூடா னிய மக்கள் விடுதலை இயக்கம் என்ற ஆளும் கட்சியின் தலைமையிலான இராணுவத்தில் தாம் பாதுகாப்பாக இல்லையென முன்னாள் போராளி கள் கருதினார்கள். அதன் விளைவாக ஜெனரல் பீற்றர் காடெட் முதலானவர்கள் மக்கள் சேனை யில் இருந்து வெளியேறினார்கள். எனினும் நெயூர் குழுமத்தைச் சேர்ந்தவரான ஜெனரல் பீற்றர் காடெட், முன்னாள் துணைஜனாதிபதியான மாச்சாருடன் சேர்ந்து செயற்படுகிறாரா அல்லது தனியாக இயங்குகிறாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

எனினும் , தலைநகர் ஜீபாவில் டிங்கா ஆயுத தாரிகளால் நெயூர் மக்கள் கொல்லப்பட்டதால் ஜெனரல் காடெட் ஆத்திரமடைந்துள்ளார் என் பது மட்டும் நன்றாகத் தெரிகிறது. அவரது நெயூர் படைவீரர்கள் பொர் நகரில் டிங்கா மக்களைத் தாக்கியிருக்கிறார்கள். அந்தத் தாக்குதலின் விளை வாக அதிக உயிரிழப்புகள் சம்பவித் துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் அறிவித்துள்ளன.

இந்தநிலையில் சர்வதேச அழுத்தங்களுக்கு அடி பணிந்து ஜனாதிபதி கீர் முன்னாள் துணை ஜனாதி பதி மாச்சார் ஆகியோர் போர் நிறுத்தத்துக்கு உடன்படும் பட்சத்தில் மற்றுமொரு அபாயம் நிகழவும் வாய்ப்புண்டு. ஜெனரல் காடெட் விரை வில் முர்லே இனக்குழுமத்தைச் சேர்ந்தவர்களுடன் கைகோர்க்கக்கூடிய அபாயமே அதுவாகும். . அவ் வாறு நடந்தால் தென்சூடானின் பிரச்சினை மற்று மொரு திசையை நோக்கி நகரக் கூடிய வாய்ப்பும் இருக்கவே இருக்கிறது. (21 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தந்திரமும் தட்டுப்பாடும்

ஹரீஸ்

பால்மாக்களுக்கான தட்டுப்பாடு உள்ளூர் சந்தைகளில் இன்னும் தணிந்தபாடாக இல்லை. பால்மா பெட்டிகளுக்காக முண்டியடிக்கும் மக்களை வியாபார நிலையங்களில் சர்வ சாதாரணமாகக் காணக் கூடியதாக இருக்கின்றது.

பால்மாக்களின் விலைகள் ஒரு போதும் அதிகரிக்காது. விலை அதிகரிப்பை நோக்கமாகக் கொண்டு அவற்றைப் பதுக்கும் நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டு சீல் பண்ணப்படும் என்ற மிரட்டல் அரச தரப்பால் விடுக்கப்பட்டு இருக்கின்ற போதிலும் அதனைக் கவனத்தில் எடுக்காது தமது கைவசம் இருக்கும் பால்மா உற் பத்திகளை பதுக்கும் நிறுவனங்களின் சட்ட விரோதச் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. களஞ்சியங்களில் சட்ட விரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பால்மாக்களை தேடிக் கண்டு பிடித்து நெருக்கடியை சமாளிக்க வேண்டிய நுகர்வோர் அதிகார சபையும் வாடிக்கையாளர் நலன் பேணும் ஏனைய அரச திணைக்களங்களும் இன்னும் நித்திரை விட்டு எழும்பாததால் தட்டிக் கேட்க ஆளில்லாமல் சண்டை பிரசண்டர்களாக தம்மிஷ்டப்படி ஆடுகின்றன பால்மா உற்பத்தி நிறுவனங்கள். அதனால் தான் அரசின் எச்சரிக்கையை அலட்சியம் செய்துவிட்டு பால்மாவைப் பதுக்கும் பணியைத் தொடர்கின்றன. இதன் விளைவாக இலங்கையில் பால்மா பெட்டிகள் யாருக்குமே கிடைக்காத அபூர்வ பொருள்களாக மாற்றப்பட்டுள்ளன. மனிதமாபிமானத்தை மறந்துவிட்டு வியாபார நோக்கத்தை மட்டுமே முதன்மைப்படுத்தியே இந்தப் பால்மா உற்பத்தி நிறுவனங்களும் அவற்றை சந்தைப்படுத்தும் நிறுவனங்களும் செயற்படுவதால் மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். பால்மா பதுக்கலால் ஏற்பட்டுள்ள நெருக்கடி என்ற பூனைக்கு மணி கட்ட யார் வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடனேயே மக்கள் நாள்களைக் கடத்த வேண்டியுள்ளது.

பால்மாவின் அவசியம் கடந்த கால அசாதாரண சூழ்நிலையில் வாழ்ந்தவர்களுக்குத் தெளிவாக புரிந்திருக்கும். பெரியவர்களுக்கான தேநீருக்குப் பயன்படும் பொருள் என்பதற்கு அப்பால் சிறு குழந்தைகளுக்கான உணவாக பால்மா அவசியப் பொருள்களில் ஒன்றாக மாறிவிட்டது. குறிப்பாக ஆறுமாதத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான பிரதான உணவாக பால்மா ஆகாரமே வழங்கப்பட்டு வருகின்றது. அதிலும் தாய்ப்பால் அற்ற குழந்தைகளுக்கான உணவாக பால்மா ஆகாரமே பெற்றோரினால் வழங்கப்படுகின்றன. ஆனாலும் குழந்தைகளுக்கான பால்மா வகைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வியாபார நிலையங்களுக்கு வழங்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் குழந்தைகளுக்கான பால்மா வகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையையே எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இந்த நிலையில் இலங்கையின் துறைமுகங்கள் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்கள் திடீரென காணாமல் போயிருப்பது எப்படியென்ற உண்மை இதுவரை அறியப்படாமல் இருப்பது அரச திணைக்களங்களின் திறமையீனத்துக்கான சிறந்த சான்று.

பால்மாக்களை களஞ்சியப்படுத்தும் அனைத்து களஞ்சியசாலைகளும் அரசின் அதிகார சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற கட்டாய உத்தரவை அரச உயர் பீடம் கடந்தவாரம் விடுத்திருந்தது. ஆனால் ஏதாவதொரு களஞ்சியசாலையில் இதுவரை அரசு சோதனை நடத்தியதாகவோ பதுக்கி வைக்கப்பட்ட பால்மாக்களைக் கைப்பற்றி அவற்றைப் பொதுமக்களிடம் விநியோகித்ததாகவோ எந்தவொரு பதிவும் கிடையாது. இதனால் அரசும் ஏதாவது சலுகைகளின் அடிப்படையில் பால்மா நிறுவனங்களுடன் கூட்டுக்களவாணித்தனம் செய்து கொண்டு மக்களை வதைக்கிறதோ என்ற சந்தேகமும் தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

என்றுமில்லாதவகையில் பால்மா வகைகளுக்கு திடீரென ஏற்பட்ட தட்டுப்பாட்டு ஒரு வியாபாரத் தந்திரம் என்பது பெரும்பாலான பொதுமக்களுக்கு தெளிவாக விளங்கிவிட்டது. அதாவது உலக சந்தையில் பால்மாக்களின் விலைகள் அதிகரித்திருப்பதாகக் கூறி ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்களின் விலைகளை 115 ரூபாவால் அதிகரித்து கொள்ளை இலாபம் அடிக்கும் கபடவேலையைச் சாதிக்கவே பால்மா விநியோக நிறுவனங்களால் இந்தச் செயற்கைத்தட்டுப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. தம்முடைய லாபத்துக்காக மக்களை எவ்வளவுதூரமும் துன்புறுத்த இந்த நிறுவனங்கள் தயார் என்பதையே இந்தப்பதுக்கல் விவகாரம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஏற்கனவே பால்மா உற்பத்திகளில் டி.சி.டி. எனப்படும் நச்சுப் பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் இறக்குமதிகள் இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்தன. இதன்போது ஒரு தொகுதி பால்மாக்களின் விநியோகத்துக்குத் தடைவிதிக்கப்பட்டு வர்த்தக நிலையங்களில் இருந்து அவை மீளப்பெறப்பட்டிருந்தன. அரசின் பணிப்புக்கமையவும் நீதிமன்ற உத்தரவுகளுக்கமையவும் மீளப்பெறப்பட்ட பால்மா பைக் கற்றுகளில் டி.சி.டி ஆய்வுகளும் நடத்தப்பட்டன. இந்த ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பால்மா விற்பனையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

நச்சுப்பொருள் இருக்கும் பதார்த்தை நுகர்வதற்கு மக்களுக்கு எப்படி மனம் வரும்? எனவே பால்மாவை விடுத்து உடன் பாலை தமது தேவைகளுக்கு மக்கள் நாடத்தொடங்கினர். ஆயினும் ஆய்வுகளின் முடிவுகள் பால்மா நிறுவனங்களுக்கு சாதகமாக அமைந்தன. பெருந்தொகையான பணம் கைமாறியதாலேயே இவ்வாறு பால்மா நிறுவனங்களுக்குச் சார்பாக ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டன என்றும் ஒரு கதை உண்டு. எப்படியிருப்பினும் வீழ்ந்து போன தமது விற்பனையை உயர்த்துவதற்கு பால்மா நிறுவனமொன்று படாதபாடு படவேண்டியிருந்தது. எங்களுடைய உற்பத்திகளில் டி.சி.டி இல்லை. என்று மக்கள் மனதில் மீண்டும் நம்பிக்கையை உண்டுபண்ணினால் மட்டுமே பழையபடி பால்மா விற்பனையை எகிற வைக்கமுடியுமென்பதால் மில்லியன் கணக்கான பணத்தைக் கொட்டி, விளம்பரப்போரில் இந்த நிறுவனம் இறங்கியது. அந்த விளம்ப்ரங்களுக்கு நல்ல பலனும் கிடைத்தது. மீண்டும் பால்மா விற்பனை சூடு பிடித்தது.

ஆனாலும் இடைப்பட்ட காலத்தில் பால்மா விற்பனை மந்தம் காரணமாகவும், அதன் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட விளம்பரங்கள் காரணமாகவும் பால்மா நிறுவனங்கள் பெரும் இழப்பைச் சந்தித்திருந்தன. இப்போது பழையபடி பால்மாவுக்கான மவுசு கூடிவிட்டதால் தங்கள் வித்தையைக் காட்டி இழந்தையெல்லாம் ஒரேயடியாகச் சுருட்ட முனைகின்றன. சில மாதங்களுக்கு முன்னர் வரை எந்த நிறுவனங்கள் மக்களின் காலில் விழாத குறையாக எங்களின் பால்மாவை வாங்குங்கள் என்று கெஞ்சிக் கூத்தாடினவோ அதே நிறுவனங்கள் தான் இப்போது பால்மா எங்களிடம் மிகக் குறைவாகவே உள்ளன. விலையை ஏற்றினால் மட்டுமே நாங்கள் இறக்குமதி செய்து உங்களுக்குத் தர முடியும் என்று கதைவிடுகின்றன.

வியாபாரத் தந்திரத்தில் ஏற்பட்ட சறுக்கலாலும், தவறுகளாலும் தமக்கு ஏற்பட்ட நஷ்டத்தை பொதுமக்களின் தலையில் சுமத்துவது எந்த வகையிலும் நியாயமாகாது. மனிதாபிமானம் அற்ற முறையில் அப்பாவிக் குழந்தைகளைப் பட்டினிபோட்டு வியாபார நோக்கங்களை ஈடேற்றிக்கொள்ளும் இத்தகைய தரம் கெட்ட நிறுவனங்கள் மீது அரசு ஏன் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை? என்ற கேள்வியும் பிரதானப்பட்டு நிற்கின்றது. பால்மாக்களை பாதுகாக்கும் நிறுவனங்கள் மீது இனியாவது அரசு செயற்பாட்டு ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் பயங்கரவாதத்தை முறியடித்த மாவீரர்கள் நாங்களே எனக் கூறி பிழைப்பு நடத்தும் அரச அதிகார பீடம், இயல்பு வாழ்வில் ஏற்படும் அவரச நிலைமைகளை எதிர் கொள்ளத் தகுதியற்றது என மக்கள் தீர்மானிக்கும் சூழல் ஏற்படுவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி.08 – 14, 2014
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# தேர்தல் திணைக்களத்தின் இயலாமை

"தேர்தல் ஒன்றின்போது இராணுவத்தினரைக் கட்டுப்படுத்த அதிகாரங்கள் எதுவும் எனக்கில்லை." இப்படி தன்னுடைய இயலாமையை வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய. தேர்தல் ஆணையாளரின் இந்தக் கூற்று இலங்கையில் எவ்வளவுதூரம் ஒரு தேர்தலை நீதியாக நடத்த முடியும் என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது.

வடக்கு மாகாணத் தேர்தல் அறிவிக்கப்பட்ட உடனேயே அரசியல் கட்சிகளை விடவும் முந்திக்கொண்டு களமிறங்கியது இராணுவம்தான். தமக்கு மிகவும் நெருக்கமான நபர்களை அரச தரப்பில் போட்டியிட வைக்கவேண்டும் என்பதில் படைப் புலனாய்வாளர்கள் தீவிரமாகச் செயற்பட்டார்கள். அதனால்தான் வேட்பாளர்கள் பட்டியல் வெளியாகும் முன்னரே "எங்கள் அண்ணனுக்கு வாக்களியுங்கள்" என்று சிலர் பட்டிதொட்டியெங்கும் சுவ ரொட்டிகள் மூலம் வாக்குக் கேட்க வந்துவிட்டார்கள். ஆனால், வேட்பாளர் பட்டியலில் அவர்களது பெயர் இடம்பெறவில்லை.

ஆனாலும் சளைக்கவில்லை அவர்கள். படைப்புலனாய்வாளர்களின் கைக்கூலிகளைக் கொண்டு செயற்கை ஆர்ப்பாட்டம் ஒன்று கச்சேரிக்கு முன் நடந்தது. காணாமல் போனோரின் உறவுகள், மனித உரிமை அமைப்புக்கள், தமிழ் அரசியல் கட்சிகள் என்பனவெல்லாம் உணர்வு பூர்வமாக நடத்திய ஆர்ப்பாட்டங்களுக்குக் கூட அசைந்து கொடுக்காத அரசு, தன்னுடைய கைக்கூலிகள் நடத்திய செயற்கை ஆர்ப்பாட்டத்துக்கு செவிசாய்த்தது. அண்ணனுக்கு வேட்பாளர் பட்டியலில் கடைசி நேரத்தில் இடம் ஒதுக்கப்பட்டது. இப்படி படைப்புலனாய்வாளர்களின் ஆசிபெற்ற ஐந்துக்கும் மேற்பட்டோர் வடக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிட்டதாகத் தகவல். இவர்கள் அத்தனை பேருக்கும் சுவ ரொட்டி ஒட்டுவது முதல் கூட்டங்களை ஒழுங்கு செய்வது வரை எல்லாவேலைகளையும் படைத்தரப்பே விழுந்துவிழுந்து செய்தது. சில வேட்பாளர்கள் படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட உதவி வழங்கும் நிகழ்வுகளில் விருந்தினர்களாக அழைக்கப்பட்டு விநோதமான முறையில் பரப்புரையும் நடந்தது. (தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தகவல் கேள்வியுற்று வந்த போது அந்த வேட்பாளர் விழுந்தடித்து பின்பக்கமாக ஓடிமறைந்தது வேறுகதை).

படையினரின் தேர்தல் நடவடிக்கைகள் வாக்களிக்கும் வரை தொடர்ந்தன. இவை குறித்தெல்லாம் கூட்டமைப்பும், பொது அமைப்புக்களும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் தேர்தல் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தன. இதன் நோக்கம் அடுத்த முறை ஒரு தேர்தல் நடக்கும்போதாவது இராணுவத் தலையீடுகளை இல்லாதாக்க தேர்தல் திணைக்களம் ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் இப்போது இராணுவத்தைக் கட்டுப்படுத்த தன்னால் முடியாது என்று தேர்தல் ஆணையாளரே ஒப்புக்கொண்ட பின்னர் வருங்காலத்தில் எல்லாத் தேர்தல்களிலும் இராணுவத்தினரே தமது முகாம்களுக்குள் வாக்குப் பெட்டிகளைக் கொண்டு சென்று அவற்றை தமது வாக்குகளாக நிரப்பினாலும் கூட தேர்தல் திணைக்களம் கைகட்டிக்கொண்டுதான் இருக்கப் போகிறதா?

# பிணம் தின்னும் சாத்திரங்கள்

வெருளி

மாற்றுக் கருத்தாளர்கள் மீதான அதியுச்ச அடக்குமுறை இலங்கைத் தீவில் தலைவிரித்தாடுகிறது என்ற உண்மை ஏற்கனவே உலகளவில் துலாம்பரப்படுத்தப்பட்டு விட்டது. இலங்கை சர்வதிகாரத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் ஏற்கனவே போட்டுடைத்துவிட்டார். ஜனநாயகத்தின் பெயரால் சர்வதிகார இராணுவ ஆட்சியினை திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைத்து நடத்திக் கெண்டிருக்கும் இலங்கையின் அதிகாரபீடம், தன் மீதான சர்வதேச எதிர்ப்புக் குரல்களையும், விமர்சனங்களையும் எவ்வாறெல்லாம் நசுக்க முடியுமோ அவ்வாறே செய்தும் வருகிறது. ஜனநாயக முகத்திரைக்கு பின்னால் ஒளிந்து கொண்டு, இராணுவ இரும்புப்பிடிக்குள் மக்களை நசுக்கும் தன்னைத் தட்டிக் கேட்க யாருமே இல்லையென்பதால் நினைத்ததையெல்லாம் அரசு தொடர்ந்து செய்து கொண்டேயிருக்கிறது. போர் முடிந்த பின்னரும் அதிகாரத்தின் மிரட்டல்களலும் தாக்குதல்களும் தொடர்கின்றன. இதனால் உயிரைக் கையில் பிடித்தபடி எராளமான மாற்றுக் கருத்தாளர்களும் ஊடகவியலாளர்களும் நாட்டை விட்டு தப்பியோடும் படலம் நீள்கின்றது. பூனை கண்ணை மூடிக் கொண்டு பால் குடிக்கும் போது முழு உலகமும் இருண்டுவிட்டதாக நினைக்குமாம். அதனைப்போன்று தன் அடக்குமுறை ஆட்சியை வெளியுலகுக்குத் தெரியவராது என்ற ஆணவத்திலேயே தம் அடக்குமுறை ஆட்சியைத் தொடர்கின்றனர் மஹிந்தவாதிகள்.

உள்நாட்டில் உண்மையின் குரல்வளை நசுக்கப்பட்டு சுயதணிக்கையுடன் செயற்படும் வகையில் ஊடகங்கள் நிர்பந்திக்கப்பட்டிருப்பதால், திரைகளால் மூடப்பட்டிருக்கும் உண்மையென்ற வெளிச்சத்தை வெளியில் கொண்டுவர வேறுதேசத்து மீட்பர்களே மக்களுக்குத் தேவைப்படுகின்றனர். அவ்வாறு மக்களின் கதறல்களை பதிவு செய்யவரும் ஊடகர்களையும், வெளிநாட்டுப் பிரமுகர்களையும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் ஊடாக கட்டுப்படுத்தி உள்நாட்டு அசிங்கங்கள் வெளியே வரக்கூடாது என்பதில் இலங்கை



அரசு குறியாக இருக்கிறது. ஆனால் அதே கட்டுப்பாடுகள் அரசு நினைப்பதற்கு மாறாக இன்னுமின்னும் இலங்கையின் பெயரை சர்வதேச மட்டத்தில் நாறடிக்கின்றன என்பதை இலங்கை உணர்வதாகத் தெரியவில்லை.

அதற்கு கடந்த காலத்தில் இடம்பெற்ற பல சம்பவங்கள் சிறந்த சான்றாதாரங்களாக இருக்கின்றன. ஊடகவியலாளர்களுக்குரிய விசா அனுமதியுடன் நாட்டில் நுழைந்த சனல் - 4 ஊடகவியலாளர்கள் அவர்களுடைய பணிகளைச் செய்யவிடாமல் திட்டமிட்ட ரீதியில் முடக்கப்பட்டார்கள். யாழ் தேவியில் புறப்பட்ட அவர்களுக்கு எதிராக அனுராதபுரத்தில் நடந்த வழிமறிப்பு போராட்டம், அதன்பின்னர் அவர்களை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதி செய்த கெலும் மக்ரே காசு தராமல் ஏமாற்றிவிட்டார் என்ற முறைப்பாடு, விதிமுறைகளை மீறி ஜனாதிபதியை எப்படி கெலும் மக்ரே நெருங்கிச் சென்று கேள்வி கேட்கமுடியும் என்பது பற்றி விசாரணை நடத்தப்போவதாக அரசே விடுத்த அறிவிப்பு என்பனவெல்லாம் கெலும் மக்ரே உள்ளிட்ட சனல்-4 ஊடகக்காரர்களின் கைகளைக் கட்டிபோடச் செய்துவிட்டன. அதேபோன்று மக்களின் துயர் கேட்க நினைத்த ஆஸ்திரேலிய, நியூஸிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கழுத்தை பிடித்து இலங்கையிலிருந்து அனுப்பப்பட் டனர்.

இந்த வரிசையில் கடைசியாக இணைந்து கொண்டவர்தான் தமிழகத்தின் ஆனந்த விகடன் குழும ஊடகவியலாளரான தமிழ் மகா பிரபாகரன். இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரையும் அதற்குப்பின்னரான வன்னியின் நிலையையும் வெளிப்படுத்தும் வகையில் புலித்தடம் தேடி.. என்ற தொடர் கட்டுரை மூலம் பலரின் கவனத்தை ஈர்த்த ஊடகவியலாளர் இவர்.

(21 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எ புலியும்

தடுப்பிலிருந்து புனர்வாழ்வு பெற்ற பின்னர் 'சமூகத்தோடு ஒன்றிணைக்கப்பட்ட' முன்னாள் போராளிகளில் பதுமனுக்கு விசுவாசமானவர்கள், போர்க் களங்களில் அதீத திறமை காட்டியவர்கள் என்போர் அடிக்கடி படைப் புலனாய்வாளர்கள் தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

நினைத்தவுடன் எல்லாம் இவர்களது வீட்டுக்கு வரும் புலனாய்வாளர்கள் விசாரணை என்ற பெயரில் அவர்களை ஆழம் பார்க்கும் முயற்சிகளில் இறங்கினர்.

பொதுவாகவே முன்னாள் போராளிகளில் பலர் பொருளாதார ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் தம்மை நிலை நிறுத்திக்கொள்ள படாதபாடு பட்டு வருகிறார்கள். இது புலனாய்வாளர்களுக்கு வசதியாகப் போய்விட்டது. அதுதவிர போர்க்களத்தில் களமாடிய போராளிகள் சிலர் சமூக ஒன்றிணைத்தலின் பின்னரும் போர் பற்றிய எண்ணங்களை கைவிட முடியாதவர்களாக இருந்தார்கள். மீண்டும் இன்னொரு போர் மூலமே இப்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பது அவர்களது நிலைப்பாடு. என்றோ ஒருநாள் தாயக மீட்புப்போர் தொடங்கும் போது பழையபடி கைகளில் ஆயுதம் தூக்குவது என்ற கருத்துக்களை தம் நண்பர்களோடு பகிர்ந்து கொண்டவர்களும் புலனாய்வுப் பிரிவின் வளையத்துக்குள் அவர்களை அறியாமலே கொண்டுவரப் பட்டார்கள். சிலர் இராணுவ முகாமுக்கு வரவழைக்கப்பட்டு பதுமனின் அணியில் இணையுமாறு வற்புறுத்தப்பட்டார்கள். இதுதவிர தடுப்பில் இருந்த, இருக்கின்ற முன்னாள் போராளிகளிடமும் புதிதாக உருவாக இருக்கும் ஆயுதக்குழுவில் இணையுமாறு கட்டாயப்படுத்தப்பட்டது.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். படைப்புலனாய்வாளர்களின் தொடர் நடவடிக்கைகளால் கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த ஆயுதக் குழுவில் இணைத்துக்கொள்ளப் பட்டார்கள். ஆனால், தங்களின் இலக்கு என்ன, யாரை எதிர்த்துப் போராடப்போகிறோம். என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. கைநிறையக் காசும், எதிர்காலத்துக்கான வசதிகளும் மட்டுமே அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது.

புதிய ஆயுதக்குழுவுக்கென இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஏற்கனவே ஆழ ஊடுருவும் படையணியின் உற்பத்தி இடமாக இருந்த அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் படைப் புலனாய்வாளர்கள் வைத் திருந்த காணிகளும் வீடுகளும் இவர்களுக்கென ஒப்படைக்கப் பட்டன.

இதே பகுதியில் தான் புலிகளிடமிருந்த பிரிந்து சென்ற கருணா தன் சகாக்களோடு பதுங்கி இருந்தார். அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை அப்போது புலனாய் வாளர்களே வழங்கியிருந்தார்கள். என்றாலும் அந்தப் பாதுகாப்பு வளையத்தையும் மீறி புலிகளின் அணியொன்று கருணா குழுவுக்குள் ஊடுருவி பின்னர் அவர்களையே 'போட்டுவிட்டுவந்த' சம்பவங்களும் அத்துருகிரிய மிலேனியம்



சிற்றியில் அரங்கேறி இருந்தன. எனவே ஏற்கனவே இராணுவம் அல்லது ஒட்டுக்குழுக்களின் புகலிடம் என்ற அடையாளத்தோடு இருந்த மிலேனியம் சிற்றியில் புதிய ஒட்டுக்குழுவின் பயிற்சிகள் ஆரம்பமாகின.

இந்த அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் என்பதால் அவர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள் தேவையானதாக இருக்கவில்லை.

விரைவாகவே அவர்கள் தாக்குதலுக்குத் தயாராகிவிட்டார்கள். இந்தச் சமயத்தில்தான் பதுமன் பகிரங்க வெளியில் தனது இருப்பை வெளிக்காட்டும் நடவடிக்கையில் இறங்கினார். யாழ்ப்பாணத்தில் ஆவரங்கால் பகுதியில் நடந்த ஒரு திருமண வைபவத்தில் பதுமன் பங்குகொண்டார். இதுவரை காலமும் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்ற கேள்விக்குறிக்குச் சொந்தக் காரரான பதுமன், எல்லாக் கேள்விகளுக்கும் இந்தப் பிரசன்னத்தின் மூலம் பதிலளித்தார்.

பதுமனின் தலைமையில் உருவாக்கப்பட்ட ஆயுதக்குழுவின் இலக்கு உண்மையில் தமிழ்த் தேசியத்துக்காக இன்னமும் குரல் கொடுத்துக்கொண்டிருப்பவர்களாகவே இருக்கமுடியும். ஏனெனில் இப் போதுள்ள சூழ்நிலையில் அரசுக்கு எதிரான அதே சமயம் தமிழத் தேசியத்துக்கு ஆதரவானவர்களை வெளிப்படையாக எதுவும் செய்து விட முடியாது. அப்படிச் செய்தால் சர்வதேசத்தின் கோபப் பார்வையின் உக்கிரம் இன்னமும் அதிகரித்துவிடக் கூடும் என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். எனவே சேலையும் கிழியாமல் முள்ளையும் நோகாமல் எடுக்க இன்னொரு உபாயம் தேவை. அந்த உபாயமே பதுமன் தலைமையிலான புதிய புலிகளின் உருவாக்கம்.

இந்த அமைப்பின் மூலம் முன்னர் தங்கள் ஒட்டுக்குழுக்களை வைத்து அரசு என்ன வெல்லாம் செய்ததோ, அதையெல்லாம் மீண்டும் செய்யமுடியும். யாராவது கேட்டால் பழியைப் பழையபடி புதிய புலிகள் மீது சுமத்த முடியும். ஒப்புக்காக ஆங்காங்கே இராணுவத்தின் மீது சிறு சிறு தாக்குதல் நடைபெறுவது போன்று காண்பிப்பதன் ஊடாக சர்வதேசத்தையும் புலிகளின் மீள் உருவாக்கம் உண்மை என்று நம்ப வைக்கமுடியும். அப்படி நம்ப வைத்து தமிழர் பிரதேசங்களில் "புதிய புலிகளை ஒடுக்குவதற்காக" இராணுவப் பிரசன்ன அதிகரிப்புக்கும் காரணம் தேட முடியும்.

புலிகள் முன்னரைப் போலவே அரசியல் வாதிகளை போட்டுத் தள்ளும் வேலையை தொடர்கிறார்கள் என்று தன்னுடைய அரசியல் பழிவாங்கல்களுக்கு புலிச் சாயம் பூசவும் அரசால் முடியும். இந்தப் புதிய புலிகளைக் காரணம் காட்டி எப்போது வேண்டுமானாலும் சுற்றிவளைப்புக்கள், சோதனைகள், கைதுகள் என்று போர்க்காலத்தில் எப்படி நாடு இருந்ததோ அதே நிலைமைக்கு கொண்டு செல்வதன் மூலம் தன்னுடைய இரும்புப் பிடியை இன்னமும் பலமாக்கிக் கொள்ள ஆட்சியாளர்களால் முடியும். நட்டங்களைவிடவும் இலாபங்களே புதிய புலிகளின் பிரசன்னத்தால் அரசுக்குக் கிடைக்கும். மிக இரகசியமாக அரசு மேற்கொண்டு வந்த புலிகளின் மீள் உருவாக்கம் பற்றிய செய்திகள் எப்படியோ ஊடகக்காரர்களின் காதுகளுக்கும் எட்டிவிட்டன. லங்கா ஈ நியூஸ் என்ற இணையத் தளம் ஆதாரங்களோடு பதுமன் தலைமையிலான புதிய புலிகளின் மீள் உருவாக்கம் பற்றி தொடர்ச்சியாக செய்திகளை வெளியிட்டது.

வழமையாகவே இத்தகைய செய்திகள் வந்தவுடனேயே அரக்கப்பரக்க மறுப்பு அறிக்கை விடும் அரசு இந்த விடயத்தில் மாத்திரம் மௌனியாக இருந்தது. ஏனெனில் புலிகளின் மீள் உருவாக்கம் பற்றிய செய்திகள் கசிவதையும், அவை பரம்பலடைவதையும் அரசும் விரும்பியது. அப்போதுதான் தனக்கு எதிராகப் பேசுபவர்கள் கொஞ்சமேனும் நாவை அடக்கிக் கொள்வார்கள் என்று அரசு எண்ணியிருந்தது.

அரசு எதற்காக புதிய புலிகளை உருவாக்கியது என்பது அரசு சார்ந்தோருக்கு மட்டுமல்லாது, தமிழத் தேசியம் சார்ந்தோருக்கும் நன்கு புரிந்திருந்தது. புதிய புலிகளின் பிரதான தாக்குதல் இலக்காக படைப் புலனாய்வாளர்களால் இனம் காட்டப்பட்டவர் வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன்தான்.

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பின்னர் தனியொரு மனித ஆளுமையைக் காண்பதற்காக தமிழ் மக்கள் அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாணப் பரப்புரைக் கூட்டங்களில் முண்டியடித்திருந்தனர். கூட்டமைப்புக்காக அவர்கள் சென்றதைவிடவும், சி.வி.விக்னேஸ்வரனைக் காணவும் அவருடைய உரையைக் கேட்கவுமே வழக்கத்துக்கு மாறாக இந்தக் கூட்டங்களில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர் என்பது ஆட்சியாளர்களுக்கும் தெரி

(21 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## குடியுரிமை

ஒவ்வொருவரும்
கூவி அழைத்துக் கொள்கிறோம்
இது வரை
ஒன்று கூடியதில்லை
நாங்கள் .... எவரும்...!
கூடு கட்டும் வல்லமையை
எங்கள் குலமிழந்து போனது
இப்படித்தான்
இதனால்
இரவல் வீடுகளில்
எங்கள் குடியுரிமைகள்
ஏப்பத்துக்காய்

-த. பருத்திதாசன்





## விடிந்து வா புத்தாண்டே

விடிவெதையும்
தந்திடாமல்
முடிந்து போகும்
ஆண்டே
என்ன பாவம்
செய்தோம்
எம்மை நீ
வருத்தி செல்ல

பிறக்கும் போது
இன்பமாய்
வரவேற்றோம் -நீ
இறக்கும் போது உன்
பரிசு கண்ணீரா?
பச்சைப் பயிர்கள்
எல்லாம் காய்ந்து
பரிதவித்து இறக்கின்றன
நீர் இன்றி

வந்தோரை வரவேற்கும்
தேசம்- தம்
வயிற்றுப் பசி
போக்கக் கூட
இல்லங்கள் தோறும்
நிதமும் அல்லாடப்
போகிறது

மாரிகாலம்
பொய்த்ததென்று
மார் தட்டி அழுதாலும்
இரக்கமின்றி
இறங்க மறுக்கிறது
ஈரமில்லா நெஞ்சம்
கொண்ட
மழைத்துளிகள்

கடந்து போகும்
ஆண்டே உன்னில்
தடம் பதித்த
நாட்கள் எல்லாம்
சோகங்களின்
சொந்தமாயும்
சோதனைகளின்
சொந்தமாயும்
சோதனைகளின்
இருப்பிடமாயுமோ போனது

பிறப்பெடுக்கும்
புத்தாண்டில் ஆவது
பிரச்சினைகள் ஒழிந்து
நிம்மதியின் இருப்பிடமாய்
நிதமும் சந்தோசம் நிலைக்கட்டும்

- வேல்மகள்.
புளியம்பொக்கணை

## அப்பாவின் அன்பு

சிறு வயதிலே- என்னை
இழந்து நின்று
தெருவோரம் நின்றேன்
அப்போது தான்
உணர்ந்தேன்- நான்
அநாதை என்று - இந்த
அநாதைக்கும்
ஆறுதல் தந்தது- என்
அன்பு அப்பாவின்
அன்பான வார்த்தைகள்
மட்டுமே!

-வசந்தமாது,
கொற்றவையூர்.

## மனநோயாளிகளின் கூடாரம்

விடுதியில் விபச்சாரம்!
பள்ளி மாணவரிடம் போதைவஸ்து!
மருத்துவ மனைக்குள் கஞ்சா!!!
மாணவி கர்ப்பம்
ஆசிரியரே காரணம்!!!!
கல்லூரி அதிபர் கத்தியால்
குத்திப் பலி!
ஆணும் பெண்ணும்
அடித்துக் கொல்லப்பட்ட பின்
தூக்கிலிடப்பட்டனர்!!

வீதியால் வந்த பெண்ணிடம்
வழி மறித்து வன்புனர்வு!!
வாளோடு வந்த கும்பல்
குடும்பத்தோடு வெட்டிக் கொன்றது!!!
அறுபது வயது மூதாட்டியின்
காதோடு தோடு அறுத்து
கள்வர்கள் கைவரிசை!!!!

இவை எல்லாம்
எங்கோ தொலைவில்
நடந்தவை அல்ல
இங்கே! இப்போ!!
நடந்து கொண்டிருப்பவை....!
போச்சு எல்லாமே போச்சு
நாம் யாழ்ப்பாணத்தார் என்ற
செருக்கும் திமிரும்- கால்
செருப்பாகிப் போனது
மனசு அம்மணமாகிக் கூச
அவமானம் தாங்காது ஆத்மா
துடிக்கிறது

எங்களில் முப்பது வீதமானோர்
மனநோயாளிகளாம்
அறிக்கை கூறுகிறது - எஞ்சியுள்ள
எழுபது வீதமானவர்களே
நீங்களாவது தப்பித்து விடுங்கள்
யாழ்பபாணம் மனநோயாளிகள்
கூடாரம் ஆகிப் போகட்டும்



- தே.யோ. தவராஜா,
இனுவில் கிழக்கு.

## ஒளி பூசும் சொற்கள்



நிலவைத் துண்டாடி
திக்கொன்றாய் எறிய
துண்டாங்கள் விழும்
புள்ளிகளில் இருந்து
ஒளியள்ளிப் போகிறேன்

மூச்சொறுத்த
இருளடர் காட்டிடையே
வெளிச்சம் தோய்ந்த
என் கதிர்பட்டுத் தெறிக்கும்
ஞாபகக் கிடங்கில்.....
அவர்களின் இறுதிச் சொற்கள்.....
உராய்ந்தெழுகின்றன.

சொற்களை ,
அள்ளிக்குடித்து நடக்கிறேன்

என்னுள் திணறும்
சொற்கள்......
ஒளிபூசித் திமிறிக் கொட்டுகிறது
சொற்களற்று.
இருள் தொற்றிப் போகிறேன்

-சு.க. சிந்துதாசன்
பொலிகையூர்.

## தமிழறி தமிழா!

என் இனிய தமிழா!
தமிழ்த் தாய் இருக்கையில்
அன்னியப் பெண்ணிடம் ஏன்
அடைக்கலம் கொள்கிறாய்?

கேட்டால்..... நடைமுறையில்
தமிழ் சாத்தியமில்லை என்று
நெருஞ்சி முள் போர்வைக்குள்
உன்தன் மானத்தையும்
மூடி மறைக்கிறாய்!

லகர ங்களின்
ஆளுமையறிந்த நீ
ழ கரத்தின் சுவையறிய
மறக்கிறாய்!

வல்லினம் உனக்கு
நுனிப்புல்லா....
தமிழா.... முதலில் தமிழறி!
அதுவே உன் வாழ்வின் நெறி!

- கல்லொளுவை பாரிஸ்,
மள்வாணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மாழ்வார்: மண்ணைக் காத்த போராளி

இந்தன்

நம்மாழ்வாரின் மறைவு நிச்சயமாக அனைவருக்கும் ஒரு பேரதிர்ச்சி. இயற்கை விவசாயத்தை இன்றைய தலைமுறைக்கு கொண்டு சென்ற பெரும் ஆளுமை அவர். இயற்கை வேளாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அடிப்படை மானுட வாழ்வாதார உரிமைகள் என அடிப்படைகளை இணைக்கும் பார்வையை அவர் தன் பொது வாழ்க்கை முழுவதும் முன்வைத்து வந்தார். தமிழுணர்வாளர்கள், சுதேசி அமைப்பினர் என அனைவருக்கும் அவரது பங்களிப்பும் பார்வையும் முக்கியமானவையாக இருந்தன. குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு இன்னல் என்றால் போராடக் களம் புகுவோர் மத்தியில் நம்மாழ்வார் மிக முக்கியமானவர். அதிலும் மற்றவர்கள் ஏதோ அரசியல் ஆதாயத்துக்காக ஈழத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்ளவே இத்தகைய போராட்டங்களில் தலைகாட்டுவதுண்டு. ஆனால் நம்மாழ்வார் எந்த அரசியல் கட்சியும் சாராதவர். மனிதமும், மண்ணும், இயற்கையுமே அவருடைய நேசிப்பாக இருந்தன.

இயற்கை வேளாண்மை குறித்தும் நம் வாழ்க்கை முறை குறித்தும் அவரது பேச்சு மிகவும் இயல்பானதாகவும் கருத்து செறிவு கொண்டதாகவும் அமைந்திருக்கும். இன்று இயற்கை வேளாண்மை அனைவராலும் பார்க்கப்படும் பேசப்படும் விவாதப் பொருளாக தமிழகத்தில் மாறியிருப்பதில் நம்மாழ்வாரின் பங்கு முக்கியமானது. அவரது இயற்கை வேளாண்மையின் அடிப்படையில் ஓர் ஆன்மிகப் பார்வை இருந்தது. மதங்களைக் கடந்து மனிதர்களை இணைக்கும் இந்த மண்ணுக்கே உரிய ஆன்மிகப் பார்வை அது. அதையும் அவர் எப்போதும் முன்வைத்து வந்தார். எளிமையான மனிதர். பழகுவதற்கு இனியவர். மண்ணின் வாசம் தெரிந்தவர். இறுதிக் காலம் வரை போராளியாகவும் புத்தாக்க சக்தியாகவும் திகழ்ந்தவர். ஒரு புதிய திறப்பினை நமக்கு கொண்டு வந்தவர். என்றென்றும் அவர் தமிழ் பண்பாட்டின் ஒரு அழியாத சின்னமாக வழிகாட்டும் குருவாக திகழ்ந்து கொண்டிருப்பார்.

### இயற்கையும் வேளாண்மையும்

இயற்கை வேளாண்மை என்பதன் அடிப்படை இயற்கையுடன் இணைந்த உணவு உற்பத்தி. மானுடத்தின் வரலாற்றில் வேளாண்மையின் உதயம் முக்கியமானது. அது ஒருவிதத்தில் ஒரு பிரிவையும் மற்றொரு விதத்தில் ஒரு இணைதலையும் முன்வைத்தது. அது வரை வேட்டையாடியும் கனி - கிழங்குகளை சேகரித்தும் வாழ்ந்த மனிதன் அதை விடுத்து திட்டமிட்டு உணவை உற்பத்தி செய்ய ஆரம்பித்தான். அந்தவிதத்தில் அது வரை வாழ்ந்த இயற்கையிலிருந்து அவன் பிரிந்தான்.


மற்றொரு விதத்தில் தான் வாழும் மண்ணுடன் ஒரு ஆழமான உறவை ஏற்படுத்தினான். மண்ணை உன்னிப்பாக கவனித்தான். விவசாயப் பண்பாடு வளர்ச்சி பெறும் காலத்தை ஒட்டியே ஆண் பெண் உறவுகளில் பாலின அடிப்படையிலான தொழிற் பாகுபாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். பெண் உணவு உற்பத்தியில் ஒரு மைய இடத்தை பெற்றாள். நிலம் பெண்ணாகப் பார்க்கப்பட்டது. தொல் கற்காலம் முதல் மானுட ஆழத்தில் பெண் தெய்வமாக உருப் பெற்றிருந்த போதிலும் இப்போது அந்த ஆழ்மனப் படிமம் (archetype) ஒரு இயக்கத்தன்மையை அடைந்தது. நிலத்தை பெண்ணாக நோக்கும் பார்வையின் அந்த ஆழமான வேர்களில் இருந்து பல சடங்குகள் உருவாகின. இவை தன்னியல்பில் வேற்றுமையை பேணும் தன்மை கொண்டவை. அதுவரை சடங்குகளுக்காகவும் புலப்பெயர்வுகளில் திசைகள் அறியவும் முக்கியமாக இருந்தவை விண்மீன் சுழற்சிகள். ஆனால் வேளாண்மை உருவான பிறகு வானிலை சுழற்சிகள், பருவநிலை மாற்றங்கள் ஆகியவை உன்னிப்பாக கவனிக்கப்பட்டன. உணவு உற்பத்தியுடன் உணவுப் பன்மை என்பது உணவுப் பாதுகாப்புக்கு முக்கியமானது.

### வேளாண்மை - சாபமா? வரமா?

இக்காலகட்டத்தில் உருவான ஆபிரகாமிய அடிப்படை தொன்மங்களில் ஒரு பிளவை காணலாம். விவசாயத்துக்கும் கால்நடை மேய்ப்போருக்குமான அடிப்படைப் பிளவு அது. இறைவன் இதில் கால்நடை மேய்ப்போரையே ஆதரித்தான் என்கிறது விவிலியம். அத்துடன் உணவை வியர்வை சிந்த உற்பத்தி செய்வதே ஒரு சாபம் என்கிறது ஆபிரகாமிய ஆதி புனைவுகள். பாரதத்தின் தொன்மங்களில் இந்த இரு முக்கிய தொழில்களுக்கும் ஒரு இணைப்பும், உணவு உற்பத்தி ஒரு கர்மயோகமாகவும் காட்டப்படுவதை காண்கிறோம்.

அன்னத்தை அதிக அளவில் உற்பத்தி செய்வதையும் பகிர்ந்தளிப்பதையும் வேதம் சாபமாக அல்ல விரதமாக மனித சமுதாயத்துக்கு அளித்தது. அதன் நீட்சியாக மானுடத்தின் வணக்கத்தை வானில் இருக்கும் கண்ணுக்குத் தெரியாத தேவனுக்காக அல்லாமல் பருவநிலைக்கும் மழை வளத்துக்கும் காரணமாக விளங்கும் பர்வதத்துக்கு கொடுக்க சொன்னான் கண்ணன். உயிர்களின் பன்மை மானுட உயிர்வாழ்தலுக்கு அவசியம் என்பதை எமது பண்பாடு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. விவசாயிகளின் உயிர்வாழ்தலுக்கு அவசியமான விதை நெல்களின் பன்மைக்கான ஒரு குறியீடாக பலராமனையும் கிருஷ்ணனையும் இணைத்து வணங்கும் பூரி ஜகன்னாத ஷேத்திரம் விளங்கியது அதிசயமில்லை. உணவு உற்பத்தியையும் உணவு பகிர்ந்தளித்தலையும் பெரும் அறங்களாக பாரத பண்பாடு உருவாக்கியது. அதே நேரத்தில் அந்த பகிர்ந்தளிப்பதென்பதில் மானுடத்தை மட்டுமல்லாது அனைத்து உயிர்களையும் எங்கள் பண்பாடு இணைத்தது. இயற்கை விவசாய மீட்டெடுப்பும் முன்னகர்தலும் இந்த பண்பாட்டு மீட்டெடுப்பில் ஒரு முக்கிய மைய அம்சமாகும். சாதி மத மொழி எல்லைகளுக்கு அப்பால் இந்த மண்ணையும் பண்பாட்டையும் அடிப்படையாக கொண்ட ஒரு ஆன்மிக மக்கள் இயக்கமாக இயற்கை விவசாயத்தை மீட்டெடுத்த நம்மாழ்வார் வாழ்க்கையே ஒரு தவமாக வாழ்ந்த ரிஷி.

இயற்கைக்கு ஊறுவிளைவிக்கும் செயல்களுக்கு எதிரான போராளியாக தன்னை உருவாக்கிக் கொண்ட நம்மாவாழ்வார், மீதேன் வாயுத்திட்டத்தால் சுடுகாடாக மாறப்போகும் மண்ணைக் காக்கும் போராட்டத்தில் குதிக்கச் சென்ற போது, இயற்கை அவருடைய 75 ஆவது வயதில் தன்னோடு இணைத்துக் கொண்டுவிட்டது.



## விஷம் மருந்தாகுமா?

- ஜெயமோகன்

1998ல் கோவையில் ஒரு விழாவில் நான் இயற்கைவேளாண் அறிஞர் நம்மாழ்வாரைச் சந்தித்தேன். எஸ்.என்.நாகராஜனும் ஞானியும் பங்கெடுத்த நிகழ்ச்சி அது. இயற்கைவேளாண்மை பற்றிப் பேசிக் கொண்டிருந்த நம்மாழ்வார் என்னிடம் உங்களூரில் வாழை விவசாயம் இன்று ரசாயனமயமாகி வருகிறது. நீரை அதிகமாகத் தேக்கும் தாவரங்கள் ரசாயனத்தையும் அதிகளவில் உறிஞ்சி நமக்கு அளிக்கின்றன. ரசாயனநெல்லைவிடவும் அபாயகரமானது ரசாயன வாழை என்றார்.



நான் ஆமாம், வாழைக்கு பூச்சிமருந்து அடிக்கவேண்டும் என்பதையெல்லாம் வாழைகள் நடுவே பிறந்து வளர்ந்த நான் கேள்விப்பட்டதேயில்லை என்றேன்.

நம்மாழ்வார் என்னை நோக்கிச் சிரித்து ஐயா, என்ன சொன்னீங்க? பூச்சி மருந்தா? மருந்தென்றால் அது வாழ வைக்கவேண்டும் இல்லையா? உயிரை வளர்க்கிறதுதானே மருந்து? அழிக்கிறது எப்படி மருந்தாகும்? எப்பவாவது நாம் விஷத்தை மருந்தென்று சொல்லியிருக்கிறோமா?ஆனா இப்போது எங்கள் மொழியிலே அப்படிச் சொல்லவைச்சிட்டாங்களே பர்ர்த்தீங்களா? நாம் இப்போது போராடிக் கொண்டிருப்பது மண்ணோடு இல்லை. எங்கள் வாயிலே இருக்கும் நம் மொழியோடு தான் என்றார். பின்பு யோசித்துப்பார்த்தபோது அவரது வாழ்க்கையின் செய்தியையே அவர் சொல்லிவிட்டதாக உணர்ந்தேன்.

நம்மாழ்வாரை அதன்பிறகும் சிலமுறை சந்தித்திருக்கிறேன். அவரது வானகம் என்ற காட்டுருவாக்க அமைப்பு கடுமையான மின்வெட்டால் பாதிக்கப்பட்டபோது அங்கே சூரியமின்கலங்கள் அமைக்கத் தேவையான நிதியில் ஒருபகுதியை சொல்புதிது விவாதக்குழும நண்பர்கள் சேகரித்து அனுப்பினார்கள். என்றும் எங்களுக்குள் ஓர் ஆசிரியனின் அரியணையில் அவர் இருந்தார்

மீண்டும் சொல்லிக்கொள்ளவேண்டிய தருணம் இது, ஆசிரியர்கள் இறப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரப்போவது பிசாசா? பூதமா?

பூமுகன்

இராணுவக் கட்டமைப்புக்களில் தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாற்றம் மாவட்ட ரீதியான இராணுவ ஆளுகையை மாற்றியமைக்கிறது. கிளிநொச்சி மாவட்ட படைத்தளபதி யாழ். மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்படும் அதே வேளை 2009 ஆம் ஆண்டு போர் முடிவுற்ற பின்னர் யாழ். மாவட்ட தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ராணுவ படைத் தலைமையகத்துக்கு மாற்றலாகிச் செல்கிறார்.

இந்த மாற்றங்கள் விருப்பு வெறுப்புக்களுக்கு உடன்பட்டவையே. அதாவது தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தப் பதவிக்கு யார் அமர்ந்தாலும் ஆகப்போவது ஒன்றும் இல்லை என்பது நன்றாகவே தெரியும்.

ஆனாலும் தமிழ் மக்களுக்கு தாம் செய்துவரும், செய்த நல்ல விடயங்கள் பற்றி இராணுவத் தரப்பினர் தாம் பிரசன்னமாகும் அனைத்து நிகழ்வுகளிலும் பரப்புரை



செய்தே வருகின்றனர்.

குறிப்பாக வாழ்வாதார உதவித் திட்டங்கள், வீடமைப்பு குறித்து அவர்களது விவரங்கள் விலாவாரியாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் தமிழ் மக்களுக்கு இராணுவம் இழைத்த கொடுந் துயரங்கள் இதன் மூலம் மறைந்துவிடாது.

யாழ்ப்பாணத்தில் ஹத்துருசிங்க காலத்திற்கு முன்னர் நிகழ்ந்ததைப் போன்று ஹத்துருசிங்கவின் காலத்தில் நிகழாது விடினும் அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆங்காங்கே சூட்டுச் சம்பவங்களும் கேட்கின்றன. இவை இனியும் நடைபெறாது என்பதற்கு எந்த ஏதுக்களும் இல்லை.

பெயரற்ற மனிதர்களின் சொந்தக்காரராக மஹிந்த ஹத்துருசிங்க வர்ணிக்கப்பட்டவர். அதாவது இவரின் கீழ் ஆயுதக் குழு ஒன்று குடாநாட்டில் செயற்பட்டு வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகவே குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். உண்மையில் இன்று வரை இவ்வாறான குழுக்கள் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாக நடமாடுகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது.

துப்பாக்கிதாரர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த முடியாத சூழலே யாழ்ப்பாணத்தில் இன்றும் நிலவுகிறது.

இதற்கு முக்கிய காரணமாகப் படையினரின் பிரசன்னம் அமைகிறது. பொது மக்கள் ஒன்றுகூடும் எல்லா இடங்களிலும் இராணுவத்தினரும் சிவில் உடை தரித்த அநாமதேய நபர்களும் சூழ்ந்து கொள்வது வழமையாகி விட்டது. அதாவது பொலிஸாருக்கு உடைய வேலைகள் பெரும்பாலானவற்றை இராணுவத்தினரே செய்துவருகின்றனர்.

வீதிப் போக்குவரத்துப் பொலிஸாருக்கு உதவியாக பல இடங்களில் இன்று இராணுவத்தினர் செயற்பட்டு வருகின்றனர். மக்கள் குழுக்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளின் போது விலக்குத் தீர்ப்பதற்கும் இவர்களே புகுந்துவிடுகின்றனர்.

இவ்வாறு பொதுமக்களுக்கு எப்போதும் இடையூறாக இருக்கும் இராணுவத்தினரை வடக்கு கிழக்கு பகுதிகளை விட்டு விலக்க வேண்டும் என்று சர்வதேசப் பிரதிநிதிகள் உட்பட உள்ளூர் அரசியல் தலைவர்களும் வலியுத்தி வருகின்றனர்.

போர்க்குற்றங்களைப் புரிந்த இராணுவத்தினர் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு நட்பானவர்களாக மனிதநேயமுள்ளவர்களாக இருந்துவிட முடியாது. அப்படி இருந்தாலும் அதைத் தமிழ் மக்கள் மனப்பூர்வமாக ஏற்பதற்கு தயாராக இல்லை.

இன்றளவும் இலங்கையில் இடம்பெற்ற இடம்பெற்ற மனிதப் பேரவலங்கள் குறித்தும் அதற்குக் காரணம் ஆனவர்கள் குறித்தும் உலக அழுத்தங்களோடு ஆராய்ந்து வரும் மனித நேய அமைப்புக்கள் இலங்கை இராணுவத்தை மனிதநேயம் கொண்ட படைத்தள பண்புமிக்க இராணுவ வீரர்களாக ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

ஆனாலும் எம்மிடத்தில் இந்த நிலை சற்று மாறுபடுகிறது.

குறிப்பாக எந்த இராணுவம் எமது உரிமைகளையும், நிலங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டதோ அந்த இராணுவக் கட்டமைப்புக்கு நம்மில் சிலர் மரியாதை செலுத்தவும் அவர்களை நலநோம்பிகளாக வெளிப்படுத்தவும் முற்படுகின்றனர்.

**மாப்பிளை மோதிரம்**

கடந்த நான்காம் திகதி மஹிந்த ஹத்துருசிங்கவின் மதியபோச விருந்து வயாவிளானில் அமைந்துள்ள அவர்களது விடுதியொன்றில் நடைபெற்றது.

இந்தப் பிரிவுபசார விழாவுக்கு வட பகுதியைச் சேர்ந்த பலர் அழைக்கப்பட்டிருந்தனர். அங்கு மது உள்ளிட்ட விருந்துகள் அவர்களுக்குப் படைக்கப்பட்டன. ஓசி என்றால் நஞ்சருந்தும் நல் மனம் படைத்த பலர் ஹத்துரு சிங்கவின் பியரை பருகி மகிழ்ந்தனர்.

யாழ். மாவட்டத்தின் கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடைய நபர் ஒருவரும் நிகழ்வுக்கு வந்திருந்தார். யாழ். மாவட்டத்தில் வளர்ந்துவரும் கிரிக்கெட் வீரரை உருவாக்கும் தன்மைகொண்ட இவர் அதற்காக கிரிக்கெட் வீரர்களுக்கு எவ்வகையில் கௌரவம் வழங்கினாரோ தெரியவில்லை. ஆனால் மாற்றலாகிச் செல்லும் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கு அவர் விரும்பாத போதும் அன்போடு அரவணைத்து தங்க மோதிரம் ஒன்றை பரிசளித்திருக்கிறார் அந்த நபர். அதுமட்டுமல்ல இன்னும் பல பரிசுகள் குவிந்தன.

**வெட்கி தலைகுனிய வேண்டும் தமிழன்**

இலங்கை இராணுத்தை போர்க் குற்றவாளிகளாக திட்டித் தீர்த்தபடி காணாமற் போன தன் கணவனையும் பிள்ளைகளையும் தேடி கண்ணீர் விட்டழும் ஒரு பகுதி ஒரு பகுதி மக்கள் கூட்டம்.

எங்கோ ஒரு மூலையில் எந்தத் தேவைகளும் அற்று தமிழர்களுக்கு ஏற்பட்ட துயரங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என குரல்கொடும்துக்கொண்டு இருக்கிறது இன்னொரு கூட்டம்.

பாதிக்கப்பட்ட கொடும் துயரங்களை அனுபவித்த தேசத்தில் இருந்து அதற்கு காரணமானவர்களுக்கு கைலாகு கொடுத்து மாலை அணிவித்து. தங்கம் அணிவித்து ஒரே மேசையில் இருந்து உண்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறது இன்னுமொரு கூட்டம். தமிழனின் தலைவிதி இதுதான்.







**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

உங்கள் ராசிநாதன் செவ்வாய் ஆறாம் இட அமர்வில் நற்பலன் வழங்குகிறார். ஆறாம் இட அதிபதி புதன் ஜீவன ஸ்தானத்தில் இருந்து, கூடுதல் பலன் தருகிறார். நண்பர்களிடம் உருவான சச்சரவு மறந்து அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். வாழ்வில் கூடுதல் வளம்பெற, புதிய வாய்ப்பு உருவாகும். குடும்பச் செலவு சரிக்கட்ட கொஞ்சம் பணக்கடன் பெற வேண்டியதிருக்கும். இல்லறத்துணை அதிருப்தி மனதுடன் நடந்து கொள்வார். தொழிலில் வளர்ச்சி பெற, உரிய கவனம் கொள்வீர்கள். பணியாளர் நிர்வாகத்தின் வழிகாட்டுதல் தவறாமல் பின்பற்றவேண்டும்.




**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு ஆறு, எட்டாம் இட அதிபதிகள் முறையே சுக்கிரன், குரு அனுகூல சஷ்டாஷ்டக அமர்வில் இருந்து, விபரீத ராஜயோக பலன்களை அள்ளி வழங்குகின்றனர். சனி, ராகு கூடுதல் நற்பலன் தருகின்றனர். துவங்குகிற நற்செயல்கள் முழு அளவில் நிறைவேறும். உங்களின் மதிப்பு, மரியாதை சமூகத்தில் கூடும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் விருப்பம் நிறைவேற்றுவதால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, சில சீர்திருத்தம் செய்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை எளிதில் வந்து சேரும்.




**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு சுக, பூர்வ புண்ணிய ஸ்தான அதிபதிகள் முறையே புதன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். கேது, உங்கள் மனதில் ஆன்மிக நம்பிக்கை வளர உதவுகிறார். அதிர்ஷ்டகர பலன்கள் நடந்து மகிழ்ச்சி உற்சாகம் பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் உதவி ஓரளவு கிடைக்கும். புத்திரரின் நற்செயல் பெருமை தேடித்தரும். எதிர்மனப்பாங்கு உள்ளவரிடம் விலகுவது காலவிரயம் தவிர்க்க உதவும். இல்லறத்துணை உங்களின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய அதிகம் பணிபுரிவீர்கள்.




**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உங்கள் ராசிக்கு, பூர்வ புண்ணிய, ஜீவன ஸ்தான அதிபதியாகிய செவ்வாய், மூன்றாம் இடத்தில் அனுகூலமாக உள்ளார். தன ஸ்தான அதிபதி சூரியன், குரு பார்வை பெற்று, நற்பலன் வழங்குகிறார். செயல் நிறைவேற, இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். பணவரவு அதிகம் பெற வரும், புதிய வாய்ப்புகளை பயன்படுத்துவீர்கள். அக்கம் பக்கத்தவருடன், நல் அன்பு வளரும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். புத்திரர், உங்கள் சொல்படி நடந்து, மனதில் நிம்மதி உருவாக்குவர். எதிரி இடம் மாறிப் போகிற நன்னிலை ஏற்படும். மாணவர்கள், அதிக விலைஉள்ள பொருள் கவனமுடன் பயன்படுத்தும்.




**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு தன, லாபஸ்தான அதிபதி, புதன் ராசிக்கு ஆறாம் இடத்திலும், ஆதாய ஸ்தானத்தில் உள்ள குரு, புதனுக்கு அனுகூல சஷ்டாஷ்டக அமர்விலும் உள்ளனர். சனி, ராகு கூடுதல் அளவில் நற்பலன் தருகின்றனர். மனதில் புதிய சிந்தனை, தைரியம் உருவாகும். சமயோசித செயலால், வெற்றி இலக்கை எளிதில் அடைவீர்கள். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து, நல்வழி நடத்துவீர்கள். நகை இரவல் கொடுக்க, வாங்க கூடாது. மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில், தகுந்த கவனம் வேண்டும்.




**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு தன, பாக்ய ஸ்தான அதிபதியாகிய சுக்கிரன் மட்டுமே, முழு அளவில் நற்பலன் தருகிறார். மற்ற கிரகங்கள் அனுகூலமின்றி உள்ளனர். ஆடம்பர எண்ணங்களுடன் செயல்படுவதால், சேமிப்பு பணம் குறைவதும், பணம் கடன் பெறுகிற நிலையும் உருவாகலாம். கவனம் தேவை. புதியவர்களிடம் பேசுவதில் நிதானம் பின்பற்ற வேண்டும். வீடு, வாகனத்தில், கூடுதல் பாதுகாப்பு அவசியம். மனைவி, மகளின் ஜாதக யோக பலன், உங்களின் வாழ்வு கூடுதல் வளம் பெற, துணை நிற்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்த முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும்.




**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் இராசிநாதன் சுக்கிரன், புதனுடன் நான்காம் இட அமர்வில் அனுகூலமாக உள்ளார். சூரியன், குரு சம சப்தம பார்வையில் நற்பலன் வழங்குகின்றனர். சூழ்நிலையின் நிர்பந்தத்திற்கு உட்படாமல், மனசாட்சியின் குரலுக்கு மதிப்பு தந்து, செயல்படுவீர்கள். நல் அன்பு கொண்டவர், உங்களை பாராட்டுவர். புத்திரர் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். எதிரி வியந்து பார்க்கிற நிலை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். அரசு தொடர்பான உதவிபெற அனுகூலம் உண்டு. மாணவர்கள் படிப்பில் சிறப்பான தேர்ச்சி அடைவர்.




**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

உங்களின் வாக்குஸ்தானம், இரண்டாம் இடத்தில் சனி, ராகு செவ்வாயின் பார்வை பதிகிறது. இதனால் பேச்சில் விரக்தி, அலட்சிய மனப்பாங்கு வெளிப்படலாம். குருவின் பார்வையும் அதே இடத்தில் பதிவதால், நற்குணம் உள்ளவர் ஆலோசனை சொல்ல முன் வருவர். மதித்து நடப்பதால் நன்மை பெறலாம். பூர்வ சொத்தில், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். புத்திரரின் செயல்களை கண்காணித்து நன்மைபெற உதவுவீர்கள். இல்லறத்துணைகுடும்பநலம் காத்திடுவார். தொழில், வியாபாரத்தில் நிலவுகிற அனுகூலம். உத்தியோகஸ்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி, வேலை வாங்குவது நல்லது. பெண்கள், கணவரின் நல்லகுணம் பாராட்டி பெருமைப்படுத்துவர்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு இரண்டாம் இடம் வாக்குஸ்தானத்தில், சுக்கிரன் அனுகூலமாக உள்ளார். இராசிநாதன் குரு மற்றும் சனி, ராகு நற்பலன் தருகின்றனர். இனிய வார்த்தை பேசி, புதியவர்களின் அன்பு, நட்பு பெறுவீர்கள். இல்லறத்துணை உங்களின் கருத்துக்களை மதித்து செயல்படுவார். பணியாளர்களுக்கு எளிய முயற்சியால், சலுகை கிடைக்கும். பெண்கள், உறவினர் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடைபெற உதவு வர். மாணவர்கள், பெற்றோரின் வழிகாட்டுதல்படி நடந்து கொள்வர்.




**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு, சுக்கிரன் தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மட்டுமே, அனுகூல பலன் வழங்குகின்றனர். செயல்களில் அக்கறையுடன் ஈடுபடுவதால் மட்டுமே, எதிர்பார்த்த பலன் ஓரளவு கிடைக்கும். உறவினர்களின் அதிருப்தியை பெறாத அளவிற்கு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் பேசுவது, நன்மை பெற உதவும். பெண் தெய்வ அருள் பலம், வாழ்வில் கூடுதல் வளம் பெற, புதிய பாதையை உருவாக்கும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் குடும்ப நலம் பேணுவார். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை, பணவரவு இருக்கும். பணியாளர்கள், உடல்நலம் கவனமுடன் பேணுவதால், பணியில் ஈடுபாடு வளரும்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு, நான்காம் இடமான தாய், ஒன்பதாம் இடமான தந்தை, ஸ்தான அதிபதி சுக்கிரன், பன்னிரெண்டாம் இட அமர்வில், அனுகூலமாக உள்ளார். கேது, குரு, சூரியன் நற்பலன் தருகின்றனர். முன்னோர் செய்த புண்ணியத்தின் பலன், உங்களின் வாழ்வு கூடுதல் வளம் பெற துணை நிற்கும். பணியில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். புத்திரரின் சொல், வேத வார்த்தைக்கு இணையாக இருக்கும். தொழிலில் குளறுபடி நிவர்த்தியாகி, வளர்ச்சி பாதையில் நடைபோடுவீர்கள். பணியாளர்கள், அதிக வேலை வாய்ப்பு, உபரி பணவரவு பெறுவர்.




**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

உங்கள் ராசிக்கு சுக, சப்தம ஸ்தான அதிபதி சுக்கிரன், புதனுடன் பதினொன்றாம் இடத்தில், அனுகூலமாக உள்ளார். சூரியன் ஜீவன ஸ்தானத்தில் இருந்து நற்பலன் வழங்குகிறார். அஷடமச்சனியின் தாக்கத்தில் விடுபட்டு, புதிய முயற்சிகளை துவங்கி, வளமும், பணபலமும் பெறுவீர்கள். இளைய சகோதர வகையில், மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புத்திரர் அறிவு, ஞாபகத் திறனில் வளர்ச்சி அடைவர். உடல் நலஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத் துணை, உங்கள் நற்குணம் பாராட்டுவார். தொழிலில், அரசு தொடர்பான உதவி பெற, நல்யோகம் உண்டு. உத்தியோகஸ்தர் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நீ -நீயாக இரு அது போதும்"

வெயிட்டிலிப்ஸ் என்பவர் வெற்றிகரமான வியாபாரி. அவர் சொன்னார், "என்ன செய்வது என்று தீர்மானித்து அதன் வழி செயல்பட வேண்டிய ஒரு நேரம் வரும். அப்போது செயல்பட வேண்டும். திரும்பிப் பார்க்கக் கூடாது" என்று. சீக்கிரம் செல்வந்தராவதற்கு அவருடைய ஆலோசனையை நீங்கள் ஏற்க வேண்டும்.

நேராக முன்னோக்கிப் பாருங்கள். உங்களுக்கு முன்னால் தான் உங்கள் எதிர்காலம் இருக்கிறது. 'இன்று' என்பதன் விரிவாக்கம் தான் 'எதிர்காலம்' இதை மறவாதீர்கள். ஆகவே (1) சரி- ஆம் என்று எடுத்த எடுப்பில் நீங்கள் சொல்வதாக இருந்தாலும், (2) 'இல்லை' 'முடியாது' என்பதை தாமதமாகச் சொல்பவராக இருந்தாலும் -அதன் விளைவு உங்கள் எதிர்காலத்தைப் பொறுத்து ஆகும்.

உங்கள் எதிர்காலம் மிக முக்கியமானது. அதனை உள்மனம் சொல்கிறது என்பதற்காக வேறு எதனிடமும் ஒப்படைத்து விடாதீர்கள். உங்கள் உள்மனதை சில உணர்ச்சி மிக்க வார்த்தைகளால் கண்டியிழுத்து விட முடியும்.

தாங்கள் விரும்பியதையெல்லாம் எய்திய வெற்றிகரமான மனிதர்கள் உள்ளனர். அவர்கள் கையாண்ட வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிகளை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். கடைப்பிடிக்க வேண்டும். அதில்தான் உங்கள் எதிர்காலம் அடங்கியிருக்கிறது.

வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிமுறைகளைக் கற்கும் போதே சரளமாகப் புழங்குகின்ற பல ஆலோசனைகள் எல்லாம் எவ்வளவு அர்த்தமற்றவை என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

'நீ- நீயாக இரு' அது போதும் என்று ஒரு ஆலோசனை அடிக்கடி சொல்லப்படுவது உண்டு. இது தான் மிக மோசமான புத்திமதி.

"நீ- நீயாக இரு; அது போதும்" என்று ஆளுமை வளர்ச்சி ஆலோசகர்களும் வழி காட்டிகளும் புத்திமதி சொல்லி வருகிறார்கள். பல ஆண்டுகளாக அதை நான் அறிவேன்.


நாம் நாமாகத்தான் இருக்க முடியும்! வேறு எப்படி ஆவது? இது உண்மை தான்! ஆனால் "நீ -நீயாக இரு" என்கிற இந்தப் புத்திமதி - ஒரு வகையில் முகஸ்துதியாக இருக்கிறது. அதன் நோக்கம் எதுவாக இருந்தாலும் - "மற்றவர்களைப் போல் இருக்காதே" என்று கூறும் போது -"வெற்றி பெற்ற மற்றவர்களைப் போல் இருக் காதே" என்றும் பொருள் தருகிறது. அல் லவா? "நீ - நீயாக இரு" என்ற புத்திமதி ஒரு புகழ்ச்சியான சொல். அதை ஏற்று நீங்கள் உங்கள் பாதையிலேயே சென்றால் இதனைப் படிப்பதால் ஒரு பயனும் இல்லை. ஏன் என்றால் வெற்றி பெற்ற மனிதர்களைப் போல் நீங்கள் ஆவது எப்படி என்று போதிப்பது தான் இதன் நோக்கம். தலைவர்களானவர்கள், பெரும் செல்வம் சேர்த்தவர்கள், புகழ்பெற்றவர்கள், வாழ்க்கையில் தாங்கள் விரும்பியதையெல்லாம் அடைந்தவர்கள் இவர்களைப் போல நீங்கள் வெற்றி பெறுவது எப்படி என்று திட்டவட்டமாகக் கற்றுக் கொடுப்பது தான் இதனுடைய நோக்கம்.

நீங்கள் தலைமைப் பொறுப்பை - அதிகாரத்தை- புகழை- விரும்பினால் வாழ்க்கையில் உயர் குறிக்கோளை எட்ட விரும்பினால் அதற்கு ஒரே வழி இது தான். இந்த இலக்கை எய்துவதற்கு மற்றவர்கள் கையாண்ட முறைகளையும், அவ்வாறு வெற்றி பெற்றவர்களிடம் இருந்த தனிப்பட்ட தன்மைகள் குணங்கள் இவற்றையும் நீங்கள் வளர்த்துக் கொள்வது ஒன்று தான், உங்கள் இலட்சியத்தை எய்துவதற்கான வழி.

• வெற்றிகரமான மனிதர்களிடம் இருந்த தனிப்பட்ட தன்மைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். வெற்றி பெற்றவர்கள் 'கையாண்ட வழிமுறைகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அதன் வாயிலாக நீங்கள் மாற்றம் பெறுவீர்கள். மாற்றம் பெறுவதே சிறந்தது. நல்லது. நலன் விளைக்கும் மாற்றத்தை அடையாமல் யாரும் வெற்றி பெற்றது இல்லை. எனவே மாற்றம் அடைவதே நன்மைக்குத்தான். எவ்வளவு மாற்றம் அடைகிறீர்களோ அந்த அளவு வெற்றி பெறுகிறீர்கள். உங்களுக்கு மேலும் பாதுகாப்புக்கள் கூடும்.

"டைனாசரஸ் " என்பது பிரமாண்டமான மிருகம். அந்தக் காலத்தில் "நீ - நீயாக இரு" என்கிற புத்திமதிப்படி அது இருந்தது. இந்த பிரமாண்டமான மிருகம் மாறுதலை ஏற்கவில்லை. மாற்றம் பெறவில்லை. இன்று அந்த இனமே அழிந்துவிட்டது.

எப்போதுமே இது தான் உண்மையாக இருந்திருக்கிறது. இப்போதும் அது தான் உண்மை. "நீ-நீயாக இரு" என்கிற புத்திமதிப்படி நாம் நாமாக இருந்துவிட்டால் போதாது. தொடர்ந்து மாற்றம் பெறுவதைப் பொறுத்தே வெற்றியானது அமைகிறது. வெற்றிகரமான வழிகளைக் கையாண்டு - வெற்றிகரமான ஆளுமையை வளர்த்துக் கொள்வது- அவ்வகையில் மாற்றம் அடைவது- இவற்றைப் பொறுத்தே வெற்றி அமையும்.



இன்றைய நிலைமையோடு நின்று விடாதீர்கள். இன்றைய நிலையிலிருந்து மாற்றம் பெற்று, உங்களை வளர்ச்சி அடையச் செய்வது தான் இதனுடைய நோக்கம்.

நீங்கள் கற்றுக் கொண்ட வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிமுறைகளைக் கையாண்டு - மாற்றம் பெற்று, உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். வெற்றிகரமாக உங்களை சுய அபிவிருத்தி செய்து கொள்வது எப்படி என்பதைக் கற்றுக் கொடுப்பது ஒன்று தான் இதன் சீரிய நோக் கம். சுய அபிவிருத்தி என்பது மாற்றம் அடைவது தான்.

அத்தகைய மாற்றம் என்பது உயர்வையே குறிக்கோளாகக் கொண்டது ஆகும்.

நீங்கள் மாறுவதன் வாயிலாக மாற்றம் அடைவதன் வாயிலாகத்தான் வளர்ச்சி அடைய முடியும். மாற்றத்தை மறுக்காதீர்கள். ஆவலுடன் மாறுதலை எதிர்கொள்ளுங்கள். உங்களது கற்பனா சக்தியே உங்களுக்குப் பாடம் போதிக்கும் ஆசிரியராக இருக்கக் கூடும்' உங்களது கற்பனா சக்தியின் வாயிலாக சுவராஸ்யமான திருப்பங்கள் - சவால்கள் விடும் நிலவரங்கள் இவற்றை நீங்கள் உருவகப் படுத்திக் கொள்ளலாம். அப்படிக் கற்பனை செய்து உருவகப்படுத்தியுள்ள நிலவரங்களை, சவால்களை எப்படிச் சமாளிப்பது என்பதை உங்களது மனோ சக்தியின் வாயிலாகப் பயிற்சி செய்து கொள்ளலாம்.

உண்மையான நடைமுறை நிலவரங்களை எதிர்நோக்காமலே கற்பனையின் மூலம் நீங்கள் உங்களது வழிமுறைகளை - அணுகுமுறைகளை மேம்படுத்திக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக இதைப் பார்ப்போர் எஜமானராக நீங்களே இருப்பதை நீங்கள் விரும்புவீர்களா?

அதற்கான தலைமைத் தகுதிகள் உங்களிடம் உள்ளனவா? உங்களுடைய மேற்பார்வையில் உள்ள தொழிலாளர்கள் மோசமான முறையில் வேலை செய்வதை நீங்கள் எப்படித் திருத்து வீர்கள்? தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் முறையீடுகள் இவற்றை எப்படிக் கையாள்வீர்கள்? இன்னும் கூடுதல் திறமையுடன் வேலை செய்யுமாறு உங்களிடம் வேலை பார்க்கும் தொழிலாளர்களை எப்படி இயக்கி வைப்பீர்கள்? தொழிலாளர்களை ஊக்கப்படுத்த எத்தகைய திட்டத்தை அறிமுகப் படுத்துவீர்கள்? என்னென்ன மாறுதல்களை நீங்கள் செயல்படுத்துவீர்கள்? எப்படி விஷயங்களை மேம்படுத்துவீர்கள்?

நீங்களே எஜமானராக ஆனால் என்னென்ன நிலைமைகளை எப்படிச் சமாளிக்க வேண்டியிருக்கும் என்பதைப் பற்றி சில கேள்விகளைக் கண்டோம். இப்படிக் கற்பனையாக உருவகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்களுடைய அதிபரின் நிலைக்கு நீங்கள் உயர வேண்டுமானால் நீங்கள் எதையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நீங்கள் பெறும் பதில்களிலிருந்து துல்லியமாகத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் கம்பனியில் அல்லது தொழிலில் உச்சகட்ட பதவியை எட்டுவதென்றால் கூட உங்களுக்குத் தேவைப்படும் தகுதிகள் எவை என்பதை இந்தப் பதில்கள் உங்களுக்குப் புலப்படுத்தும்.

நீங்கள் நிர்வாகத்தில் பதவி வகிப்பவராக இருந்தால் உங்களை ஒரு தொழிலதிபராக நீங்களே கற்பனை செய்து கொண்டு, உங்களை நீங்களே சுயவிமர்சனம் செய்து கொள்ளுங்கள். உங்கள் பெயர் ஜோ என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆக நீங்களே அதிபர் எஜமானரானால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். ஜோ என்பவர் தனது எஜமானரிடம் அதிபரிடம் என்னென்ன தன்மைகள் இருக்க வேண்டும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

ஜோ என்கிற உங்களுக்கு நீங்களே ஒரு நல்ல மேற்பார்வையாளராக இருக்க முடியுமா என்று கற்பனை செய்து பாருங்கள்.

(வளரும்) •

சுடர் ஒளி வாசகர்களே!
குடத்துள் இட்ட விளக்காக
உங்களுக்குள் மறைந்து கிடக்கும்
படைப்புத் திறன்களைக் குன்றின்
மேல் தீபமாக்கிட சுடர் ஒளி
காத்திருக்கிறது.
சிறுகதை, கவிதை, கட்டுரை,
துணுக்குகள், எதுவானாலும்
அனுப்பிவையுங்கள்.
தரமானவை பிரசுரிக்கப்படும்.
படைப்புக்களை அனுப்பவேண்டிய
முகவரி:
சுடர் ஒளி,
இல.361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்குமரன் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனத்தின் சி.வி.குமார் தொடர்ந்து இளம் திறமையாளர்களை அறிமுகப்படுத்தி வருகிறார். தினேஷ் (அட்டக்கத்தி), கார்த்திக் சுப்புராஜ் (பீட்சா), நலன் குமாரசாமி (சூதுகவ்வும்) மற்றும் இந்த படங்களுக்கு இசை அமைத்த சந்தோஷ் நாராயண் ஆகியோர் சி.வி.குமாரின் அறிமுகங்களே. தான் அறிமுகப்படுத்தியவர்களோடு இணைந்து 2014ஆம் ஆண்டு மீண்டும் படம் தயாரிக்க இருக்கிறார் சி.வி.குமார். நலன் குமாரசாமி எக்ஸிமோ காதல் என்ற பெயரில் அடுத்த படத்துக்கான கதையைத் தயார் செய்துள்ளார். இதனை சி.வி.குமார் தயாரிக்கிறார். பெப்ரவரியில் படப்பிடிப்பு தொடங்குகிறது. தற்போது ஜிகிர்தண்டாவை இயக்கி வரும் கார்த்திக் சுப்புராஜ், அடுத்து சி.வி.குமாருக்கு படம் இயக்குகிறார். 2014 இன் நடுப்பகுதியில் இந்த படப்பணிகள் ஆரம்பமாகின்றன. இரண்டு படங்களுக்குமே சந்தோஷ் நாராயணன்தான் இசை. இரண்டில் ஒரு படத்தில் விஜய் சேதுபதி நடிக்கிறார்.

## மீண்டும் வாய்ப்பு

## கள்ளிச்செடியாகாதீர்

என்னமோ நடக்குது பட இசை வெளியீட்டு விழா மேடையில், 'சூது கவ்வும் இயக்குநர் நலன் குமாரசாமி, 'எதிர்நீச்சல் இயக்குநர் துரை.செந்தில்குமார், 'ராஜா ராணி அட்லி, 'மூடர் கூடம் நவீன், 'விடியும் முன் கே.பாலாஜிகுமார் என ஐந்து பேரையும் கௌரவித்து பாலுமகேந்திரா, பாரதிராஜா கையால் விருது கொடுத்தார்கள். இதன்போது பாரதிராஜா பாராட்டிப் பேசும்போது, ''எல்லோரும் படம் நன்றாக எடுக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் தேக்கு மரம், சந்தன மரம் போல் வளர வேண்டும். கள்ளிச் செடி போல் வளராதீர்கள்'' என அறிவுரை கூறினார்.



## காதலுக்க

எனக்கு இ
படுகிறார்
காதல் செ
மூன்று பட
பணும் பா
இவர் தற்
சொல்லும்
நவிர, சினி
கல்லூரி
இப்
மாணவ
அதுக்
என்றா
னம் எ
ஓ

மலையாளத்தில் 'த்ரிஷ்யம்' மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றதால், படத்தின் தமிழ்ப்பதிப்பு உரிமையை ஒரு கோடி ரூபாய்க்கு வாங்கியுள்ளனர். இதுவரை இந்த தொகைக்கு எந்த மலையாளப் படமும் விலைபோனதில்லையாம். அதனால் கமல் மாதிரி முன்னணி நடிகர்கள் நடித்தால் படத்தை பிரமாண்டமாக்கி பெரிய தொகையை எடுத்து விடலாம் என்று அவரை அணுகியுள்ளார்களாம். ஆனால் கமல்தரப்பு இன்னும் உரிய பதிலை சொல்லவில்லை. விஸ்வரூபம்-2 வந்த பிறகுதான் எதையுமே சொல்ல முடியும் என்று கூறி விட்டாராம். இந்த நிலையில், இந்த படம் கமலிடம் சென்று விட்ட தகவலை அறிந்த மீனா, மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறார். மலையாளத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக நடித்த தான் தமிழில், கமலுக்கும் ஜோடியாக நடித்து விட வேண்டும் என்று துடித்துக்கொண்டிருக்கிறார். ஏற்கனவே அவ்வை சண்முகி படத்தில் கமலுடன் நடித்தவர் என்பதால், தான் அவருடன் நடிக்க தகுதி உள்ள நடிகைதான் என்பதால் சம்பந்தப்பட்டவர்களை அணுகி, தனது விருப்பத்தை தெரிவித்துள்ளாராம் மீனா.

ஒருவேளை, கமல் மறுத்தால் பசுபதியை வைத்து படத்தை இயக்குவோம் என்று மீனாவிடம் சொன்னபோது, அதனாலென்ன அவருடனும் குசேலன் படத்தில் நடித்திருக்கிறேனே. தமிழில் எந்தநடிகரை வைத்து இயக்கினாலும் கதாநாயகி வாய்ப்பு எனக்குத்தான் தர வேண்டும் என்று அன்புக்கட்டளை போட்டு வைத்திருக்கிறாராம் மீனா.



## கமலா? பசுபதியா?



## ரஜினிக்கு பதி

பிரமாண்ட இயக்கு
படம் முடித்த பிறகு
யைக் கையில் எடுக்
விக்ரம், எமி ஜா
ஷங்கர் இயக்கும் ப
சினிமா வாழ்வில்
படமாக 'ஐ' இருக்
பார்க்கப்படுகிறது.
உடல் எடையை
தனுஷ் போல இரு
புகைப்படங்கள் வெ
தின் எதிர்பார்ப்பை
துள்ளன. 'ஐ' பட
ரஜினியை வைத்து
வார் என்று சொல்
போது, சரித்திரக்க
ஷங்கர் விரும்புகிறா
அதுவும் மகாப
கதையை படமாக்க
கர்ணன் பாத்திரத்
தான் சரியாக இ
நினைத்த ஷங்கர்,
நடிக்க சம்மதமும்
ஷங்கர் இயக்கத்தில்
பில் கர்ணன் படம்
றால் அதில் பி
பஞ்சம் இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...க்காக கவலை

...கு இன்னும் காதல் வரவில்லையே என்று கவலைப் ...றார் நடிகை மனிஷா.வழக்கு எண் 18/9, 'ஆதலால் ...ல் செய்வீர், 'ஜன்னல் ஓரம் என்று குறுகிய காலத்தில் ...று படங்களை முடித்துவிட்டு, 'பட்டையைக் கெளப் ...ம் பாண்டியா படத்தில் நடித்து வருகிறார் மனிஷா. ... தற்போதும் கல்லூரி மாணவிதான். அதுபற்றி அவர் ...ல்லும் போது, பேருக்குத்தான் கல்லூரியில் சேர்ந்தேனே ..., சினிமா வாய்ப்புகள் வர ஆரம்பித்ததால், அப்புறம் ...ல்லூரிக்குப் போகாத வருகை மாணவி ஆகிவிட்டேன்.

இப்படி கல்லூரிக்கு ஒழுங்காகச் செல்லாததால் சக ...ணவர்கள் யாரும் என்னைக் காதலிக்கவில்லை. ...துக்கான வாய்ப்பை நானும் கொடுக்கவில்லை. ...ன்றாலும் காதலுக்காக காத்திருக்கிறேன்.எனக்கு நட ...னம் என்றால் உயிர். ஆனால், இதுவரை நான் நடித்த ஒரு படத்தில்கூட முழுசா ஆடமுடியவில்லை. முழுக்க முழுக்க நடனத்தை மையமா எடுக்கும் ஒரு படத்தில் நாயகியாக நடிக்க வேண்டும்

# சர்ச்சை சமந்தா

...ந்தா, ருவிட்டரில் எழுதும் கருத்துகள் பெரும்சர்ச்சையாகிவிடுகின்றன. டெல்லியில் ஆம் ஆத்மி வெற்றி பற்றி தெரிவித்த கருத்து, மகேஷ்பாபு நடித்து வெளியாகவிருக்கும் ஒரு தெலுங்குப் படத்தின் சுவரொட்டி பற்றி தெரிவித்த கருத்து என வரிசையாகச் சர்ச்சைகள் கிளம்ப, சமந்தாவுக்கு சிக்கல் நிலை தோன்றியுள்ளது. கட்சிக்காரர்களாலும் , மகேஷ் பாபுவின் ரசிகர்களாலும் செல்லும் இடமெங்கும் அவருக்கு தொல்லையாக இருக்கிறதாம். இதனால் தன்னுடைய ருவிட்டர் கணக்கை கைவிட்டு விடலாமா என யோசிக்கிறாராம் சமந்தா.



# இணைகிறார்கள் விஜயும் அஜித்தும்

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்களான அஜித், விஜய் இருவரையும் ஒரே படத்தில் நடிக்க வைக்கப் போகிறேன் என்று பரபரப்பை பற்ற வைத்துள்ளார் இயக்குநர் வெங்கட் பிரபு. இவர் அஜித்தை வைதது மங்காத்தா என்ற மாபெரும் வெற்றிப் படத்தைக் கொடுத்ததால், வெங்கட் மீது அஜித்துக்கு தனி மரியாதை உண்டு. அதேபோன்று வெங்கட் பிரபு இயக்குநராவதற்கு முன்னர் தனது படங்களில் நடிக்க விஜய் சந்தர்ப்பம் கொடுத்தி ருந்தார். சிவகாசி படத்தில் முக்கிய பாத்திரத்தில் வெங்கட் பிரபு தோன்றியிருந்தார். இப் போது இந்த இருவரையும் ஒரே படத்தில் நடிக்க வைக்க சம்மதம் வாங்கிவிட்டதாக வெங்கட் பிரபு அறிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

அஜித், விஜய் இருவரையும் நான் பலமுறை சந்திப்பேன். அவர்கள் இரண்டு பேரையும் சேர்த்துவைச்சு ஒரு படம் பண்ணவேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசை. அதை அவர்களிடமே சொன்னேன். சொல்லிவைச்ச மாதிரி, 'தாராளமாய் பண்ணலாம் வெங்கட். ஆனா, அந்தப் படத்தில் நான்தான் வில்லனாக நடிப்பேன் என்று ரெண்டு பேரும் ஒரே பதில் சொன்னாங்க. சும்மா விளையாட்டுப் பேச்சு இல்லை இது. அவர்கள் இரண்டு பேரும் இப்படி ஒரு படத்தில் நடிக்க உண்மையிலேயே விருப்பமா இருக்கிறார்கள். சரிசமமா இருவரும் திரையில் தோன்றக்கூடிய திரைக்கதையை யோசித்துக் கொண்டு இருக்கிறேன். அந்த வேலை முடிந்ததும் இருவரையும் இயக்குவது பற்றி அறிவிப்பேன்- என்றார்.



# ...பதில் மம்முட்டி

இயக்குநர் ஷங்கர் 'ஐ' ... பிறகு, சரித்திரக் கதை ... எடுக்கப் போகிறாராம். ... ஜாக்சன் நடிப்பில் ...தும் படம் 'ஐ'.விக்ரமின் ...வில் மறக்க முடியாத ... இருக்கும் என்று எதிர் ...றது.

...டையைக் குறைத்தபடி ...ல் இருக்கும் விக்ரமின் ...ள் வெளியாகி ஐ படத் ...ப்பை அதிகரிக்கச் செய் ... படம் முடிந்த பிறகு, ...வத்து ஷங்கர் இயக்கு ... சொல்லப்பட்டது. இப் ...த்திரக்கதையை எடுக்க ...புகிறாராம்.

... மகாபாரதக் கர்ணன் ...மாக்கப் போகிறா ராம். ...த்திரத்துக்கு மம்முட்டி ...க இருப்பார் என்று ...ங்கர், மம்முட்டியிடம் ...மும் வாங்கிவிட்டராம். ...கத்தில், மம்முட்டி நடிப் ... படம் வெளிவரும் என் ...ல் பிரமாண்டத்துக்குப் ...காது.

# அம்மாவான அமலாபால்



தமிழ் சினிமாவில்தான் கதாநாயகிகள் குழந்தைக்கு அம்மாவாக நடிக்க தயங்குகிறார்கள். ஆனால், மலையாள சினிமாவில் அப்படியல்ல. எத்தனை வயது குழந்தைகளுக்கும் தாயாக நடிக்கிறார்கள். சிலர் நரைமுடி பாத்திரங்களில் நடிக்கவும் தயங்குவதில்லை.அந்த அளவுக்கு இமேஜ் என்ற வட்டத்திற்குள் சிக்கிக் கொள்ளாமல் நடிக்கிறார்கள்.

அந்த வகையில், தமிழில் இளமைதுள்ளும் கதாநாயகியாக மட்டுமே நடித்து வரும் அமலாபால், தாய்மொழியான மலையாளத்தில் கனதியான வேடங்கள் வந்தால் விடுவதில்லை. தற்போது அவர் மலையாளத்தில் ஒரு படத்தில் இரண்டரை வயது குழந்தைக்கு தாயாக நடித்திருக்கிறார் .

அந்தப்படம் வெற்றி பெற்றிருப்பதால், அதேபோன்று கனதியான வேடங்களில் நடிக்குமாறு நிறைய இயக்குநர்கள் அமலாபாலை முற்றுகையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால், தமிழிலும் ஒய்வின்றி இருக்கும் அமலாபால், அடுத்தடுத்து மாறுபட்ட கதாநாயகி வேடங்களாக மலையாளத்தில் தெரிவு செய்து கொண்டிருக்கிறாராம். அதிலும் அடுத்தடுத்து விருது இயக்குநர்கள் சிலரது படங்களும் அமலாவுக்கு கிடைத்திருப்பதால், எதிர்காலத்தில் விருது வாங்க வேண்டும் என்கிற ஆசையும் அவருக்கு மேலோங்கியுள்ளதாம்.

இதற்கு முன்பு நரைமுடி கதாநாயகர்களுடன் நடிக்க தயங்கி நின்ற அமலாபால், இப்போது மம்முட்டி, மோகன்லால் போன்ற மூத்த நடிகர்களுடன் நடிக்கவரும் வாய்ப்புகளையும் ஏற்றுக் கொண்டு வருகிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இருளின் கதவைத் திறந்தவன்

● ஔண்யன்

அதிகாரத்தின் உச்சாணிக் கொம்பில் ஊஞ்சல் கட்டி, ஆனந்தமாக ஆடிய படியே உலகநாடுகளின் 'மொனிட்டராக' உலா வந்து கொண்டிருந்த அமெரிக்காவுக்கு யூலியன் கொடுத்த அடிகள் மறக்க முடியாதவை. ஒஸாமா பின்லேடன் நடத்திய செப்ரெம்பர் 11 தாக்குதலின் வீரியம் வெளிப்படை யாகத் தெரிந்தது. ஆனால் அதை விடவும் பன்மடங்கு வலியை யூலியனின் இணையத் தாக்குதல்கள் அமெரிக்காவுக்குஏற் படுத்தின. இந்த வலி யின் வேதனையை அமெ ரிக்கா முழுமையாக வெளிக்காட்டா விட்டாலும், உள்ளுக்குள் அது அடிபட்ட விலங் காக ஆத்திரத்தோடு யூலியனை வேட்டையாடவே அலைந்து கொண்டிருந்தது. தன்னை இவ்வளவு நாளும் பாடாய்ப்படுத்திய யூலியனுக்கு அமெரிக்கா கொடுத்த பதிலடி தான் சுவீடனைச் சேர்ந்த அன்னா மற்றும் சோபியா என்ற பெண்கள் மூலம் தொடுத்த வழக்கு என்று பெரிதும் நம்பப்படுகிறது. காரணம் அன்னா ஏற்கனவே கியூபாவில் சில வருடங்கள் வசித் தவர். அங்கு கியூபா ஜனாதிபதியும் அமெ ரிக்க எதிர்ப்பாளருமான பிடல் காஸ்ட்ரோவுக்கு எதிராகச் செயல்படும் ஒரு அமைப்புக்கு உதவியதற்காக, கியூபாவை விட்டு துரத்தியடிக்கப்பட்டவள் தான் அன்னா என்ற அழகி. அவள் உதவி செய்த - பிடல் காஸ்ரோவுக்கு எதிரான - அந்த 'அமைப்புக்கான பொருளாதார உதவிகள் எல்லாமே சி.ஐ.ஏ என்ற வாய்க்காலில் இருந்து பாய்கின்ற சங்கதிகள் எல்லாமே பரகசிய மானவை. மேலும் யூலியன் மீது வழக்குத் தொடர்ந்த சில மணித்தியாலங்களில் அன்னா வும், சோபியாவும் தாங்கள் யூலியனைச் சந்தித்து,உறவாடிய பொழுதுகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்ட தங்கள் இணையப் பதிவுகள் அனைத்தையும் (பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைகளில்தங்கள் அனுபவத்தை அவர்கள் முதலில் பதிவு செய்திருந்தனர்) அழித்து விட்டனர். நேரடியாக விக்கிலீக்ஸோடு மோதமுடியாது என்று நிச்சயப்படுத்திக் கொண்ட பின்னரே யூலியனின் படுக்கையறைக்குள் மறைந்துகொண்டு அவனைப் பழிதீர்க்க அமெரிக்கா முனைந்தது. தன் மீதான பழிவாங்கும் படலத்தை அமெரிக்கா முழுவீச்சோடு ஆரம்பித்து விட்டதையூலியன் உணர்ந்து கொண்டு தன்னுடைய இருப்பிடத்தை பிரிட்டனுக்கு மாற்றினான். அமெரிக்காவின் துரத்தல், சுவீடன் மோகினிகளின் சட்டச்சிக்கல்கள் என்று கடும் நெருக்கடியில் யூலியன் பிரிட்டனில்வந்திறங்கியதற்குப் பிறகு நடந்த சம்ப வங்கள், விரைவில் இணையத் தொழில் நுட்பத்தின் பாடங்களாக்கப் பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பிரிட்டனுக்குள் ஆறுமாத விஸாவுடன் யூலியன் வந்திறங்கியதாகக் கிடைத்த தகவலைத் தவிர வேறொன்றும் தெரியவர வில்லை. யூலியன் எவருக்குமே முன் பின்அறிவிக்காமல் தன்னுடைய அஞ்ஞாத வாசத்தை பிரிட்டனில் ஆரம்பித்தான். அதனால் யூலியன் என்ன செய் கிறான், எங்கிருக்கிறான் என்பதை அமெரிக் காவாலோ அல்லது வேறெந் தப் புலனாய்வு அமைப்புகளாலோ மணந்து பிடிக்க முடியவில்லை. எனினும் யூலியனைப் பற்றி நன்கறிந்திருந்திருந்த அமெரிக்காவுக்கு மட்டும் பேரீ குடித் ததைப் போல அடி வயிறு கலங்கிக் கொண்டிருந்தது. யூலியனின் தலைமறைவுபெரும் விபரீதத்தைத் தனக்கு ஏற்படுத்தப் போவதாக அது நம்பியது. அந்த நம்பிக்கை பொய்க்கவில்லை.எ த்தனை, எத்தனையோ போர்களையும், போராட்டங்களையும் கடந்து வந்த வரலாற்றின் பக்கங்களுக்கு கிடைத்த புதியதொரு அனுபவம்தான் யூலியனுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நிகழத் தொடங்கிய இணைய யுத்தம் . இந்த இணைய யுத்தத்தின் பார்வையாளர்களான பொதுமக்களுக்கும், ஊடகங்களுக்கும் இது ஒரு விநோதமான அனுபவம்.ஏற்கனவே பலமுறை இந்தத் தொடரில் சொன்னது போன்று தான் வஞ்சகமாக வாங்கிய ஒவ்வொரு அடியையும் பலநூறு மடங்காகத் திருப்பிக் கொடுக்க யூலியன்முடிவெடுத்தான். அந்த அடி எப்போதுமே அமெரிக்காவுக்கு வலியைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டுமெனவும் விரும்பினான். என்ன செய்யலாம் என யூலியனின் மூளை யோசிக்கத் தொடங்கியது.

அதற்காக அவன் தேர்ந்தெடுத்த இலக்குத்தான் அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலகம். உலகிலுள்ள நாடுகள் எல்லாவற்றிலும் கிளைபரப்பியுள்ள அமெரிக்கத் தூதரங்கள் அனுப்புகின்ற கேபிள்' எனப்படும் இரகசியத் தகவல்கள் இங்குதான் ஆவணப்படுத்தப்படுகின்றன. அந்த ஆவணங்கள் அனைத்தையும் அள்ளுவதே சரியான பதிலடியாக யூலியனுக்குத் தெரிந்தது. கேபிள்கள் என்றால் என்ன? அந்தக் கேபிள்கள் வெளிப்பட்டதால் அமெரிக்காவுக்கு விளைந்த கேடுகள் என்ன?

(திரைகள் இன்னும் திறக்கும்)

## ஹாய்! செல்லப்பா!!

### எழுதுவது......


ஒருவர் எப்பொழுதும் தன்னைப்பற்றிக் கூறிக்கொண்டே இருப்பது நல்லதல்ல என்று ஒரு அறிஞர் கூறியதைக் கடந்த வாரம் தங்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தேன். ஆனாலும் நான் என்னைப்பற்றி கூறவேண்டி வந்தால் கூறத்தானே வேண்டும்.எங்களது ஊரில் ஆங்காங்கே பல எழுத்தாளர்கள் இருந்தாலும், இந்தச் செல்லப்பா ஒரு தீர்க்க தரிசனம் மிக்க எழுத்தாளர் என்று அடக்கத்துடனும், ஆதாரத்துடனும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இவ் இடத்தில் குப்பை கூழங்களைக் கொட்ட வேண்டாம் என்று பலர் தங்கள் வீட்டு முன் மதிலில், மதில் அடிப் பக்கத்திலிருந்து ஒரு இரண்டு, மூன்று அடி உயரத்தில் எழுதியிருந்தனர். அதே அறிவித்தலை நான் - நானேதான் என் கைபட எங்கள் வீட்டு முன் மதிலில் ஒரு நான்கைந்து அடி உயரத்தில் எழுதியிருந்தேன். மற்றவர்கள் வீட்டு மதிலில் எழுதியிருந்ததை அவ்விடத்தில் கொட்டப்பட்ட குப்பைகள், மேடாகி அதை மறைத்துவிட்டன. நான் தீர்க்க தரிசனத்துடன் உயரமாக - நானும் கொஞ்சம் உயரமான ஆள் கண்டியலோ- எழுதியதால் குப்பை மேடு அவ் எழுத்துக்களை மறைக்கவில்லை. இப்ப சொல்லுங்கள் பார்ப்போம் நான் ஒரு தீர்க்க தரிசனமிக்க எழுத்தாளன் தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல் மிக்க பெண்மூளைகள்





ஆண்களின் மூளையை விட பெண்களின் மூளை விரைவாகவும் பல்திறனுடன் செயற்படக்கூடியது எனவும் பென்சில்வேனியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி களிலிருந்து தெரியவந்துள்ளது.

பென்சில்வேனியாவைச் சேர்ந்த 949 பேரிடம் இது தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட் டன. அவர்களின் மூளை ஸ்கேன் செய்யப்பட்டு நுணுக்கமாக ஆரா யப்பட்டது. ஒவ்வொருவரும் தொழி லில் ஈடுபடும்போது, பயணம் செய்யும்போது, நித்திரையின் போது எனப் பல சந்தர்ப்பங்களில் எவ்வாறு இயங்குகிறார்கள், எதைச் சிந்திக்கிறார்கள் என்பவை கவனத்தில் கொள்ளப்பட்டன.

அதனடிப்படையில் பெண் களின் மூளை சிறப்பாக செயற்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக எப்போதோ சந்தித்த வர்களை மீண்டும் நினைவுபடுத் திப் பார்க்கும்போது மூளையின் இயக்கம் பெண்களுக்கே திறனாக இயங்குவதாக ஆய்வாளர்கள் தக வல் வெளியிட்டுள்ளனர்.

ஆண்கள் ஒரு விடயத்தில் கவ னம் எடுத்துச் செயற்படுகையில் மூளை சிறப்பாக இயங்குவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனி னும் பல்திறனுடன் செயற்படும் வகையில் பெண்களின் மூளையே இயங்குகிறது.



உதாரணமாக நெரிசல் மிக்க நேரத்தில் குறைவான இடவசதியின் போது வாகனமொன்றை பின் னோக்கி செலுத்திவந்து சரியாக நிறுத்துவதற்கு மூளை பல்திறனு டன் செயற்பட வேண்டி ஏற்படு கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் பெண் கள் நிதானமாகவும் அதிக கவனத்து டன் செயற்படுவதற்கு மூளையின் இயக்கமே காரணம் என ஆய் வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## புதுயுகத்தைத் தேடி......

### மகளிர் பக்கம்

தொகுப்பு: ஸ்ருதி

# உடலோடு ஒட்டிய ஆடைகள்..



உடலை இறுக்கிப் பிடிக்கும் ஆடைகளை விரும்பி அணியும் காலம் இது. இளம் பெண்கள் உடை அணிந்ததே தெரியாத அளவுக்கு, லெகின்ஸ், டைட்ஸ் என நவநாகரிக கலா சாரத்தில் சிட்டாகப் பறக்கின்றனர்.

நடந்து செல்வதற்கும், வண்டி ஓட்டுவதற்கும், இறுக்கமான உடைதான் சௌகரியம் என்பது அவர்களின் கருத்து.

ஆனால், உடலை ஒட்டிப்பிடிக்கும் உடை கள் உகந்தவைதானா? தோல் மருத்துவ நிபுணர் கருத்தளிக்கையில்,

காலச் சூழலுக்கு ஏற்ற உடைகளை அணிய வேண்டுமே தவிர, சதா சர்வ காலமும் இறுக்கமான உடைகள் அணிவது நல்லது அல்ல. பெண்கள் இறுக்கமான உடைகளை அணி யும்போது, வியர் வை வெளியேற முடியாமல், அதாவது வெளியே வர வாய்ப்பு இல் லாமல் கிருமிகளின் வளர்ச்சி பன்மடங்கு உயர்ந்து விடும்.

இதனால், வேர்க்குரு, உஷ்ணக் கட்டிகள் மற்றும் கோடைக் கால நோய்கள் சருமத்தைப் பாதிக்கும். மேலும் அணியும் உள்ளாடைகள், சாக்ஸ் உட்பட இறுக்கமாக இருந்தால், உடலில் துர்நாற்றம் வீசுவதோடு, படை, சொறி சிர ங்கு, அரிப்பு போன்றவை வரும்.

உடலில் ரத்த ஓட்டம் குறைந்து, சுவாசத் திறன் பாதிக்கும். தோள் பட்டை, முதுகு வலி ஏற்பட லாம்.

ஓரளவு தளர்வான பருத்தி ஆடைகளை அணிவதுதான் உடல் ஆரோ க்கியத்திற்கும் கொளுத்தும் கோடைக்கும் ஏற்றது. காற்று உட்புகவும், அதிகப்படியான வியர்வை வெளியேறவும் வழிவகுக்கும். ஈரத்தை நன்கு உள்வாங் கும். உடலுக்கு நல்ல குளிர்ச்சியையும் தரக் கூடியது. என்கிறார் விளக்கமாக.

## தமிழிலக்கிய உலகின் தனித்துவக்கவிஞர் அ.வெண்ணிலா

**வா**ழ்க்கையின் போக்கை, அதில் கிடைக்கும் சின்னச் சின்ன சுவாரஸ்யங்களை, அழகை, வலி நிறைந்த பக்கங்களை, இயல்பான வேதனையை கொஞ்சமும் மிகைப்படுத்தாமல் தன் எழுத்தி

கொண்டு வருபவர் கவிஞர் அ. வெண்ணிலா. ஆறு கவிதை நூல்கள், ஒரு கட்டுரைத் தொகுப்பு, ஒரு கடிதத் தொகுப்பு ஆகியவை இவருடைய முக்கியமான படைப்புகள். இன்னும் பல சிறுகதை, ஆய்வுக் கட்டுரைகள், வரலாற்றுத் தொகுப்புகளைத் தொகுத்திருக்கிறார். இவர் தொகுத்துக்கொண்டிருக்கும் உலகப் பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான கனவும் விடியும் விரைவில் சாகித்ய அகாடமியின் வெளியீடாக வர இருக்கிறது. தீவிரப் பெண்ணிய ஆர்வலர். சிறு பத்திரிகை ஆசிரியர். திண்ணை அமைப்பின் அமைப்பாளர். இவருடைய கவிதைகள் ஆங்கிலம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

பெண்ணிய சிந்தனை என்பதும் மற்ற வாழ்வியல் தத்துவங்களைப் போல் ஒரு தத்துவமே. அது ஒரு நேர்கோட்டுப் பயணம் அல்ல. அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு பெண்ணிய சித்தாந்தத்தையும் அப்படியே ஒவ்வொரு பெண்ணும் ஏற்றுக்கொள்ள முடியாது. கருத்தியல் ரீதியாக ஏற்றுக்கொண்ட சித்தாந்தமாக இருப்பினும், யதார்த்த வாழ்வில் அது உருப்பெறும் கணங்கள் வேறுபடும். தனக்கு இணக்கமானதாக அதை வரித்துக் கொள்வார்கள். எந்தத் தத்துவமும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதில்லை. பெண்ணிய சிந்தனை என்றாலும் எல்லாப் பெண்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச்சம்பவம் ■ ஜெகன்

# புயலில் சிக்கிய தீவு



**1945** ஆம் ஆண்டுகாலப் பகுதி. அமெரிக்காவில் இருந்து வடகிழக்காக அமைந்திருந்தது. லொஸ் ஐலண்ட் என்ற இடம். அது புளோரிடா மாநிலத்தில் இருந்து வடகிழக்குக் கரையோரமாக வெகு தொலைவில் உள்ள ஒரு தீவு.

லொஸ் ஐலண்ட்டின் குடியிருப்புப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்த ஜெனிஸ் கெலி வானொலியைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்போது ஒலிபரப்பான ஒரு அறிவிப்பு அவளைத் திகைப்படையச் செய்தது.

புளோரிடாவை நோக்கிப் புயல் வந்து கொண்டிருக்கிறது என்று வானிலை அவதானிப்பு மையத்தினால் விடுக்கப்பட்ட அறிவிப்பே அவளின்திகைப்புக்குக் காரணம். ஆனாலும் புயல் அபாயத்தை விடவும் அவளுக்கு இன்னொரு விடயமே அதிக கவலையை நீண்ட நாள்களாகக்கொடுத்து வந்தது.

அவளது குடும்பம் வசித்து வந்த பகுதி யில் எலிகளின் தொல்லை அதிகரித்த வண்ணம் இருந்தது. இயற்கையாகவே அவள் எலிகளை மிகவும் வெறுப்பவள். அவற்றை ஒழித்துக் கட்டும் வரையில் அவளுக்கு நிம்மதியே இல்லை. அவளது கணவரும் அவற்றினை ஒழிப்பதில் துணை புரிந்து வந்தார். என்றாலும் எலிகளின் தொல்லை அவளை நிம்மதியாக இருக்க விடவில்லை.

புயல் என்பது புளோரிடாவில் அடிக்கடி நிகழும் சாதாரண சம்பவம். இதனால் மக்கள் வானொலி மூலம் விடுக்கப்பட்ட எச்சரிக்கை குறித்து அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. அவர்கள் வழமை போல தமது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். ஆனாலும் குறித்த புயல் திசையை மாற்றிவிட்டதாகவும், அது வடக்காகத் திரும்பி ஒருமித்த வேகத்துடன் லொஸ் ஐலண்ட் நோக்கி விரைந்து அதிவேக ரயிலைப் போன்று வருவதாவும் அபாய அறிவிப்பு வெளியான மறுகணமே வானொலிகள் யாவும் செயலிழந்து போயின. ஜெனிஸ் கெலியும் அவளது கணவர் ரோனியும் தங்களுடைய வானொலி செயலிழந்து போனதும் பரபரப்படைந்தனர். அதன் பின்னர் தான் அவர்கள் ஏதோ விபரீதம் நடக்கப் போகின்றது என்பதை உணரத் தொடங்கினார்கள்.

சற்றும் எதிர்பாராத விதத்தில் கடும் வேகத்துடன் வந்த புயல் லொஸ் ஐலண்ட்டை புரட்டிப் போட்டது. அங்கிருந்த வானுயர்ந்த கட்டடங்களை அடியோடு சாய்த்தது. வீடுகளை இடித்துத் தள்ளியது. வீதிகளை தாறுமாறாகச் சின்னாபின்னப்படுத்தியது.

லொஸ் ஐலண்ட்டை புயல் நெருங்கிய போது அதன் வேகம் மணிக்கு 96 கிலோ மீற்றர் தான். ஆனால் படிப்படியாக அதன் உக்கிரம் அதிகரித்து தீவினை அடைந்த போது அதன் வேகம் மணிக்கு 290 கிலோ மீற்றராக மாறியிருந்தது. லொஸ் ஐலண்ட் தீவு அதற்கு முன்னர் 100 வருடங்களுக்கு மேலாகப் புயலால் பாதிப்புறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

புயல் குறித்து கவனம் செலுத்தாதிருந்த தீவிலுள்ள குடும்பத்தினர் பலர் கடற்கரையில் தமது பிள்ளைகள் மணலில் மாளிகைகளைக் கட்டி விளையாடுவதை அவதானித்த வண்ணம் தமது பொழுதை உல்லாசமாகப் போக்கிக் கொண்டிருந்தனர். கடலில் சற்றுத் தொலைவில் அலைகளின் மீது காற்றுத் திடீரென மோதிப் பிரமாண்டமான அலைகளை உருவாக்கியது. ஓரமாக நின்றிருந்த மக்கள் அந்த அலைகளைப் பார்க்கும் படி தமது நண்பர்களை அழைத்தனர்.

அந்தவேளையில் திடீரென உருவான 45 அடி உயரமான இராட்சத சுனாமி அலையொன்று கரையை நோக்கி வேகமாக வந்தது. அது கரையுடன் மோதி அங்கிருந்த ஒவ்வொருவரையும் வாரிச்சுருட்டிக் கொண்டு சென்று கடலுள் சங்கமமாகியது.

அலையின் சீற்றத்தால் கடல்நீர் தீவுக்குள் புகுந்து கடலோரமாக இருந்த நகரத்தை முழுவதுமாக மூழ்கடித்தது. மக்கள் சிறுவர், முதியோர் என்ற பேதமின்றி அனைவரும் கடல்நீரில் அள்ளுண்டு போயினர். எங்கும் ஒரே அழுகுரல். அவலம் . உயர்வான கட்டடங்களில் இருந்தவர்களினால் சிலர் காப்பாற்றப்பட்டனர். அவர்கள் தமது படுக்கை விரிப்பு, மற்றும் நீண்ட துணிகளைக் கட்டடங்களில் இருந்து கீழே தொங்க விட்டு அவற்றின் மூலம் நீரில் மூழ்கிச் சாகவிருந்தவர்களை மேலே இழுத்தெடுத்துப் பாதுகாப்பளித்தனர்.

புயல்க் காற்று ரயில்களைத் தடம் புரளச் செய்தும், வீதிகளை பிளந்தவண்ணமும் ஏழு நாடுகளைக் கடந்து வந்திருந்தது. வெகுண்டெழும் காற்றின் இரைச்சலும் மக்களின் அலறல்கள் சேர்ந்து ஒலித்தன.

ரயில் ஒன்று தடம் புரண்டு கடல் நீரில் மூழ்கத் தொடங்கியது. அதிர்ஷ்டவசமாக அதில் இருந்த பயணிகள் சகலரும் சிறு சிறு காயங்களுடன் உயிர் தப்பி விட்டனர். சில இடங்களில் கடல் அலைகளின் வேகமும், பலமும் கடலோரத்தில் அரிப்பை ஏற்படுத்தி அதன் வடி வமைப் பையே அடியோடு மாற்றியமைத்து விட்டது.

ஜெனிஸ்கெலியும் அவளது கணவர் ரோனியும் உயர்ந்து கொண்டே வரும் நீர் மட்டத்திலிருந்து தப்புவதற்காக அவர்களுடைய வீட்டின் கூரை மீதேறி அசையாது அதனைப் பற்றிப் பிடித்த வண்ணமிருந்தனர். கூரையின் மீது தஞ்சம் கோரிய அவர்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. எந்தக்கூரையில் அவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்தார்களோ அந்தக்கூரையில் இதுநாள் வரை அவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த மூன்று எலிகளும் ஒரு பாம்பும். ஜெனிஸ் அவற்றைக் கண்ணுற்றதும் கடும் அதிர்ச்சியுற்றாள். என்றாலும் எலிகளைச் சகித்துக் கொண்டு அவற்றோடு இருக்கவேண்டிய கட்டாயத்தை புயல் உண்டுபண்ணியிருந்தது.

ஊடுருவிச் செல்லும் காற்று பலத்த சப்தத்துடன் வீட்டின் கூரையைக் கிழித்தது. ஒரு சுழற்றுச் சுழற்றி கூரை மீதிருந்த ஜெனிஸையும் ரோனியையும் கூரையுடன் விரிகுடாவின் ஒதுக்கிடம் ஒன்றின் பக்கமாக வீசியெறிந்தது. அவர்களிருவரும் மரண பயத்தினால் கண்களை இறுக மூடியபடி இருந்தனர். மறுகணமே தொப்பென ஓரிடத்தில் கூரையுடன் வீழ்ந்தனர். அவர்கள் வீழ்ந்த இடம் கோல்ப்" விளையாட்டு மைதானம்.

ஜெனிஸ்கெலி அங்கிருந்தபடியே அவர்களது வீடு அமைந்திருந்த குடாப்பக்கம் பார்வையைச் செலுத்தினாள். வீடுகள் யாவும் தரைமட்டமாகியிருந்தன. கார்கள் பலவும் தலை கீழாகப் புரட்டப்பட்டும் , பாதியளவில் சேற்றில் புதையுண்டும் இருந்தன. மரங்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்டிருந்தன. ஜெனிஸ்கெலி கூரையை உற்று நோக்கினாள். அவர்கள் மட்டுமல்ல, அவர்களோடு கூடவே கூரையில் இருந்த எலிகளும், பாம்பும் கூட உயிரோடு இருந்தன.

புயல் ஆயிரக்கணக்கானோரின் வாழ்வினை அதிர்ச்சிக்கும், நிலைகுலைவுக்கும் உள்ளாக்கியது. சுமார் 70, 000 மக்கள் வீடுகளை இழந்தனர். இறந்தோர் தொகை 800 ஐத் தாண்டியது

இந்தப் புயல் 57,000 வீடுகளை அழித்ததுடன், கிட்டத்தட்ட 275 மில்லியன் மரங்களை அடியோடு சாய்த்து வீழ்த்தியது.

இப்படிக் கோரமாக வந்து உயிர்களைக் காவு கொண்ட புயலில் ஜெனிஸூம் அவள் கணவரும் எந்தச் சேதமும் இன்றி உயிர் தப்பியது அதிசயத்திலும் அதிசயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகப்பழைய காதல் கடிதம்



மனிதன் எப்போது தோன்றினானோ அப்போதே காதலும் தோன்றி விட்டது. ஏனெனில் மனிதனுக்கு இயல்பாக உள்ள உணர்ச்சிகள் இரண்டு. ஒன்று காதல். மற்றது வீரம். ஆகவே காதலை வெளிப்படுத்துகின்ற மார்க்கங்களும் அக்காலத்திலேயே தோற்றம் பெற்று இருக்க வேண்டும் என்பது வெளிப்படை.

ஒருவரோடு இன்னொருவருக்கு ஏற்படும் காதலை வெளிப்படுத்த வல்ல சிறந்த ஊடகம் கடிதம்தான்.

அப்படியானால் காதல் கடிதமும் தொன்று தொட்டு பாவனையில் இருந்து வந்திருக்க வேண்டும் தானே?

உலகில் காதல் கடிதத்தின் பாவனை எப்போது ஆரம்பமானது? என்பதை எம்மால் எடுத்துச் சொல்ல முடியாதுதான். ஆனால் அகழ்வாராய்ச்சியாளர்கள் இது வரை கண்டுபிடித்தவற்றுக்குள் மிகவும் காலத்தால் முந்தியதாக உள்ள காதல் கடிதம் பற்றி இங்கு சொல்லத்தான் வேண்டும்.

துருக்கியில் உள்ள இஸ்தான்புல் தொல்பொருள் காட்சியகத்தில் இந்தக்காதல் கடிதம் இன்றும் உள்ளது. ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் இருந்து 150 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நிஃவ்பெர் வல்லி (Niffer Valley) என்கிற இடத்தில் கி.மு 2200களில் இந்தக்கடிதம் எழுதப்பட்டு இருக்கின்றது. இதை அறிகின்றபோது பலரும் ஆச்சரியப்படத்தான் செய்வீர்கள்.

அந்தக் காலங்களில் கடதாசிகளில் மக்கள் எழுதி இருக்கவில்லை. இந்தக்கடிதம் மிகப் பழைமையான காலத்து நாகரீகத்தையும் எழுத்து வடிவத்தையும் கொண்டு இருக்கின்றது. ஆயினும் மிகவும் அருமையான வாசகங்கள் இதில் காணப்படுகின்றன. கல்லால் செதுக்கப்பட்ட தட்டு ஒன்றின் மேல் இந்தக் கடிதம் எழுதப்பட்டு இருக்கின்றது.

பிலடெல்பியா பல்கலைக்கழக பேராசிரியரான நோஹ் கிராமர் (Noah Kramer) அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டபோது 1889 ஆம் ஆண்டு இந்தக்கடிதத்தை கண்டு பிடித்தார். ஆயினும் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தவற்றை வாசித்து விளங்கிக் கொள்வதற்கு 58 வருடங்கள் எடுத்து இருக்கின்றன

சுமேரிய மொழியில் நிபுணத்துவம் பெற்ற வல்லுநர்கள் பகீரத முயற்சிகளை தொடர்ந்து இந்தக்கடிதத்தை வாசித்து விளங்கிக் கொண்டார்கள். மொஷஸ் லொங்க்ஸோ (Muazzez Longso), ஹடிக்ஸ் (Hatice) ஆகிய இரு நிபுணர்கள் இந்தக்கடிதத்தை முழுமையாக மொழிபெயர்த்து அதன் பூர்வீகத்தை கண்டுபிடித்தனர். இது கவிதை வடிவிலான காதல் கடிதம்.

இது சுமேரியாவைச் சேர்ந்த உயர்நிலைப் பெண்ணான இன்னானா என்பவரால் எழுதப்பட்டு இருக்கின்றது. முதல் இரவின்போது கணவனுக்காக காதல் கவிதை ஒன்றை மனைவி எழுதுகின்ற வழக்கம் அந்தக்காலத்தில் அங்கு இருந்து வந்து இருக்கின்றது. இந்தநிலையில் கணவனுக்காக காதல்கவிதையை முதல் இரவில் எழுதி இருக்கின்றார்.

## காதல் பரிசு:

## உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு. உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



✍ அனுப்ப வேண்டிய முகவரி:
காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.

இளையோருக்கான புதிய பகுதி!

சுபிதி

# காதலர் மட்டும்...

**செல்போன், பேஸ்புக், ஸ்கைப் என்று சிக்கனமான செலவற்ற, துரிதமான தொடர்பூடகங்களின் புழக்கத்தால் எங்களிடையே இருந்த கடிதப்பரிமாற்றம் இல்லாதொழியும் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆனாலும் கடிதங்கள் எப்போதுமே தித்திப்பானவை. அவை காலஞ் செல்லச் செல்லத்தான் மதிப்பேறும் தன்மை கொண்டவை. அதிலும் காதல் கடிதங்களுக்கென்று தனி மதிப்பே உண்டு. முன்னைய காலங்களில் புறாக்கள் முதல் தோழன், தோழியர் வரை நம்பிக்கைக்குரியவர்களைப் பயன்படுத்தியே காதலர்கள் தங்கள் இதயங்களை காகிதத்தில் பகிர்ந்துகொள்வார்கள். ஆனால் இப்போது சட்டிங் , எஸ்.எம்.எஸ் என்பனவெல்லாம் காதல் கடிதங்களின் அவசியத்தை இல்லாதாக்கிவிட்டன. அத்தோடு கடிதங்களே பல இடங்களில் காதலைக் காட்டிக் கொடுத்துள்ளன என்பதாலும் பாதுகாப்புக் கருதி இப்போது பலர் காதல் கடிதங்களை எழுதத் துணிவதில்லை. என்றாலும் காலம் கடந்தும் இன்னும் அன்பும் அக்கறையும் சொட்டும் சில பிரபலங்களின் காதல் கடிதங்கள் இதோ.**

## நெப்போலியன் தன் காதலி யோசபினுக்கு எழுதிய காதல் கடிதம்



அன்பே!

நேற்றுப் போர்க்களத்தில் கடுமையான வேலை, கொஞ்சம் கூட ஓய்வில்லை. உணவோ, உறக்கமோ இன்றி ஒரு வாரமாக இருந்தும், நான் சுறு சுறுப்பாக வேலை செய்ததைக்கண்டு எங்கள் குழுவினர் அனைவருமே ஆச்சரியப்பட்டனர்.

அது என்னால் எப்படி சாத்தியப் படுகிறது என்று எல்லோரும் திகைத்தனர். என்ன?.....உனக்கு ஏதாவது புரிகிறதா? நீ எழுதும் கடிதங்கள் என் சட்டைப்பையிலேயே இருப்பது வழக்கம். சோர்வு ஏற்படும் போது நான் உன் கடிதங்களை எடுத்துப் படிப்பேன்.


அவ்வளவுதான் சோர்வு பறந்துவிடும். புத்துணர்ச்சி உடலெல்லாம் பரவும் அப்புறம் பசியாவது தாகமாவது! ஒரு விஷயம் என் துயரங்களைக் கண்டு நீ மனதை அலட்டிக் கொள்ளக்கூடாது.

துன்பம் என் நண்பன் அதை நான் வெறுக்கமாட்டேன். உலகத்தில் அபார சாதனைகளைச் சாதிப்பதற்காகவே பிறந்த எனக்குத் துன்பந்தான் தூய நண்பன். இன்பம் என் விரோதி. அது என்னைச் சோம்பேறியாக்கி விடும் அதை நான் வெறுக்கின்றேன். இரவில் அதிக நேரம் கண் விழிக்காதே, உடம்பை ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்.

அன்புள்ள

நெப்போலியன்

## கால் மார்க்ஸ் எழுதிய காதல் கடிதம்



கெஜட் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டேன். இப்படி ஒரு பதவியில் அமர்ந்து நிர்வாகம் செய்வதே எனக்குப் பிடிக்காத விஷயம். இப்படி ஒரு பிடிக்காத விஷயத்தில் நான் ஈடுபட்டதற்குக் காரணம் நீ தான். என் பிரிவு உன்னை எவ்வளவு தூரம் வாட்டுகிறதென்று எனக்குத் தெரியும்.

வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற பொருளாதாரச் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்ட பிறகுதான் உன்னை மணப்பதென்பது என் தீர்மானம் என்பது உனக்குத் தெரியும். உன்னை மணக்க வேண்டும் என்ற நினைவு பலமாக உந்தியதால் தான் கெஜட் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். என் பொருட்டு பல இன்னல்களை அனுபவிக்கின்றாய் எனக் கேள்விப் பட்டேன். வருத்தப்படவில்லை, மகிழ்ச்சி அடைந்தேன். இதுதான் உண்மை வாழ்க்கை. பிறர் பரிகாசம் செய்கிறார்களே என்று அஞ்சாதே, உன் மனதை உறுதிப்படுத்திக் கொள்.

உன் நினைவில் இருக்கும்

கால் மார்க்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

தொகுப்பு : வரு

## ஐ.பி.எல். அணிகள் தக்க வைக்கப்போகும் வீரர்கள்!

ஏழாவது ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம், எதிர்வரும் பெப்ரவரி 12, 13இல் இடம்பெறவுள்ளது. இதற்கு முன் ஒவ்வொரு அணி நிர்வாகமும், எந்தெந்த வீரர்களைத் தக்க வைக்கின்றன என்ற விபரத்தை, ஜனவரி 10ஆம் திகதிக்குள் வெளியிட வேண்டும். இந்த வருடம், 8 அணிகள் ஐ.பி.எல். தொடரில் விளையாடுகின்றன. கடந்த வருடம், விளையாடிய புனே வாரியஸ் அணி, ஒப்பந்தப்பிரச்சினை காரணமாக நீக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அணி நிர்வாகமும், ஏலத்துக்கென அங்கீகரிக்கப்பட்ட நிதியில் இருந்து அதி கூடியதாக 12.5 கோடிக்கு ஒரு வீரரை ஒப்பந்தம் செய்யலாம். சகல அணிகளுக்கும், இந்திய அணித்தலைவர் தோனியை ஒப்பந்தம் செய்ய விருப்பம் இருந்தாலும், சென்னை அணி தொடாந்தும் தலைவரைத் தக்க வைக்கும் என்பதால் அந்த வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.

கடந்த வருடம் விளையாடிய வீரர்களில் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்கள் அந் தந்த அணிகளில் நீடிக்க வாய்ப்பிருக்கின்றது. மைக் ஹசி (சென்னை, 733 ஓட்டங்கள்), கிறிஸ் கெய்ல் (பெங். 708 ஓட்டங்கள்), விராட் கோஹ்லி (பெங். 634 ஓட்டங்கள்), சுரேஷ் ரெய்னா (சென்னை), ஷேன் வட்சன் (ராஜ.), ரோகித் சாமா (மும்பை), டினேஷ் கார்த்திக் (மும்பை), அஜித் ரஹானே (ராஜ.), மில்லா (பஞ்.), டேவிட் வோனா (டெல்லி), பிராவோ (சென்னை 32, விக்கெட்), பால்க்னா (ராஜ. 28 விக்கெட்), ஜோன்சன் (மும்பை, 24 விக்கெட்), வினய் குமார் (பெங்.), சுனில் நரைன் (கல்.), ஸ்டெயின் (சன்ரை.)

சிரேஷ்ட வீரர்களான சச்சின் டெண்டுல்கர், ராகுல் ட்ராவிட் ஆகியோர் ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர். தவிர, கடந்த வருடம் புனே வாரியஸிற்காக சிறப்பாகச் செயற்பட்ட எரோன் பிஞ்ச், ரொபின் உத்தப்பா, புவனேஷ் குமார் மற்றும் அவ்வணியில் விளையாடிய அதிரடி வீரர்களான மத்தியுஸ், டெய்லா, சாமுவேல்ஸ், யுவராஜ், தமிம் இக்பால், லூக் ரைட், அபிஷேக் நாயா உள்ளிட்டோருக்கு இம்முறை ஏலத்தில் கடும் கிராக்கி நிலவும்.

INDIAN PREMIER LEAGUE®

சென்னையில், டோனியுடன் ரெய்னா, முரளி விஜய், ஜடேயா, அஷ்வின், பிராவோவும் தொடரலாம். அதேநேரம் மோகித் சர்மா, ஆல்பி மோர்கல், மைக்கேல் ஹசியின் நிலை என்னாகும் எனத் தெரியவில்லை. கடந்த வருடம் வரை கண்டு கொள்ளப்படாமல் இருந்து அவுஸ்திரேலியாவின் அதிரடி வீரர் ஜோர்ஜ் பெய்லியையும் சிலவேளை தக்கவைக்க சென்னை முயலும். மும்பை அணியைப் பொறுத்தவரையில் அணித்தலைவர் ரோகித் சர்மா, தினேஷ் கார்த்திக், போலாரடு, மலிங்காவுடன், சமீபகாலமாக வேகத்தில் மீண்டும் மிரட்டி வரும் மிட்சல் ஜான்சன் என, ஐந்து பேர் உறுதியாக இருக்கலாம். மக்ஸ்வெல்லுக்கும் வாய்ப்புண்டு. அனுபவ வீரர் ஹர்பஜன் சிங் (29 விக்கெட்) ஏலத்தில் மீண்டும் வாங்கப்படலாம்.


கல்கத்தா அணிக்கு கடந்த 2011ல் இருந்து அணித்தலைவராக உள்ள காம்பிர், 2012ல் கோப்பை வென்று கொடுத்தார். இவருடன், மனோஜ் திவாரி, யுசுப் பதான் மற்றும் பங்களாதேஷின் சாகிப் அல் ஹசன் தக்கவைக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. ராஜஸ்தானைப் பொறுத்தவரையில் ரகானே, வாட்சன், பால்க்னர், டாம்பே நீடிக்க வாய்ப்பு உள்ளது. சன்ரைஸாசில் தவான், ஸ்டெயின், பெரேரா, சங்கா தொடரலாம். பெங்களூரில் அணித்தலைவர் கோஹ்லி, கெய்ல், ஏ.பி.டி.வில்லியாஸ் நீடிக்கலாம். டெல்லி மற்றும் பஞ்சாப் அணிகளில், அணித்தலைவர் உட்பட வீரர்கள் அனைவருமே மாறுவதற்கு வாய்புண்டு.

எதிர்வரும் பெப்ரவரியில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண 20-20 தொடரைத் தொடர்ந்து பல வீரர்களுக்கு கிராக்கி அதிகரிக்கலாம். இருந்தும், நியுசிலாந்தின் சாதனை வீரர் ஆண்டர்சன், தென்னாபிரிக்காவின் முச்சத வீரர் டி கோக் ஆகியோருக்கு மவுசு உண்டு. பார்க்கலாம், இம்முறையும் பாகிஸ்தான் வீரர்களுக்கு சோதனை தொடருகின்றதா என்பதை!

## சாதனை தகர்ந்தது

சாதனைகள் எல்லாம் என்றோ ஒருநாள் தகர்க்கப்படக் கூடியவை தான். ஆனாலும், கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் நீண்ட காலமாக (17 வருடங்கள்) பேணப்பட்ட மிக முக்கியமான சாதனை ஒன்றை நியுசிலாந்தின் கோரி ஆண்டர்சன் தகாத்தார். 36 பந்தில் சதம் கடந்த இவர், புதிய உலக சாதனை படைத்தார். பாகிஸ்தானின் சயீட் அப்டிரி, இலங்கைக்கு எதிராக 1997ஆம் ஆண்டு படைத்த அதிவேக சதத்தை (37 பந்துகள்) ஆண்டர்சன் முறியடித்தார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக குயின்ஸ்டவுணில் இடம்பெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் மழை காரணமாக 21 ஓவர்களுக்கு




போட்டி மட்டுப்படுத்தப்பட்டது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியுசிலாந்து அணி 4 விக்கெட்டுக்கு 283 ஓட்டங்கள் குவித்தது. ஆண்டர்சன், ஜெசி ரைடர் ஆகியோர் சதம் கடந்தனர். மொத்தம் 14 சிக்சர் விளாசிய நியுசிலாந்தின் கோரி ஆண்டர்சன், ஒருநாள் போட்டியில் ஒரு இன்னிங்சில் அதிக சிக்சர் அடித்த வீரர்கள் வரிசையில் மூன்றாவது இடம் பிடித்தார். முதல் இரண்டு இடத்தில் இந்தியாவின் ரோகித் சர்மா (16), அவுஸ்திரேலியாவின் வொட்சன் (15) உள்ளனர். இந்தப் போட்டியில் நியுசிலாந்து வீரர்கள் மொத்தமாக 22 சிக்சர்கள் (ஆண்டர்சன் 14, ரைடர் 5, மெக்கலம் 3) விளாசினார். இதன்மூலம் ஒருநாள் வரலாற்றில் அதிக சிக்சர் அடித்த அணிகள் வரிசையில் நியுசிலாந்து அணி, இந்தியாவை (19 சிக்சர்) பின்னுக்குத் தள்ளி முதலிடம் பிடித்தது.

வேகமாகச் சதம் பெறும் எண்ணம் இருக்கவில்லை. ஓவர்கள் குறைக்கப்பட்டதால் அதிகளவில் ஓட்டங்களைப் பெற்று எதிரணிக்குச் சவாலைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமே எனக்கு இருந்தது என சாதனை வீரர் ஆண்டர்சன் கூறியிருக்கின்றார். உண்மையில், 50 ஓவர்கள் போட்டியொன்றில் எந்தவொரு வீரருக்கும் இந்த அடித்தாடும் எண்ணம் இருந்திருக்காது. ஆனாலும், 20 - 20 போட்டிகளில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையை (இலங்கை - 267) விட 21 ஓவர்களில் நியுசிலாந்து நிர்ணயித்த எண்ணிக்கை (283) அதிகமாகும்.

என் சாதனை என்றோ ஒரு நாள் தகர்க்கப்படும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும், நான் ஓய்வு பெறும் வரை என் சாதனையே இருக்க வேண்டும் என்று விரும்பினேன். இன்று நான் இராண்டாவதாகிவிட்டேன் என்று தெரிவித்திருக்கிறார் அதிரடி வீரர் சயீட் அப்டிரி. ஆண்டர்சனின் சாதனை கூட என்றோ ஒருநாள் தகர்க்கப்படும். அந்தளவிற்கு கண்காட்சி போட்டியாக கிரிக்கெட் மாறி வருவது கிரிக்கெட்டை நேசிப்பவர்களுக்கு கவலை தான். இன்றும் உண்மையான கிரிக்கெட் என டெஸ்ட் போட்டிகளையே பலரும் கூறிவருகின்றனர். இதனை, கடந்த வாரம் பாகிஸ்தானின் முன்னாள் வீரர் வாகா யுனிஸ் கூட தனது நேர்முக வர்ணனையில் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்




இந்திரவர்மன் கூறியதைக் கேட்டு சந்திரவர்மனும் மணி மொழியும் அதிர்ச்சியடைந்தனர். ஆயினும் சந்திரவர்மன் நிலைமைக்கேற்ப தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

"மாயக் கல் தெலைந்து போனதை எண்ணிக் கவலைப்பட வேண்டாம். முதலில் இந்தக் குகையின் சுவரை தொட்டவாறு விரைவாக வெளியேற முயற்சிப்போம்'' என்று கூறிவிட்டு குகையின் ஒரு புறச்சுவரை கைகளால் தடவியவாறே முன்னேறத் தொடங்கினான். அவனை இந்திரவர்மனும், மணிமொழியும் பின் தொடர்ந்தனர். சிறிது நேரம் சென்றதும் குகையின் இருள் மூவரின் கண்களுக்கும் பழக்கப்பட்டுப் போனது அதனால் குகையின் உட்புறம் ஓரளவுக்கு அவர்களுக்குப் புலப்பட்டது. குகையின் உள்ளே விநோதமான உருவங்கள் சிலைகளாகச் செய்து வைக்கப்பட்டிருப்பதை மூவரும் கண்டனர். அதில் மிக உயரமாய் இருந்த ஒரு சிலையின் கண்களிலிருந்து ஒளி வீசிக்கொண்டிருந்தது. சிலையின் உடலும் தங்கம் போல தகதகவென ஜொலித்தது. ஆர்வமேலீட்டால் சிலையைத் தொட்டுப் பார்த்தான் இந்திரவர்மன். அவ்வளவுதான் அடுத்த நொடியில் அவனும் சிலையாக மாறத் தொடங்கினான்.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

## அறிந்து கொள்வோம்

1. உயர்ந்த ஒலி கவரும் பொருள் எது?
2. சோப்புத் தயாரிக்கத் தேவைப்படும் பொருள்கள் யாவை?
3. பூஜ்யத் தொகுதித் தனிமங்களை என்னவென்று கூறுவர்?
4. நைட்ரஜன் உரங்கள் அளிக்கும் சத்து என்ன?
5. ஹாலஜன்கள் என்பவை யாவை?
6. சூடாக்கும் போது உலோகங்களை விடக் கண்ணாடி எளிதில் விரிசல் அடைவது ஏன்?
7. அசாதாரண தொகைசார் பண்புகள் எப்பொழுது கண்டறிப்படுகிறது?
8. லாக்டோஸ் என்பது என்ன?
9. வானிலை இயல் என்பது என்ன?
10. ஒளி மையத்தின் வழியே செல்லும் எந்த ஒரு ஒளிக்கதிரும்?

### விடைகள்:

**1.** இழைக்கண்ணாடி **2.** கொழுப்புப் பொருள், சோடா காரம் அல்லது பொட்டாசியம் காரம், **3.** மந்த வாயுக்கள், **4.** செடியின் தண்டுகள், அலைகளின் வளர்ச்சிக்குத் தேவையான நைட்ரஜன் சத்து, **5.** அலோகங்கள் **6.** கண்ணாடி ஓர் எளிதில் கடத்தி **7.** கரைபொருள் மூலக்கூறுகள் அவற்றுக்குள் ஒன்று சேரும் போது **8.** ஒரு என்சைம் **9.** வளிமண்டலமும் அதன் மழை தட்பவெப்பம் காற்றோட்டம் தொடர்பான பண்புகள் பற்றிய அறிவியல் **10.** விலகல் கிடையாது

## சிந்திக்க சில வரிகள்

ஒரு ஆசிரியர் நினைத்தால் ஒரு மாணவனுக்கு மிக சுலபமாக பாடத்தைச் சொல்லிக் கொடுக்க முடியும்...

நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கும்போது என் ஆசிரியர் என்னிடம் 'உனக்கு எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் தெரியுமா..?' எனக் கேட்டபோது நான் படித்ததை மறந்துபோய் திருதிருவென விழித்தேன்... அப்போது என் ஆசிரியர் சொன்னது 'எட்டு எட்டா போனா நாலு எட்டுல எவரெஸ்ட் சிகரத்துக்கு போயிடலாம்.

ஞாபகம் வச்சிக்கோ தம்பி..!அவர் அப்போது 8848 மீட்டர் எவரெஸ்ட்டின் உயரம் எனச் சாதாரணமாகச் சொல்லி கொடுத்திருந்தால் நான் அப்போதே மறந்திருப்பேன்...ஆனால் இப்போதுவரை என் நினைவில் இருப்பது 'எட்டு எட்டா போனா நாலு எட்டுல எவரெஸ்ட் சிகரத்துக்கு போய்டலாம்!' என்பது மட்டுமே...!

# பகைமை உணர்வும் பழி வாங்கும் குணமும்


ஒரு நாள் வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது மாணவர்களிடம் இந்த கேள்வியை கேட்டார். "மன்னிக்க முடியாத கோபம் யார் மீதேனும் இருக்கிறதா உங்களுக்கு? சந்தர்ப்பம் கிடைத்தால் யாரையேனும் பழி வாங்கத் துடிக்கிறீர்களா, நீங்கள்?" - மாணவர்களிடம் கேட்டார் ஆசிரியார். வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் 'ஆமாம்... ஆசிரியர்' என்றார்கள். ஆசிரியருக்கு மிகுந்த வியப்பு, ஒவ்வொருவராக அழைத்து "மன்னிக்கவும் மறக்கவும் முடியாத அளவுக்கு எத்தனை கோபங்கள் உள்ளன?" என்று கேட்டார். ஒவ்வொருவரும் ஐந்து, பத்து என்று அடுக்கிக் கொண்டே சென்றார்கள். மாணவர்களுக்கு பழிவாங்கும் எண்ணம் தவறு என்று புரிய வைக்க நினைத்தார். ஒவ்வொருவரிடமும் ஒரு பையைக் கொடுத்தார் , வகுப்பறைக்கு ஒரு கூடையில் தக்காளி கொண்டுவரப்பட்டது. யார்மீது எத்தனை பழிவாங்கும் எண்ணம் உள்ளதோ அத்தனை தக்காளிகளை தாங்கள் பையில் எடுத்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.



இந்த தக்காளிப் பையை எப்போதும் உங்களுடனேயே இருக்கவேண்டும், தூங்கும் போதும் அருகிலேயே வைத்திருக்கவேண்டும் என கட்டளையிட்டார். ஒன்றும் அறியாமல் தலையை ஆட்டினார்கள் மாணவர்கள் .ஓரிரு நாட்கள் ஒரு குறையும் இல்லை. ஆனால், அடுத்தடுத்த நாட்களில் தக்காளிகள் அழுகி நாறத் துவங்கின. நாற்றம் அடிக்கும் பையுடன் வெளியே செல்ல மாணவர்கள் கூச்சப்பட்டனர். ஒரு கட்டத்தில்... ஆசிரியரிடம் சென்று, பைகளைத் தூக்கி எறிய அனுமதி கேட்டனர். மெள்ளப் புன்னகைத்த ஆசிரியை, "நாற்றம் வீசுபவை தக்காளி மட்டுமல்ல. அந்த நாற்றத்தைப் போலவே, உங்கள் பகைமை உணர்வும் பழி வாங்கும் குணமும் மனதுக்குள் அழுகி நாறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பகை- பழியை மறந்து மன்னித்து விடுவதாக இருந்தால், தக்காளிப் பையைத் தூக்கி எறியுங்கள்" என்றார்! அப்போது தான் மாணவர்களுக்கு மனத் தெளிவு பிறந்தது. அப்போதே தக்காளிப் பைகளை குப்பைத் தொட்டியில் வீசிய மாணவர்கள், பகை மறந்து ஒருவரையருவர் ஆரத் தழுவிக் கொண்டு வகுப்பறைக்குத் திரும்பினர். நாம் ஒவ்வொருவரும் இப்படி தான் பழிவாங்கும் எண்ணத்தோடு காத்திருக்கிறோம் தக்காளிப் பை நாற்றத்தோடு.

**பகைமை மறப்போம் பகுத்தறிவோடு பயில்வோம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை

# சீதனம்

கல்யாணி கல்யாணி "டக்....டக்" பெயரைக் கூறியவாறே கல்யாணியின் தகப்பனார் கதவைத் தட்டினார். சமையல் அறையில் இருந்து ஒரு கையில் அகப்பையும் மறுகையில் பாவடையை கொண்டைக்காலை விட்டு மெதுவாய் தூக்கிப் பிடித்துக் கொண்டே ஓடி வந்து கதவைத் திறந்தாள் கல்யாணி.

அப்பா வாருங்கள்.போன விஷயம் என்னப்பா? என்று தந்தையை வினாவினாள். அதற்குள் அவள் அப்பா சண்முகம் போன விஷயத்தை விடு. உனக்கு ஒரு நல்ல செய்தி இருக்கு. என்னப்பா? சொல்லு கிறேன். நீ முதல் போய் செம்பில் தண்ணீர் எடுத்து வா. சரி என்று 'விறுவிறு' என்று உள்ளே சென்று செம்பும் கையுமாய் வந்து கொடுத்தாள். மதிய வெயில் தாகம் அதிகமாக இருந்தமையால் 'மளமள' வென்று குடித்துவிட்டு சொன்னார். இந்தம்மா உனக்கு ஒரு நல்ல சம்பந்தம் வந்திருக்கு நம்ம புறோக்கர் தான் சொன்னான் என்று சொல்ல கல்யாணி ஒரு நிமிடம் ஆட்டம் கண்டு தான் விட்டாள். அதற்குக் காரணம் இல்லாமலில்லை. அந்த நேரத்தில் சண்முகம் செம்பை நீட்டினார். இந்தாம்மா. கல்யாணி செம்பைக் கொண்டு போய் வைத்துவிடு. அப்போ அவள் மனதும் கையும் வெடவெடுப்பதை தந்தை முன்னால் காட்டிக் கொடுக் காமல் அதை வாங்கிக் கொண்டு மெல்ல மெல்ல நகர்ந் தாள். நடக்கும் போதே ரூபனின் நினைவுகள் அவளை சூழ்ந்து கொண்டது.

இதமான தென்றல் வீசிக் கொண்டிருந்தது. அப் போது மணலில் விரல்களை விட்டு ஏதோ ஒன்றை வருடிக் கொண்டிருந்தாள் கல்யாணி. ரூபன் மெதுவாக வந்து அவள் கண்களை தன் கைகளால் மென்மையாக மூடினான். கல்யாணி கேட்டாள் எவ்வளவு நேரமாக காத்திருப்பது கையை எடுத்துவிட்டு பதில் சொல்லுங் கள் என்றாள். அப்போது கேட்டான் "எப்படித் தெரியும் நான் தான் வந்திருக்கிறேன் என்று". எனக்குத் தெரியும் என்மீது படும் கை உங்கள் கைதான் வேறு யாரும் என்னைத் தொட முடியாது என்றாள். அவன் கைகளை எடுத்து விட்டு அவள் அருகில் அமர்ந்தான். "ரூபன் எங்கள் கல்யாணம் எப்படி நடக்கும்" என்று கேட்டாள். "நிச்சயம் தாலி கட்டி மேளம் கொட்டித்தான்". "ஆமா திடீரென்று கேட்கிறாய்?" "இல்ல நாங்கள் காதலிக்கி றோம் சிலவேளை எதிர்ப்புக்கள் வந்தால் ஓடிப் போக வேண்டிவருமே அது தான் கேட்டேன்" என்றான். ரூபன் அவ்வளவு நம்பிக்கையாய் கூறுவது கல்யாணிக்கு எதற்காக என்று தெரியாது. "சரி இனி எப்ப சந்திக்க முடியும்" என்று கல்யாணி கேட்டாள். (அவன் மனதுக் குள் நினைக்கிறான் எனக்கு பணம் தேவைப்படும் போது) "ஆ... சந்திப்பம் ஆமா எனக்கு ஒரு ஆயிரம் வேணும்" என்று கேட்டேன். கொண்டு வந்தியா? ஆ ... இருக்கு இந்தா ரூபன் என்றாள்.

அப்போது சமையல் அறையில் இருந்து வாசம் வந்தது. கல்யாணி தன் நினைவுகள் மறந்து மீண்டு வந்தாள். உடனே தனது கையடக்க தொலைபேசியில் ரூபனின் இலக்கத்திற்கு தொடர்பு கொண்டாள். அப்போது கல்யாணி "ரூபன் நான் உன்னை மாலை யில் சந்திக்க வேண்டும்". "ஏன் என்ன விஷயம் என்றான்". "இல்ல நான் நேரில் சொல்லுகிறேன் என்று தொடர்பை துண்டித்தாள்" கல்யாணி. இது தெரியாமல் ரூபன் "வரும்போது இரண்டா யிரம் கொண்டுவா" என்று என்று அவனும் தொலை பேசியை நிறுத்தினான். அவர்கள் சொன்னபடி வழமையான இடத்தில் இருவரும் அன்று மாலை யே சந்திக்கின்றனர்.

"என்ன கல்யாணி தலைபோற விஷயமா ஏன் அவசரம் வரச் சொன்னாய்" என்றான். "எனக்கு



அப்பா மாப்பிளை பார்த்துவிட்டார் எல்லாம் சரியாம்" என்றாள். "என்னை உங்களிடம் இருந்து பிரிக்கப் பார்க்கிறார்கள். நீங்கள் கொஞ்சம் கூட கவலைப்படாமல் இருக்கிறீர்கள்". "இல்லை நீ எப்படியும் என்னைத் தான் திருமணம் முடிக்கப் போகிறாய். பிறகென்ன நான் கவலைப்பட வேண்டும்" என்றான் சர்வசாதாரணமாக. "இந்தா பார் ரூபன் நீ இப்ப கூட கூப்பிடு நான் வாரன் உன்னோடு" என்றாள். அதற்கு அவன் " என்ன ஒன்றும் இல்லாமலா" அவள் விளங்காமல் " என்ன ஒன்றும் இல்லாமலா" என்று திரும்பிக் கேட்டான்.

இந்தா பார் கல்யாணி நான் உனக்கு விளங்கிற மாதிரியோ சொல்கின்றேன். இப்ப இருக்கிற சூழ்நிலைகளில் பொருளாதாரம் மிக முக்கியம். நானும் மற்றவர்களைப் போல் நல்லா உனைப் பார்க்க வேண்டும். எந்த நேரமும் வாழ்க்கையில் மகிழ்ச்சி யாகவும், சந்தோசமாகவும் இருக்க வேண்டும். அதுவே எனக்கு முக்கியம் என்றான். அதாவது பணம் தான் எனக்கு முக்கியம். நான் உன் வீட்டுக்கு அப்பா அம்மா வுடன் வந்து பெண் கேட்கின்றேன். ஆனால் சீதனம் முக்கியமாய் எதிர்பார்க்கப்படும். தற்போது உனக்கு உன் அப்பா பார்த்துள்ள மாப்பிள்ளைக்கு உன் அப்பா எவ்வளவு சீதனம் கொடுக்க சம்மதிக்கிறாரோ அதை விடக் கூடுதலாக எனக்குத் தேவை. உனக்கு நல்ல சர்ந்தர்ப்பம் ஏனென்றால் உனக்கு மனசுக்குப் பிடித்த மாப்பிளையும் கிடைச்சாச்சு. அதே நேரம் சீதனமும் குறைவாச்சு என்ன" என்று சொல்லி முடித்து திரும்பிப் பார்த்தான். கல்யாணி ஆடியே போய்விட்டாள். அந்த நிமிஷமே ரூபனின் வேசம் கலைக்கப் பட்டது. ரூபனின் மூஞ்சை மீது காறி உமிழ்ந்து விட்டுக் உடனே கூறினாள் "டேய் பொறுக்கி பயலே, பிச்சைக்கார நாயே காதல் என்ற பேரில் பெண்ணுங்க மனசை கெடுத்து கல்யாணம் என்கிற பெயரில் சீதனம் வாங்கி "சொறி" பிச்சை எடுத்து சீ.... இது கூட பகல் கொள்ளை என்று தான் சொல்ல வேண்டும். ஏண்டா டேய் உடம்பில் இரண்டு கை இருக்கு காலிருக்கு. உழைச்சு காப்பாத்துங்கட. நாங்கள் ஒன்றும் நகை வாங்கித்தா, உடுப்பு வாங்கித்தா என்று கரைச்சல் பண்ணமாட்டோம். கூலி வேலை செய்து நூறு ரூபாய் கையில் கொடுத்தாலும் குடும்பம் நடத்துவோம். எங்க வீட்ட காசு வாங்கி மோட்டார் சைக்கிள் குடி, குட்டி, என்று திரிவீங்க. இந்தா பார் இந்த நிமிஷத் தில் இருந்து நீ ஒரு பணப்பிணம். நான் உன்னோடு வாழ முடியாது போடா பிச்சைக்கார நாயே என்று கூறி விட்டு உடனே வீட்டுக்கு வந்தாள்.

வந்ததும் வராததுமாய் தகப்பனைப் பார்த்து "அப்பா அப்போது கூறினீர்கள் அந்த மாப் பிள்ளையைப் பற்றி அவர் சீதனம் கேட்டாரா என்றாள்.

"வந்ததும் வராததுமாய் ஏனம்மா கேட்கிறாய்" என்றார் தகப்பனார். "இல்லை சும்மா தான் என்றாள் கல்யாணி". ஆமாம்மா, அவர் கேட்டார் சீதனம் இல்லை உன்னை மட்டும் தான். அந்தப் பிள்ளை கூலி வேலை தான் செய்யிறாராம். ஆனால் குடிவெறி, வெற்றிலை கூட போடுவதில்லையாம். அவ்வளவு நல்ல பிள்ளை யாம்". "சரி நான் உன்னைத்தான் பார்த்துக் கொண்டி ருந்தேன். நான் புறோக்கர் வீடு வரையும் போய் மாப் பிள்ளை போட்டோ வாங்கி வாரன்" என்றார்" தகப்பனார். "அப்பா போட்டோ வேண்டாம் எனக்கு சம்மதம்" என்று சொல்லுங்கள் என்றாள். "சரி நான் போய் வாரேன்" என்றார் அவர். "அப்பா போட்டோ வேண்டாம் எனக்கு சம்மதம்" என்று சொல்லுங் கள் என்றாள். சரி நான் போய் வாரேன். நீ கதவை மூடு என்று கூறி அவர் வெளியில் இருக்கிறார். கல்யாணி கதவை மூடி விட்டு அறைக்குள் நுழைகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூடுபிடித்துள்ள.....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூடான் தனியொரு நாடாக இருந்த சமயத்தில், வடசூடான்-தென்சூடான் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சர்வதேச சமூகம் தென்சூடான் என்ற தனிநாட்டின் மீது வலிந்து திணித்த தீர்வுத் திட்டம் பொருத்தமானதாக இருக்கவில்லை என்பதே பிரச்சினைக்கு முக்கிய காரணம் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

தென்சூடான் நாட்டுக்குள் யுனிட்டி ஸ்ரேட் மாநிலத்தின் வளங்களைக் முறையாகப் பகிர்ந்து கொள்ளகூடிய ஏற்பாடுகளுடன் அதற்குச் சரியானதொரு அந்தஸ்து கிடைத்திருந்தால் ஜெனரல் பீற்றர் காடெட் தனித்துச் சென்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதே யாதார்த்தம்.

அது போன்று, முன்னாள் கிளார்ச்சியாளரையும் தேசிய இராணுவத்தில் இணைப்பதற்குரிய ஏற்பாடுகள் சரியாக இருந்திருக்குமானால் படைவீரர்கள் ஜெனரல் காடெட்டையோ அல்லது மாச்சரையோ பின் தொடர்ந்து சென்றிருக்க மாட்டார்கள்.

அனைத்துக்கும் மேலாக தென்சூடானுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுக்கும் நடைமுறையில் பல்வேறு இனக்குழுமங்களின் உரிமைகளை அங்கீகரிக்கக் கூடிய சரியானதொரு தீர்வுத் திட்டத்தை சர்வதேச சமூகம் முன் வைத்திருந்தால், இன்று தென்சூடானில் இனக்குழும பிரச்சினை பூதாகாரமானதாக தலைதூக்கியிருக்க மாட்டாது. ஆகவே பற்றியெரியும் தென்சூடானில் குருதியில் குளிக்கும் மக்களுக்கு சர்வதேசமே பொறுப்புச் சொல்லவேண்டியிருக்கிறது.

## பிணம்...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குள் முறைப்படி விசா அனுமதியுடன் புகும் பிரமுகர்களே அவமானப் படுத்தப்படுவதாலும், தேசிய பாதுகாப்பு போன்ற நொண்டிச் சாட்டுகளை முன்னிறுத்தி அவரிகளின் பயணங்கள் மட்டுப் படுத்தப்படுவதாலும், புலனாய்வுப்பிரிவினரால் அவர்கள் பின்தொடரப்படுவதாலும் மக்களின் அவலக்குரல்களை கேட்க வரு பவர்கள் சுற்றுலா விசா என்ற போர்வையிலேயே இங்கு வருகின்றனர். அப்படி தன் பாதுகாப்பின் பொருட்டும், மக்களின் அவலங்களை சுதந்திரமாக அறிய வேண்டியும் வந்த மகா தமிழ் பிரபாகரன் விசா விதிகளை மீறினார் என்று கைது செய்யப்பட்டு பின்னர் இந்தியாவுக்கே திருப்பியனுப்பப் பட்டுள்ளார்.

அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாள் என் போரின் கை கால்கள் முறிக்கப் பட்டு அவர்கள் நாட்டை விட்ட துரத்தப்படுவார்கள் என அரச அமைச்சர் ஒருவரே பகிரங்கமாக முழங்கும் போது எவ்வாறு ஊடகக்காரருக்குரிய விசா அனுமதியுடன் நாட்டுக்குள் நுழைய முடியும்? அவ்வாறு நுழைவது கொலைக் களத்துக்குச் செல்ல முன்னனுமதி பெறுவது போன்றதே. இதனா லேயே உண்மையின் குரலைத் தரிசிக்க நினைக்கும் ஊடகர்கள் சுற்றுலா விசா என்ற திரைக்குள் மறைந்து வரவேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஆனால் இந்த வழிக்கும் செக்மேற் வைத்திருக்கிறது மஹிந்த அன்ட் பிரதேர்ஸ் கொம் பனி". இதற்காக பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் குடியகல்வு, குடிவரவுத் திணைக்களம் மூலம் அரச அதிகாரம் தன்னுடைய இறுக் கத்தனத்தை காட்டத் தொடங்கியுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுத்தும் விதமாக புகைப்படம் எடுத்தமை, இராணுவ மையங்களை படம் பிடித்தமை என தமிழ் மகாபிரபார்கரனின் கைதை நியாயப்படுத்தும் அரசு, இதே உயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவமையங்கள் என்பவற்றைப் படம் பிடிப்பதோடு நின்றுவிடாமல் அங்கு உள்நுழைந்து ஆடிப்பாடும் சிங்களச் சுற்றுலாப் பயணிகளை ஏன் கைது செய்யவில்லை? அவர்கள் எடுத்தால் படம். மற்றவர்கள் எடுத்தால் பாதுகாப்புக்கு குந்தகமா?

பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்களே" இங்கும் பிணங்களே சாத்திரங்களைத் தின்கின்றன. பிறரைப் பிணமாக்க புதிய சாத்திரங்களையும் நெய்கின்றன.


## எலியும்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும். எனவே பிரபாகரனுக்கு அடுத்தபடியாக இன்னொரு தலைமைத்துவ விம்பமாக விக்னேஸ்வரன் எழுவதை அவர்கள் விரும்பவில்லை. விக்னேஸ்வரனின் சட்டம் தொடர்பான புலமையும், எதையும் நிதானமாக அணுகும் போக்கும் மெல்ல மெல்ல சர்வதேசத்தை தமிழர் பக்கம் திருப்பி, கத்தியின்றி இரத்தமின்றி தமிழீழம் பிறக்க வழிசெய்துவிடுமோ என்று அதிகாரம் அஞ்சியதாலேயே புதிய புலிகளின் முதல் குறியாக அவர் இலக்குவைக்கப்பட்டிருக்கிறார். இவ்வாறு தான் இலக்குவைக்கப் பட்டுள்ள விடயம் வடக்கு முதல் வருக்கும் தெரியும். இதனை அவர் பகிரங்கமாக மேடைகளிலும் கூறி வருகிறார். எனவே, இப்போது புதிய புலிகளை பின்னின்று இயக்கும் சூத்திரதாரிகள் யார் என்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டதால் அரசு என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறுகிறது.

சிலவேளைகளில் இந்தப் புதிய புலிகள் இப்போதைக்கு வெளியில் உலாவாமல் ஜெனிவா அமர்வுக்குப் பின்னரே கட்டவிழ்த்து விடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும் எப்போதும் எலிகள் புலிகள் ஆகிவிடமுடியாது. இதனை வரலாறு மீண்டும் ஒருமுறை உணர்த்தக் காத்திருக்கிறது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 602



**மேலிருந்து கீழ்**

1. விருந்துகளில் படைப்பர்.
2. பத்து என்பதைக் குறிக்கும்.
3. நில விரிப்பு.
4. பரந்த.
5. ஒரு திசையின் சுருக்கம்.
6. பூட்டான் தலைநகரம்.
8. நூறு செய்யுள் கொண்ட ஒரு பிரபந்தம்.
11. ஒரு தமிழ் மாதம்.
12. பெரியது அல்ல. 16
13. சந்திரன்.
15. ஒரு கோள்.
16. முன்னிலையில்.
17. நஞ்சு.
19. தாண்டு.

**இடமிருந்து வலம்**

1. சாதனம் அல்ல.
4. பதற்றம்.
7. பிச்சை.
8. ஒரு யோகம்.
10. பசுவை இப்படியும் அழைப்பர்.
12. அரி.
14. தூக்கிச் செல்பவன்.
16. பட்டயம்.
17. ஒரு கண்டம்.
18. கெண்டை மீன்.
19. சேர்.
20. எலும்பு.
21. இது திரண்டால் மிடுக்கு

அனுப்புபவர் பெயர்:.......................................................

விலாசம்:.......................................................

.......................................................

கையொப்பம்:.......................................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 602

சொற்சிலம்பம் போட்டி 602 ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் மற்றும் ஜனவரி 29ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 597க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.அமராவதி, 2.ருசி,3.தகனம், 4.திடம், 5.சபாநாயகர்,6.திடும், 9. கனல், 12.சகித்தல், 13.சருவம் 15.பல, 16.புதிய, 17. மது,18.வாலி,19.ஏரி,

**இடமிருந்து வலம்**

1.அருந்ததி, 5.சதி, 7.மசி, 8.கடப்பாடு, 9.கனம், 10.நாம், 11. வசனம், 13.சய, 14.திகில், 15.பருகல், 16.புலவர், 17.மதவாதி, 20.துல்லியம், 21.பரி,

### போட்டி இல. 596இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** செல்வி.கோபாலசிங்கம் தர்சிகா, கரப்புக்குத்தி, கனகராயன்குளம்.

**2ஆம் பரிசு** பிறோசியா ஷாஜஹான், இல: 233, துறையடி வீதி, காவத்தமுனை, வாகனேரி.

**3ஆம் பரிசு** செ. திருஞானலோசனி, இல: 15/4, கல்லூரி ஒழுங்கை, திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) சின்னையா செல்வராஜ்,
இல:9/5 ,B-10, மஜீத் பிளேஸ்,
அவிசாவெலை வீதி, வெல்லம்பிட்டிய.
(2) திருமதி மஞ்சுளா இராஜமுத்து,
பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி.
(3) சி. எழில்வேள்,
அரசினர் வைத்தியசாலை முழங்காவில்.
(4) வே. சரஸ்வதி,
அம்பன், குடத்தனை.
(5) ஷாஜானி கலீல்,
இல:66/17 (E),வாரண வீதி, திஹாரிய,
கலகெடிஹேன.
(6) வி.நிசாந்தினி,
குஞ்சுக்குளம், யோகபுரம் மத்தி, மல்லாவி.
(7) எஸ். செல்வநாயகம்,
இல:844, சித்திரகூடம், களுவாஞ்சிக்குடி.
(8) ச.நவரத்தினம்,
இல: 7-1/19, காலி வீதி, வெள்ளவத்தை.
(9) ம.சிந்துஜா ,
விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு, அல்வாய்.
(10) எஸ். பாக்கியநாதன்,
இல: 7, 57 ஆவது ஒழுங்கை,கொழும்பு-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை நாடகங்கள்

**காலத்தை வென்றவன்.(காச நோய்பற்றிய ஒரு பிரசார நகைச்சுவை நாடகம்.)**

(கடந்த வார தொடர்)

சித்திரபுத்திரன்:- புலோகத்திலே புபால சிங்கத்தின் கேஸை எடுத்துக் கொள்வதற்கு முன் வேறொரு பாவி, அவரது தண்டனையையும் வழங்கிவிட்டு மற்ற விடயங்களுக்கு ஏகுவோம்.

(வேறொரு பாவி ஒருத்தனை இரண்டு கிங்கிரர்களும் இழுத்து வருதல்)

யமன்:- இவன் செய்த குற்றங்கள்.

சித்திரபுத்திரன்:- தென்னவன் மன்னவா! இவன் ஒரு கலர்ப் படத் காரன் சீ கலப்படக் காரன். கோப்பியுள் புளியம் விதைத் தூளைக் கலந்தான். மிளகாய்த் தூளினுள், செங்கல் தூள் கலந்தான். மிளகுள், பப்பாசி விதை கலந்தான். அரிசியில் மண்ணைக் கலந்தான். மண்ணினுள் அரிசி கலந்தான். கொஞ்ச நஞ்சமா இவனின் கலப்பட நடவடிக்கை.

யமன்:- இதனை உரியவர்கள் ஒருவரும் கண்டுகொள்வதில்லையா?

சித்திரபுத்திரன்:- உரியவர்களை உரிய மாதிரிக் கவனித்தால் அவர்கள் கண்டுகொள்ளவே மாட்டார்கள்.

யமன்:- ம் புரிகிறது. புரிகிறது.



சித்திரபுத்திரன்:- கலப்படத் திலகம் நல்லெண்ணையுள் ஏதோ எண்ணைகள் எல்லாம் கலந்து சுத்தமான நல்லெண்ணை என்று கூறி விற்ற துரோவி.ச்சா துரோகி துரையே! மெய்யுள் பொய்யைக் கலந்தான். பொய்யுள் மெய்யைக் கலந்தான். இவன் செய்த பாவங்களை எப்படி எடுத்துரைப்பேன். துரையே எப்படி எடுத்துரைப்பேன் (என ராகத்துடன் பாடுதல்)

யமன்:- பாதகன்!

சித்திரபுத்திரன்:- அல்ல ..அல்ல பாதகன் அல்ல. படு பாதகன்.

யமன்:- இவனைக் கொண்டு சென்று கொதிக்கும் எண்ணையுள் போட்டு வதக்குங்கள்.

சித்திரபுத்திரன்:- ம் கொண்டு செல்லுங்கள். கொதிக்கும் நல்லெண்ணையுள். சுத்தமான நல்லெண்ணையைக் கொதிக்க வைத்து, அதனுள் தள்ளுங்கள். கலப்பட நல்லெண்ணை பாவிக்கவே பாவிக்கக் கூடாது. பாவிகள்.ம்..

விடயத்திற்கு வருவோம். இங்கை இங்கை நோட் பண்ணி வைச்சனான் (ஏட்டைப் புரட்டியவாறு). ஓகே!.... யமகா ,.. யம மகா ராசாவே. யமகாவும் யமனாக வருகிறது உண்டு.. பூலோகத்திலே,

யமன்:- பூலோகத்திலே

சித்திரபுத்திரன்:- பூநகர் எனும் ஊரிலே.

யமன்:- பூநகர் எனும் ஊரிலே.

சித்திரபுத்திரன்:- பூநகர் எனும் ஊரிலே உள்ள பூபாலசிங்கம், இன்னும் மூன்று மாதங்களில், தன் வாழ்நாள் கணக்கைக் கணக்காக முடித்து இவ்விடம் வரவேண்டும்.

யமன்:- கொண்டு வரவேண்டியது தானே! மூன்று மாதங்களின் பின் சென்று அழைத்து வரவேண்டியதுதானே! அதற்கு ஏன் இத்தகைய பெரிய பீடிகை போடுகின்றீர்?

சித்திரபுத்திரன்:- அங்கை அங்கைதான் பெரிய சிக்கலே இருக்கின்றது. அவர் இங்கு வந்து சேர்வதில் கொஞ்சம் இழுபறியை நாம் எதிர் நோக்க வேண்டியிருக்கும். அதனாலே நேரத்தோடு ஏதாவது ஐடியாபோட்டு. நடவடிக்கையிலிறங்கி, அவரது உசிரை இங்கு சேர்ப்பிக்க வேண்டும். அதற்கான அரேன்ஜ் மென்ற் - ஒழுங்குகள் உடனடியாக மேற் கொள்ளப்பட வேண்டும்.

யமன்:- என்ன? பூலோகத்திலிருந்து, பூபாலசிங்கம் இன்னும் மூன்றே மூன்று மாதங்களில் இங்கு வந்து சேர வேண்டும். அவனின் ஜாதகப்படி அவனின் உயிரைக் கவர்வதில் பல தொல்லைகள் குறுக்கிடும்.ம்.ஏன் சித்திர புத்திர இப்படிச் செய்தால் என்ன?

சித்திரபுத்திரன்:- ஆமாம் அப்படியே செய்யலாம்.

யமன்:- எப்படி?

சித்திரபுத்திரன்:- இப்ப நீங்கள் சொல்ல நினைத்தீர்களேஅப்படி.

யமன்:- ஏன் சித்திர புத்திராஅவனுக்குக் காசநோயைக் கொடுத்துவிட்டால் எப்படி?

சித்திரபுத்திரன்:- ஐடியா! பைன் ஐடியா. நல்ல திட்டம். தொலைந்தான் பூபாலு.புஸூ பாலு

யமன்:-இப்பொழுதே இரண்டு கிங்கிரர்களை ஏராளமான காச நோய் கிருமியுடன் பூலோகத்திற்கு, பூபாலசிங்கத்திடம் அனுப்பி வையுங்கள்.

சித்திரபுத்திரன்:- ஓகே!...ஏராளமான கிருமி தேவையே இல்லை.. கொஞ்சம் போதும். அவை பல்கிப் பெருகி, ஒன்று நூறாகி ஆளை அப்படியே குளோஸ் ஆக்கிவிடும். அதுவும் காசக் கிருமியை இங்கிருந்து கொண்டு செல்ல




வேண்டிய அவசியமே இல்லை. லொக்கு லொக்கு என்று இருமி துப்புகின்ற ஒரு காச நோயாளி பயணிக்கின்ற 'சீரீபி' பஸ்ஸிலை ஏற்றிவிட்டாற் போதும் பிறகென்ன? ம்..ம்..இப்பொழுதே செல்லுங்கள். காச நோய்க் கிருமிகளைப் பூபாலை நோக்கிச் செலுத்துங்கள். வெற்றி உங்களது ஆகட்டும்.

கிங்கிரர்கள்: அப்படியே செய்கின்றோம்

யமன்:- சென்று வாருங்கள். வெற்றியுடன் திரும்பி வாருங்கள்.

(திரை இருந்தால் திரை மூடுதல். அல்லது மெல்ல மெல்ல மேடையிலிருந்து பாத்திரங்கள் வெளியேறலாம்.) {யாராவது எங்கே போகின்றீர் கள் என்று கேட்கவா போகின் றார்கள்?}

***



**காட்சி 2**

**இடம்: பூலோகத்தில் புபாலசிங்கம் வீடு.**

**பாத்திரங்கள்: புபாலசிங்கம், அவரின் தந்தை முத்துச்சாமி, Dr. இராஜேந்திரன், கிங்கிரரகள் இரண்டு பேர.**

**(புபாலசிங்கம் கதிரை ஒன்றில் அமரந்தவாறு பாட்டு ஒன்றை முனுமுனுத்துக் கொள்ளுதல். உள்ளிருந்த வண்ணம் பூபாலசிங்கம் இருமிக் களைத்தல்)**

முத்துச்சாமி: ம்அவன் இருமத் தொடங்கி விட்டான். இனி என்ரை பாட்டும் சரி பயனும் சரிஎன்ரை தேவாங்கு வருகுது. ..சிலபேற்றை சயிக்கிள நாலு காத தூரம் வரேயிக்கை ஒயில் காணாத செயின் கொறிக்கிற மாதிரி..அவன்ரை இருமல்.. என்ர தவப் புதல்வன். பூவாலுபூபாலு வரும் பின்னே இருமல் சத்தம் வரும் முன்னே..

பூபாலு: (இருமிக் களைத்து வந்து கொண்டே) ஐயோ! என்னமாதிரிக் குண்டா இருந்த நான்இப்ப தேஞ்சு தேஞ்சு சிறு வண்டா வந்திட்டன். ஒரு பயல் பார்த்து ஏண்டா இப்படியாயிற்றே என்று கேட்கவே மாட்டாங்கள் முந்தி பணம் இருந்து வந்தாங்கள். இப்ப பணம் போயிற்று வரவே மாட்டாங்கள். எனக்கு வருத்தம் வந்த பிறகு பூசாரிமாருக்கும், பேய் ஆட்டுறவங்களுக்கும் குடுத்துக் குடுத்தே அப்புவின்ரை பணம் கரைஞ்சு போச்சுது. என்ரை வருத்தத்திற்கு அள்ளியள்ளி இறைச்சு அப்புவின்ரை வட்டி குட்டி வாங்கிச் சேர்த்த பணம் முற்றாக வற்றுகிற நிலை (இருமி தலையிற் தட்டிய வாறு..) இந்தக் கோதாரி விழுந்த இருமலாலைதான் எல்லாமே வந்தது. ஒண்டு ரெண்டு மாதமா இந்த இருமல் படுத்துகிற பாடு..

முத்துச்சாமி: உனக்கு இருமல் வராமல் வேறையென்ன வரும்? இல்லைக் கேக்கிறன். ஏம சாமமெண்டு இல்லை.பனி வழிய திரியிறது. செக்கன் சோதேர்ட் சோ படம் அவருக்கு.....

புபாலு: இஞ்சைநான் சாமம் வழிய திரியிறதைப் பற்றி நீ கதைக்காதை.

முத்துச்சாமி: அப்ப ஹாக்ஹா எண்டு இருமிக்கொண்டு எனக்குக் கிட்டை நிக்காதை அங்காலை போ.

புபாலு: இருந்து பார் நீ பழிக்கிறாய். உனக்கும் இருமல்வருகுதோ இல்லையோ எண்டு பார்..

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு அவசரபணத்தேவை உள்ளதா?

**SINGER FINANCE**
நாடுங்கள்

உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்புக்கு
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
பிருந்தன் 078 5 000 917

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

# யாழ்நகரில்...

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
## ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்
இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!

எமது குழுவினர் யாழ்நகரில்...
2014 ஜனவரி 5ம் திகதி
**இன்று மட்டும்**
காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
**ஸ்ரீ தனலஷ்மி யந்திரங்கள்**
விற்பனைக்குண்டு






**Free Gift**
**Shiv-Hanuman Pendant & Idol**
கையிருப்பு உள்ளவரை மட்டுமே...
பதிவுக்கு இன்றே முந்துங்கள்!

Sri Lanka **0777 614 186**
flex 4, IBC Road, Wellawatte, Colombo 06.
மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்!
CAPTAIN TV MEGA TV JAYA TV
FLEX Graphic

University of Mysore
In Sri Lanka







## ENROLL NOW !
**2014 ADMISSIONS OPEN**

- Global Recognition
- Affordable Fees
- On Campus Labs

**ALL 3 YEARS IN SRI LANKA**
- 1st University in India to be awarded the 5 Star status.
- The 6th oldest university in India.
- Established in 1916 and stands magnificent at 98 years.
- Top Ranking University in the Association of Common wealth Universities.

Your Opportunities:

**BSc**
- ★ Biotechnology, Biochemistry & Microbiology
- ★ Chemistry, Botany & Food Science
- ★ Chemistry, Geology & Environment Science

**BSc**
- ★ Math, Statistics & Computer Science
- ★ Math, Statistics & Physics

**BA**
- ★ Psychology, Sociology & Criminology
- ★ English Literature, Journalism & Political Science

Outreach Campus Since 2002
**Spectrum Institute of Science & Technology**
SPECTRUM HUMAN CAPITAL DEVELOPMENT
190, Galle Road, Colombo - 4.
(+94) (011) 2554848, (+94) (011) 2504742
info@spectrumcampus.net
www.spectrumcampus.net
Hot Lines:
077 2278927
075 5459588

# VACANCY
## ASSISTANT SHOWROOM MANAGER (MALE) - COLOMBO 03

- Age below 30 years
- Proficiency in MS Office Package
- Should have a strong personality with very good interpersonal skills
- Fluency in Spoken & Written English
- Ability to work with positive attitudes
- Salary negotiable

max adz

**Please send your CVs to info@crafts.lk within one week.**
250/1/09, 1st Floor, Liberty Plaza,
R.A De Mel Mawatha, Colombo - 03. Phone : 0766060790

# STUDY MBBS INDIA
2014 ஆண்டிற்கான நுழைவுகள் ஆங்கில மொழியில்



RECOGNIZED BY: SLMC, Europian Medical Association, Medical Council of India, GMC-UK, ECFMG-USA & WHO
இந்தியா - JJM Medical College
Affiliated to Rajive Ghandhi University
சீனா - Dalian Medical University
ஐரோப்பா - Georgia
Tbilisi State Medical University
கட்டணம் US$ 4500

பெங்களூர் பல்கலைக்கழகம்
**Programs After A/L's**
- B.Sc. - Biotech/Micro/Genetics
- Business Management
- B.Sc. - IT ■ B.Com
- Bachelor of Engineering
- B.A. - Journalism/English/Psychology
- B.Sc. - Fashion & Apparel Design
- B.Sc. - Medical Lab Technology
- B.P.T. - Physiotherapy
- BE - Bachelor of Engineering
- Pre-Medicine Course available for students without A/L

ICAM கல்வி நிறுவனம்
17 A, Kassapa Road, Colombo 05
0773-039666 / 011-2593933 / 0773-022177 | www.icam.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org







# தென்னிந்திய யாத்திரை

**ஆரம்பம் 27.01.2014**

**இது தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய இரண்டு மாநிலங்களுடான யாத்திரை**

**நிறைவு 10.02.2014**




இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை நலன்கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.

**தரிசிக்கும் ஆலயங்கள் :** திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் தேவாரம் பாடிய திருத்தலங்களையும் தரிசிக்கலாம். மலைக்கோட்டை விநாயகர், காஞ்சி காமாட்சி, திருப்பதி, ஏகாம்பரேஸ்வரர், வரதராஜப்பெருமாள், திருத்தணி, பழனி, அலமேலுமங்கா, திருச்செந்தூர், அழகர்கோயில், திருப்பரங்குன்றம், மதுரைமீனாட்சி, சுந்தரேஸ்வரர், இராமேஸ்வரம், தஞ்சாவூர், கூடலழகர்பெருமாள், மதனகோபால சுவாமி, கறுப்புசாமி, பழமுதிர்ச்சோலை, சந்திரன்திங்களூர், சுவாமிமலை, ஸ்ரீரெங்கம், திருவானைக்காவல், வடபழனி, கபாலீஸ்வரர், பார்த்தசாரதி, கிரிவலம், திருவெண்ணாமலை, காளகஸ்திரி, வேலூர் பொற்கோயில், ரமணமகரிஷி ஆச்சிரமம், கீழ்பெரும்பள்ளம்கேது, திருக்கடையூர் அபிராமி, திருநள்ளாறு சனிபகவான், அனந்தமங்களம் ஆஞ்சநேயர், கோபால கிருஷ்ணர், சூரியன்கஞ்சனூர், சுக்கிரன், உப்பிலியப்பன், ஆலங்குடிவியாழன் இவற்றுடன் **தேவாரத்திருத்தலங்களான :** திருமூக்கீச்சுரம், திருவெறும்பூர், திருநெடுங்களம், திருவாசி, திருப்பைஞ்சீலி, ஐயர்மலை, திருசங்கோய்மலை, திருமாந்துறை, திருமழபாடி, திருப்பழுவூர், திருவையாறு, திருப்பழனம், திருவேதிக்குடி, திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, கும்பேஸ்வரர், குடந்தை கீழ்க்கோட்டம், கொட்டையூர், திருச்சோற்றுத்துறை, திருக்கறுக்காவூர், திட்டை, திருவலஞ்சுழி, பட்டீச்சரம், சக்திமுற்றம், தோணியப்பர், திருவெண்காடு, புள்ளிருக்குவேலூர், சிதம்பரம், நெல்லையப்பர் ஆலயங்களையும் தரிசிக்கலாம். இதில் 70 ஆலயங்கள் போடப்பட்டிருந்தாலும், நீங்கள் வரும் நேரத்தைப் பொறுத்தே ஆலயங்கள் காண்பிக்கப்படும். 50 க்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

**சென்னையில் 1 நாள் சொப்பிங். அன்று உணவு மட்டும் தங்கள் பொறுப்பு. மற்றவை ஒழுங்கு செய்து தரப்படும்.**

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் குபாவிற்கு எமது சேவை :**

இருவழி விமான டிக்கட், மூன்று வேளை உணவு, காலை காப்பி பலகாரம், மத்தியானம் சுத்தமான சைவ உணவு சாதம், 4 மணிக்கு காப்பி, ரீ - இரவு காப்பி பலகாரம். யாத்திரை முடியும் வரை A.C. வாகன வசதி. தங்குமிடங்கள் 2 பேருக்கு கட்டில் மெத்தை, சுடு தண்ணீருடன் கூடிய (குளியல் அறையுடன் கூடிய ரூம்கள்) எடுத்து தங்க வைக்கப்படுவீர்கள். நாள் ஒன்றிற்கு ஒவ்வொருவருக்கும் 1 லீற்றர் மினரல் வாட்டர். இவை அனைத்தும் எமது சேவை.

**முக்கிய கவனிப்பு :** பாஸ்போட் இல்லாதவர்கள் பாஸ்போட் எடுக்க கொழும்பு வந்தால் காரியாலயம் அழைத்துச் சென்று அதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும். எமது யாத்திரையில் கலந்துகொள்பவர்களுக்கு மட்டும் இந்த சேவை. (செலவுகள் தங்கள் பொறுப்பு) குறிப்பிடும் ஆவணங்களுடன் நேரில் கொழும்பு வரவேண்டும்.

கட்டண விபரம் கேட்டு அறிந்துகொள்க:

## கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்

**Office : City Center Shopping Complex, 3rd Floor,**
**No. 59, C 3/3, Sea Street, Colombo - 11.**
**Tel : 0777 680102, 0724 222989, 0777 362154 Web : www.sridevipilgrims.com**

**சென்ற யாத்திரைகளில் கலந்துகொண்டவர்கள்**

| மட்டக்களப்பில் | திருகோணமலை | யாழ்ப்பாணத்தில் |
|---|---|---|
| கே. ராஜகோபால் | ரீ. சிவபாலன் | எம். குமாரசிங்கம் |
| Tel : 065 3653719 | Tel : 077 7293271 | Tel : 021 3206314 |
| | | 075 6144476 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஜனவரி 08 ஆம் திகதி வெளியிடப்பட்டது.